## அத்தியாயம் 1

# பொருளாதாரச் செயலாற்றம், தோற்றப்பாடு, கொள்கைகள்

### 1.1 பொதுநோக்கு

- ***2004 இல் இலங்கையின் பொருளாதாரம் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.4 சதவீதமான ஆண்டு வளர்ச்சியைப் பதிவு செய்தது.*** 5 சதவீதத்திற்கும் மேலான வளர்ச்சியானது, பன்னாட்டு எண்ணெய் விலைகளின் திடீர் உயர்ச்சி, ஆண்டின் தொடக்கத்தில் காணப்பட்ட கடுமையான வரட்சி, ஆண்டின் பின்னரைப் பகுதியில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் இறுதியாக நிகழ்ந்த சுனாமி அனர்த்தம் போன்றவற்றால் நாடு இவ்வாண்டில் எதிர்கொள்ள வேண்டியிருந்த மோசமான பல தாக்கங்களுக்கு எதிராக தாக்குப்பிடிக்கக் கூடியதாக இருந்த பொருளாதாரத்தின் ஆற்றலை பிரதிபலிப்பலிப்பதாக இருக்கின்றது. இவ்வளர்ச்சிக்கு, ஏற்றுமதிகள், நுகர்வு மற்றும் முதலீடு என்பன வற்றிலான வலுவான வளர்ச்சியும் தொடரும் யுத்தநிறுத்தமும் உதவியளித்தன. எனினும், இவ்வளர்ச்சி வீதமானது இலங்கையில் வறுமையையும் தொழிலின்மையையும் உறுதியாகக் குறைப்பதற்கு தேவையான வளர்ச்சி வீதமான ஏறத்தாழ 6-8 சதவீதத் திற்கும் மிகக் குறைவாகவே காணப்பட்டது. மேலும் இலங்கையின் தலைக்குரிய மொ.உ. உற்பத்தி முதற் தடவையாக ஐ.அ.டொலர் 1,000 இனை விஞ்சியதன் காரணமாக மேல் மத்திய வருமானம் பெறும் நாடென்ற நிலையினை நோக்கிய அதன் பயணத்தில் புதிய சவால்களை எதிர்நோக்கும் நிலையில் நாடு காணப்படுகின்றது.


- **2004 இல் முதலீடு மேம்பட்ட வேளையில் சேமிப்புக்கள் உறுதியாகக் காணப்பட்டன.** முதலீடு/ மொ.உ.உற்பத்தி விகிதம் 2003 இன் 22.1 சதவீதத்திலிருந்து 25 சதவீதத்திற்கு மேம்பட்டமைக்கு அதிகரித்த தனியார் துறை முதலீடுகளே முழுமையான காரணமாகும். 2004 இல் உள்நாட்டுச் சேமிப்புக்கள்/ மொ.உ. உற்பத்தி விகிதம் 15.9 சதவீதமாக அமைந்து 2003 இன் அதே மட்டத்தில் காணப்பட்டது. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானத்தினை உள்ளடக்கிய தேசிய சேமிப்புக்கள் மொ.உ.உற்பத்தியின் 21.6 சதவீதத்தில் மாற்றமின்றிக் காணப்பட்டன. இது சேமிப்புக்கள்-முதலீட்டு இடைவெளி விரிவடைய வழிவகுத்ததுடன், இவ்விடைவெளி சென்மதி நிலுவையின் விரிவடைந்த நடைமுறைக் கணக்குப் பற்றாக் குறையினால் பிரதி பலிக்கப்பட்டவாறு வெளிநாட்டுச் சேமிப்புக்களின் அதிகரித்த பயன்பாட்டினூடாக நிதியிடப்பட்டது. எனினும் இம் மட்டங்களிலான சேமிப்பு மற்றும் முதலீடுகள் வளர்ச்சியையும் வாழ்க்கைத் தரத்தையும் கணிசமாக உயர்த்துவதற்கு போதுமானதாக இல்லாதிருப்பதனால் சேமிப்புக்களையும் முதலீடுகளையும் ஆகக் குறைந்தது மொ.உ. உற்பத்தியின் 30 சதவீத அளவிற்காவது அவசரமாக உயர்த்துவதற்கு ஒருங்கிணைந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். உயர்ந்த ஏற்றத் தாழ்வற்ற பிராந்திய வளர்ச்சியை ஊக்குவிப்பதில் மிகுந்த பலனளிக்கக்கூடிய இன்றியமையாத உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதற்கு அதிகரித்தளவில் முதலீடுகளை வழிப்படுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது.

- **பணிகள் மற்றும் கைத்தொழில் துறைகளில் காணப்பட்ட ஆரோக்கியமான அபிவிருத்திகள் 2004 இன் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களித்த அதேவேளையில், மோசமான வானிலை நிலைமைகளின் காரணமாக வேளாண்மைத்துறை பின்னடைவினை எதிர்நோக்கியது.** 2004 இல் பணிகள் துறை 7.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை, சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்கள், போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் மற்றும் நிதியியல். உண்மைச்சொத்து மற்றும் வியாபாரப் பணிகள் என்பனவற்றில் ஏற்பட்ட வளர்ச்சியை முக்கியமாக பிரதிபலித்ததுடன் பொதுவான வளர்ச்சியிலும் 77 சதவீதத்திற்கு பங்களித்தது. வலுவான வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுக் கேள்விகள் கைத்தொழில் துறை 5.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைய உதவியதுடன் பொதுவான வளர்ச்சியில் 25.7 சதவீதத்திற்கும் பங்களித்தது. 2004 இல் வேளாண்மைத்துறை 0.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

- **வேளாண்மையின் நிலைத்திருக்கக்கூடிய வளர்ச்சிக்கு பெருந்தோட்டம் மற்றும் பெருந் தோட்டமல்லா துறைகள் இரண்டிலுமிருந்து அதிகரித்த பங்களிப்புக்கள் தேவைப்படுகின்றன.** பெருந்தோட்டத்துறை அதன் உற்பத்தியாக்கத்தையும் பயிர் பன்முகப்படுத்தலையும் மேலும் அதிகரித்தல் வேண்டும். பெருந்தோட்டமல்லா சிறு உடமையாளர் துறையில், நிதியினையும் நிலப்


வரைபடம் 1.1

**உண்மை மொ.உ.உற்பத்தியின் வளர்ச்சியும் பணவீக்கமும்**




வரைபடம் 1.2

**சேமிப்பும் முதலீடும்**




பயன்பாட்டினையும் அடைவதிலுள்ள தடைகள் அகற்றப்பட வேண்டியுள்ள அதேவேளையில் விரிவாக்கற் பணிகள், மேம்பட்ட புதிய பயிர் வர்க்கங்கள் மற்றும் உற்பத்தியாக்கத்தினை அதிகரிக்கின்ற மற்றைய வழிமுறைகள் என்பன வற்றினூடாக வழிகாட்டல்கள் வழங்கப்பட வேண்டும். வேளாண்மை உற்பத்தி யாக்கத்தினை உயர்த்துவது, முக்கியமாக, உயர்ந்த விளைச்சல்தரும் வர்க்கங்களை அறிமுகப் படுத்தல், சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் செயற்கை சூழலில் அமைக்கப் பட்ட வீடுகளில் பயிர் செய்தல் போன்ற புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தல், ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திகளை பின் பற்றுதல் பன்னாட்டு ஒத்துழைப்பினூடாக முன்னேற்றங்கண்ட பயிர்ச்செய்கை நடைமுறைகளை பயன் படுத்துதல், மற்றும் உள்ளீடுகளைப் மிகத் திறன் வாய்ந்த முறையில் பயன்படுத்தல் என்பன வற்றிலேயே தங்கியுள்ளது.


- **வேளாண்மைத் துறைக்கு தொடர்ந்தும் ஆதர வளிக்கும் விதத்தில் நீர்ப்பாசன உட்கட்டமைப்பின் அபிவிருத்திகள் விரைவு படுத்தப்படல் வேண்டும்.** குளங் களையும் நீரோட்டப் பகுதிகளின் முகாமைத்துவத்தையும் அபிவிருத்தி செய்வதிலும் புத்தாக்கம் செய்வதிலும் அண்மையில் ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சி இத்துறைக்கு பயன்மிக்க தாக்கங்களைக் கொண்டுவரும். தொடர்ச்சியான அபிவிருத்திகள் வரட்சி வட்டங்களின் மோசமான எந்த ஒரு தாக்கத்தினையும் இத்துறை வெற்றி கொள்ள உதவ முடியும்.

- **வேளாண்மையில், குறிப்பாக பழுதடையக் கூடிய பயிர்களில் அறுவடைக்குப் பின்னர் ஏற்படுகின்ற இழப்புக்கள் தொடர்ந்தும் மிக உயர்வாக உள்ளன.** அத்தகைய இழப்புக்கள் உற்பத்தியில் ஏறத்தாழ 30-35 சதவீதமாக இருப்பதாக மதிப்பிடப் பட்டுள்ளதுடன் இது உற்பத்தியாளர்களுக்கு வருமானக் குறைப்பையும் நுகர்வோருக்கு உயர்ந்த விலைகளையும் தோற்றுவிக்கிறது. ஆகவே பொருத்தமான பொதியிடல், மேம்பட்ட போக்கு வரத்து வசதிகள் மற்றும் ஏனைய வழிமுறை களினூடாக இழப்புக்களைக் குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமானதாகும்.

- **2004 இல் பன்னாட்டு எண்ணெய் விலைகள் முனைப்பாக அதிகரித்து இலங்கையின் சராசரி மசகெண்ணெய் இறக்குமதி விலையை 2003 இன் பீப்பாய் ஒன்றிற்கான ஐ.அ.டொலர் 29 இலிருந்து 2004 இல் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 37 இற்கு அதிகரிக்க செய்து எண்ணெய் இறக்குமதிச் செலவில் கிட்டத்தட்ட ஐ.அ.டொலர் 372 மில்லியன் அதிகரிப்பினை விளைவித்தது.** இது, சென்மதி நிலுவை மோசமடைவதற்கும், எண்ணெய் விநியோகத்தர்களுக்கான உதவுதொகைக் கொடுப்பனவில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பின் காரணமாக இறை நிலைமை மோசமடைவதற்கும், பன்னாட்டு விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பினை பிரதிபலிக்கும் விதத்தில் உள்நாட்டு விலை முழுமை யாகச் சீராக்கம் செய்யப்படாமையின் விளைவாக எரிபொருளின் பாவனையில் காணப்பட்ட தொடர்ச்சியான வினைத்திறனின்மைகளுக்கும் கார ணமாக விளங்கியது. அதிகரித்த செலவினத்தினை முதலீட்டினை கணிசமானளவிற்கு அதிகரிப்பதற்கு பயன்படுத்தியிருக்க முடியும். எடுத்துக்காட்டாக தென்பகுதி கடுகதிப்பாதை போன்ற பாரிய முதலீட்டுச் செயற்றிட்டங்களின் முழுச் செலவினை ஈடு செய்திருக்கலாம்.

- **2003 ஆம் ஆண்டு முழுவதும் பெரும்பாலும் சாதகமாகக் காணப்பட்ட பணவீக்கம், வரட்சி மற்றும் அதிகரித்த எண்ணெய் விலைகளின் கார**

வரைபடம் 1.3
**இறக்குமதிகளும் ஏற்றுமதிகளும்**




வரைபடம் 1.4
**வர்த்தக நிலுவை, நடைமுறைக் கணக்கு நிலுவை, மற்றும் திரண்ட நிலுவை**





**ணமாக 2004 இல் அதிகரிக்கத் தொடங்கி செலவினால் உந்தப்பட்ட உயர் பணவீக்கத்திற்கு வழிவகுத்தவேளை நிரம்பலிலான அதிகரிப்பு மற்றும் முக்கியமாக உதவுதொகைகளின் காரணமாக இறை விரிவாக்கத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன கேள்வியினால் உந்தப்பட்ட பணவீக்கத்திற்கு இட்டுச்சென்றன.** கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட ஆண்டுச் சராசரி பணவீக்க வீதம் 2003 இன் 6.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2004 இல் 7.6 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. இலங்கை நுகர்வோர் விலைச்சுட்டெண்ணும் 2004 இல் 7.9 சதவீதத்திற்கு அதிகரிப்பொன்றைக் காட்டியது.


- **சென்மதி நிலுவையிலுள்ள வர்த்தக மற்றும் நடைமுறைக் கணக்குகள் பற்றாக்குறைகளை பதிவு செய்தன.** உயர்ந்த பன்னாட்டு விலைகளினால் உந்தப்பட்டு 20 சதவீதம் கொண்ட உயர்ந்த இறக்குமதி வளர்ச்சியானது ஏற்றுமதியில் ஏற்பட்ட 12 சதவீதம் கொண்ட வளர்ச்சியையும் தொழிலாளர் பணவனுப்பலில் ஏற்பட்ட 11 சதவீத அதிகரிப்பினையும் விஞ்சிக் காணப்பட்டது. உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன வற்றிலிருந்தான நிகழ்ச்சித் திட்டக் கடன்கள் எதிர் பார்க்கப்பட்டதைக் காட்டிலும் குறைவடைந்து காணப்பட்டமையினால் மூலதன மற்றும் நிதியியல் கணக்குகளில் காணப்பட்ட மிகைகள் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையினை ஈடுசெய்யப் போதுமானதாக இருக்கவில்லை. எனவே, திரண்ட சென்மதி நிலுவை ஐ.அ.டொலர் 205 மில்லியன் கொண்ட பற்றாக்குறையினைத் தோற்றுவித்ததுடன் பயன்தரு செலாவணி வீதம் (24 நாணயங்கள் கூடையை அடிப்படையாகக் கொண்ட, பெயரளவு மற்றும் உண்மை நியதிகளில் முறையே 11 சதவீதத்தாலும் 1.1 சதவீதத்தினாலும் பெறுமானம் தேய்வடைந்தது.

- **பொருளாதாரத்தினை மெதுவடையச் செய்யும் அச்சுறுத்தலாக விளங்கிய பன்னாட்டு மற்றும் உள்நாட்டு திடீர் தாக்கங்களின் பின்னணியில் 2004 இல் இறைக் கொள்கையினை மேற்கொள்வது சவால் நிறைந்ததாகக் காணப்பட்டது. மத்திய அரசாங்கத்தின் திரண்ட இறைப்பற்றாக்குறை 2003 இன் மொ.உ.உற்பத்தியின் 8.0 சதவீதத்திலிருந்து 8.2 சதவீதத்திற்கு அதிகரித்தது.** 2004இல் மத்திய அரசாங்கத்தின் பற்றாக்குறை மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் தொழிற்பாட்டு இழப்புக்கள் என்பன இணைந்த அரச துறைப் பற்றாக்குறை 2003 இன் 7.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2004 இல் மொ.உ.உற்பத்தியில் 8.4 சதவீதமாகக் காணப்பட்டது. இதற்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தினதும் இலங்கை மின்சபையினதும் தொழிற்பாட்டு இழப்புக்களே முக்கிய காரணமாகும். இப்பின்னணியில் அரசாங்கம் அந் நிறுவனங்களின் தொழிற்பாட்டு இழப்புக்களைக் குறைப்பதற்காக 2004 இல் எரிபொருள் விலைகளை மேல்நோக்கி திருத்தியது. இவ்வாறிருப்பினும் கூட, பன்னாட்டு விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பினால் ஏற்படுகின்ற தாக்கம் அரச துறையின் மீது தொடர்ந்தும் பாரிய சுமையை ஏற்படுத்தி வருகின்றது. வெளிநாட்டு நிதியிடலின் பற்றாக்குறை காரணமாக அதிகரித்த அரச துறைப் பற்றாக் குறைகள் உள்நாட்டு மூலங்களிலிருந்தான கடன்பாடுகளூடாக பெருமளவிற்கு நிதியிடப்பட்டன. எனினும், 2004 இல் மொ.உ. உற்பத்தியின் சதவீதமாக மொத்த அரச படுகடன் 2003 இன் 105.8 சதவீதம் மற்றும் 107.9 சதவீதத்திலிருந்து 2004இல் முறையே 105.5சதவீதத்திற்கும் 107.5 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தமைக்கு 2004இல் படுகடன் இருப்பில் ஏற்பட்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் பெயரளவு

வரைபடம் 1.5
**அரசிறை, செலவினம், வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை**




வரைபடம் 1.6
**அரசபடுகடன்**





மொ.உ.உற்பத்தியில் ஏற்பட்ட உயர்ந்த அதிகரிப்பே காரணமாகும்.

- **அரசிறைச் செயலாற்றத்தினை மேம்படுத்துவதற்கும் செலவினத்தினை ஒழுங்குமுறைப்படுத்துவதற்குமாக அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்படுகின்ற தொடர்ச்சியான வழிமுறைகளுடன் இறைத்திரட்சி செயற்பாடு 2004 இல் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது.** இவை, வரி நிருவாகத்தினை வலுப்படுத்துதல், பொருளாதாரக் பணிக் கட்டணத்தினை அறிமுகப்படுத்தல், நிர்வகிக்கப்பட்ட விலைகளை திருத்தியமைத்தல் மீண்டெழும் செலவினங்களை ஒழுங்குமுறைப்படுத்தல், முக்கியத்துவமிக்க தொழில்முயற்சிகள் முகாமைத்துவ முகவராண்மையினை நிறுவுவதன் மூலம்அரச தொழில் முயற்சிகளை பலப்படுத்தல், நிருவாக சீர்திருத்த குழு மற்றும் நிருவாகத் திற்கான தேசிய சபை என்பனவற்றை நிறுவுதல் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கியிருந்தன. மேலும் இறை முகாமைத்துவ பொறுப்பாண்மைச் சட்டத்தின் அறிக்கையிடும் தேவைப்பாடுகள் பின்பற்றப்பட்டமை மற்றும் தேசியக் கொள்வனவு முகவராண்மை ஏற்படுத்தப்பட்டமை என்பனவற்றின் மூலம் அரசாங்க கொள்வனவுகளின் வெளிப்படையான தன்மை மேலும் வலுப்படுத்தப்பட்டது.


- **நாணயக் கொள்கையானது பணவீக்க அழுத்தங்களை கட்டுப்படுத்தும் அதே வேளையில் பொருளாதார வளர்ச்சிக்கு உதவி வழங்குவதனை நோக்காகக் கொண்டிருந்தது.** நாணயக் கூட்டுக்களிலான வளர்ச்சி வீதம் குறிப்பாக 2004 இன் நடுப்பகுதிக்குப் பின்னர் விரும்பத்தக்க மட்டத்திற்கு மேலாக உயர்வடைந்தமைக்கு தனியார் மற்றும் அரச துறைகள் இரண்டிற்குமான கொடுகடன் உயர்ந்தளவில் விரிவடைந்தமையே முக்கிய காரணமாகும். 2004 இல் ஒதுக்குப்பணம் 21 சதவீதத்தினால் உயர்வடைந்தமைக்கு, மோசமான சென்மதி நிலுவை விளைவுகளை பிரதிபலிக்கின்ற விதத்தில் மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் வீழ்ச்சியினைப் பதிவு செய்தமையினால் அதன் தேறிய உள்நாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட விரிவாக்கமே முழுக் காரணமாக அமைந்தது. இதனைக் கவனத்திற் கொண்டு மத்திய வங்கி அதன் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை 2004 யூனிலிருந்து மிகத் தீவிரமாக நடைமுறைப்படுத்தியதுடன் 2004 நவெம்பரில் அதன் கொள்கை வீதங்களை உயர்த்தியதன் மூலம் நாணயக் கொள்கை நிலையினை இறுக்கமாக்கியது.

- **ஏப்பிறலில் நடைபெற்ற தேர்தலின் பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் பிரதேச வாரியான ஏற்றத் தாழ்வற்ற வளர்ச்சியையும் அதேபோன்று கிராமியத்துறை மற்றும் சிறிய, நடுத்தர துறைகளின் அபிவிருத்தி என்பனவற்றின் மீது மிகுந்த கவனத்தை செலுத்துகின்ற வளர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் மீது, புதிய நெறிப்படுத்தல்களை உருவாக்கியது.** 2004 யூலையில் வெளியிடப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் பொருளாதார கொள்கை கட்டமைப்பில் குறிப்பிடப்பட்ட தத்துவங்களுக்கேற்ப அமைப்பியல் சீர்திருத்தங்கள் 2004 இல் தொடர்ந்தும் இடம் பெற்றன. இது தொடர்பாக பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குகின்ற முக்கியத்துவமிக்க பல தொழில்முயற்சிகளின் வினைத்திறனை அரச துறை உடமைகளுக்குள்ளாக மேம்படுத்துவதற்காக நிறுவப்பட்ட முக்கியத்துவமிக்க தொழில் முயற்சிகள் முகாமைத்துவ முகவராண்மையின் கீழ் கொண்டு வரப்பட்டன. அவையானவன, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சபை, இலங்கை துறைமுக அதிகாரசபை, இலங்கைப் புகைவண்டிப் பகுதி

வரைபடம் 1.7
**ஒதுக்குப் பணத்தினதும் விரிந்த பணத்தினதும் வளர்ச்சி (M2b)**




வரைபடம் 1.8
**வட்டி வீதங்கள்**




இலங்கை வானூர்தி மற்றும் வான் போக்கு வரத்து அதிகாரசபை, இலங்கை மத்திய போக்கு வரத்து சபை மற்றும் கொத்தணி பேரூந்து கம்பனிகள் மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை என்பனவாகும்[1]. நலக் கவனிப்பு மற்றும் கல்வித் துறைகளிலான சீர்திருத்தங்கள் 2004 இலும் தொடர்ந்தன. இவை நலக்கவனிப்புக்களை பெற்றுக் கொள்வதனை மேம்படுத்துதல், விழிப்புணர்வினை அதிகரித்தல், நிறுவன ரீதியான அமைப்பினை மறுசீரமைத்தல், நிதியிடல் பொறிமுறையினை அபிவிருத்தி செய்தல், அரச தனியார் துறைப் பங்கேற்பினை ஊக்குவித்தல் மற்றும் உட்கட்டமைப்பு, தரம், அனைத்து மட்டங்களிலும் வழங்கப்படுகின்ற பணிகள் என்பவற்றை மேம்படுத்துதல் என்பனவற்றில் முக்கிய கவனத்தைச் செலுத்தின.

- **2005 வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையும் நடுத்தர கால பேரண்டப் பொருளாதார கட்டமைப்பும் நடுத்தர காலப்பகுதியில் 6-8 சதவீதமான பிராந்திய ரீதியில் ஏற்றத்தாழ்வற்ற சமமான பொருளாதார வளர்ச்சியினையும் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினையும் எய்துவதற்கான பரந்தளவு உபாயங்களை உருவாக்கியுள்ளன.** இக்கொள்கையானது அரச மற்றும் தனியார் துறை மற்றும் ஏழைகள் சார்பான, வளர்ச்சி சார்ந்த உத்திகள் என்பனவற்றில் முனைப்பான பங்கினையும் எதிர்பார்த்த வேளையில், கடந்த இரண்டரை தசாப்தங்களுக்கும் கூடுதலான காலப்பகுதியில் தொடர்ந்துவந்த அரசாங்கங்களினால் பின்பற்றப்பட்டுவந்த சந்தையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரக் கொள்கைகளும் தொடர்ந்து பின்பற்றப்படுவதனையும் குறித்துரைக்கின்றது.

- **வளர்ந்து வருகின்ற பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடற்ற தன்மைகளுக்கு முகம்கொடுக்க நாடு தயாராகிக் கொண்டிருந்தவேளையில், 2004 திசெம்பர் 26 ஆம் நாளன்று நிகழ்ந்த கடலின் கீழான பாரிய பூமியதிர்ச்சியினால் உருவான சுனாமியினால், முன்னெப்பொழுதும் நிகழாத எதிர்பார்க்கப்படாத பாரிய அனர்த்தங்களுடன் ஆண்டு நிறைவடைந்தது.** இத்தேசிய அவலமானது 30,000 இற்கு மேற்பட்ட உயிர்களின் இழப்பிற்கும், ஏறத்தாழ அரை மில்லியன் மக்கள் இடம்பெயரவும் காரணமாகியதுடன் பாரிய மனித அவலங்களையும் விளைவித்தது. இலங்கையின் கரையோரப்பகுதியின் மூன்றில் இரண்டிற்கும் கூடுதலான பகுதியின் பாரிய அளவிலான பௌதீக சொத்துக்களும் அழிந்துபோயின. சுனாமியின் உடனடியான பேரண்ட பொருளாதாரத் தாக்கம் ஒருசில துறைகளுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தபோதும் இது பேரண்டப் பொருளாதாரத் தோற்றப்பாட்டினை குறிப்பிடத்தக்களவிற்கு மாற்றமடையச் செய்து மீளக் கட்டியெழுப்புவதிலும் இச்செயலணிக்கு தேவையான மூலவளங்களை உறுதியான அடிப்படையில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்புவதற்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கும் தேவையான மூலவளங்களை சாத்தியமானளவிற்கு குறுங்காலத்தில் பெற்றுக் கொள்ள வேண்டி யிருந்ததன் காரணமாக. பொருளாதார முகாமைத்துவத்தில் இது புதிய சவால்களை ஏற்படுத்தியிருக்கிறது. இது தொடர்பாக நாடு அதிஸ்டவசமாக நிவாரணம், புத்தாக்கம் மற்றும் மீள் கட்டுமானத்திற்கான உதவிகளுக்கான வாக்குறுதிகளைப் பெற்றுள்ளது.

1. முக்கியத்துவமிக்க தொழிற்முயற்சிகள் முகாமைத்துவ முகவராண்மையின் கீழ்வரும் பிற முக்கியமான தொழில்முயற்சிகளாக இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி, அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் என்பன விளங்குகின்றன.

*சிறப்புக் குறிப்பு 1*

## சுனாமி பேரழிவு

2004 திசெம்பர் 26 ஆந் திகதி 9.0 என றிச்ரர் அளவைக் கொண்ட பின்னர் 9.3 இற்கு அதிகரிக்கப்பட்ட கடலடி நிலநடுக்கமொன்று இந்து சமுத்திரத்தில் இந்தோனேசியாவின் வடசுமாத்திரா தீவின் மேற்குக் கரையோரத்திற்கப்பால் உள்ள பகுதி இலங்கை நேரப்படி காலை 6.59 மணிக்கு தாக்கியது. றிச்ரர் அளவையில் 9.2 என பதியப்பட்ட இது 1964 இல் அலாஸ்காவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் பின்னர் உலகில் ஏற்பட்ட மிக மோசமான நிலநடுக்கம் இதுவாகும். இந்நடுக்கத்தின் விளைவாக நவீன யுகத்திலான மிக மோசமான இயற்கை அனர்த்த மொன்று ஏற்பட்டது. 15 மீற்றர் (சுமார் 50 அடிகள்) உயரமும், மணிக்கு 500 கிலோமீற்றர் வேகமும் கொண்ட சுனாமி அலைகளால் பங்காளதேஷ், இந்தியா, இந்தோனேசியா, கென்யா, மலேசியா, மாலைதீவுகள், மொறிசியஸ், சீசெல்ஸ், சோமாலியா, இலங்கை, தன்சானியா மற்றும் தாய்லாந்தின் கடற்கரை யோரங்களில் பாரிய அழிவுகள் ஏற்பட்டன. சம்பந்தப்பட்ட தூரங்கள் காரணமாக வெவ்வேறு நாடுகளின் கரையோரங்களை அடைய சுனாமி 15 நிமிடங்கள் தொடக்கம் ஏழு மணித்தியாலங்கள் வரையான வேறுபட்ட நேரத்தை எடுத்தது. மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட இந்தோனேசிய பகுதிகள் விரைவாக பாதிப்புக்குள்ளாகின. இலங்கையும் இந்தியாவின் கிழக்குக் கரையும் சுமார் இரண்டு மணித்தியாலங்களின் பின்னர் பாதிக்கப்பட்டன. எல்லா நாடுகளிலுமாக இச்சுனாமியால் ஏற்பட்ட மொத்த இறப்புக்கள் 270,000 இற்கும் அதிகமாகும்.

இலங்கையில் சுனாமி மொத்த கடற்கரை பிரதேசங்களில் மூன்றில் இரண்டு பங்கினை அல்லது 1000 கி.மீ வரையான வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு கரைப்பகுதிகளில் கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்தியது. முதலாவது சுனாமி அலை நாட்டின் கிழக்குக்கரையில் கல்முனை பிர தேசத்தை காலை 8.27 மணியளவில் திசெம்பர் 26 ஆந் திகதி தாக்கியது. அதன் பின்னர், காலை 8.27 இற்கும் 10.30 இற்கும் இடையில் இலங்கையின் வெவ்வேறு பிரதேசங்கள் சுனாமி அலைகளின் தாக்கத்திற்குட்பட்டன. மனித உயிர்களுக்கும் பௌதீக சொத்துக்களுக்கும் பொருளாதார நடவடிக்கை களுக்கும் சுனாமி பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தியது. சுமார் 31,000 பேர் மரணமடைய 4,000 பேர் வரை யில் காணாமல் போயினர். சுமார் 550,000 இற்கும் அதிகமானோர் வீடுகளை இழந்தனர்[1]. கரையோர உட்கட்டமைப்பும் பொது மற்றும் தனியார் சொத்துக்களும் பாரியளவில் பாதிக்கப்பட்டதுடன் மீன்பிடி, உல்லாசப் பயணத்துறை, வியாபாரம் மற்றும் சிறியளவு கைத்தொழில்கள் ஆகிய முக்கிய பொருளாதார நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. மொத்தச் சேதாரமானது சுமார் 1 பில்லியன் ஐ.அ.டொலர்கள் (மொ.உ.உற்பத்தியின் 4.5 சதவீதம்) என மதிப்பிடப்பட்டதுடன், ஏறத்தாழ மூன்றாண்டு களை எடுக்கும் மீள்கட்டுமானப் பணிகளுக்கு ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.8 பில்லியன் செலவு (மொ.உ.உற்பத்தியின் 8.9 சதவீதம்) ஏற்படுமென மதிப்பிடப்பட்டது. 2005 இன் பொருளாதார வளர்ச்சி யானது முன்னைய மதிப்பீடான 6.0 சதவீதத் திலிருந்து சுமார் 0.5-1.0 சதவீதம் வரை குறைவடையும் எனவும் மதிப்பிடப்படுகின்றது. மீன்பிடி மற்றும் சுற்றுலாத்துறைகளின் பாதிப்புக்களினாலேயே பிரதானமாக இப்பாதிப்பு ஏற்படும். எனினும் மீன்பிடி மற்றும் சுற்றுலாத் துறைகளின் எதிர்க்கணிய தாக்கமானது 2005 இற்கு திட்டமிடப்பட்டுள்ள மீள்கட்டுமானம் மற்றும் புனரமைப்பு நடவடிக்கை களால் பெருமளவு எதிரீடு செய்யப்படும்.

இலங்கை பாரிய இந்தோ-அவுத்திரேலியா பூமித்தட்டில் தட்டு எல்லைகளிலிருந்து மிகத் தொலைவில் காணப்படுகின்றது. இதனால் பூமி அதிர்வுகளிலிருந்து இலங்கை பாதுகாப்பாக இருப்பதாகவே பலரும் கருதினர். எனினும் அண்மிய ஆதாரங்கள் இந்தோ-அவுத்திரேலியா தட்டில் இலங்கையின் தென்மேற்கு கரையிலிருந்து சுமார் 300 கிலோ மீற்றர் தொலைவில் ஒரு வெடிப்பு ஏற்பட்டுள்ளதனையும் இதனால் புதியதொரு பூமித்தட்டு உருவாகியுள்ளதனையும் புலப்படுத்தின. எனவே நிலஅதிர்வுகளுக்கு இலங்கை ஆட்படக்கூடிய ஏதுநிலை முன்னெப்போதும் இல்லாதளவுக்கு தற்போது அதிகமாகவுள்ளது. இது இலங்கையின் சகல அம்சங்களுக்குமான திட்டமிடலின் போது மிகப் பிரதான விடயமாகக் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இவ்வளவு பாரிய இயற்கை அனர்த்த மொன்றிற்கு முகங்கொடுப்பது தனியார்துறை, அரசதுறை, அரச சார்பற்ற மற்றும் பன்னாட்டுச் சமூகத்தின் விரிவான ஆதரவுடனேயே மேற் கொள்ளப்பட வேண்டும். பன்னாட்டு ஆதரவானது குறிப்பாக தகவல் பகிர்வு, தொழில்நுட்ப அபிவிருத்திகள் மற்றும் மீள்கட்டமைப்பு மற்றம் புனர மைப்புக்கான உதவி என்பவற்றில் பிரதானமாக தேவைப்படுகின்றது. அனர்த்த முற்பாதுகாப்பு, இடர்நேர்வு தணிப்பு மற்றும் அனர்த்த முகாமை என்பவற்றிற்கு நாட்டிலுள்ள சகல அக்கறையுடைய வகுதியினரையும் உள்ளடக்கிய ஒரு விரிவான திட்டமொன்றை உருவாக்குவதும் அவசியமாகும்.

1. மூலம் : தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையம், மகளிர் உரிமைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சு

- **2005 வரவு செலவுத் திட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நடுத்தரகால பேரண்டப் பொருளாதாரக் கட்டமைப்பு, சுனாமி அனர்த்தங்களுடன் தொடர்பான நிவாரணம், புத்தாக்கம் மற்றும் மீள்கட்டுமான வேலைகளுக்குத் தேவையான செலவினங்களை உள்ளடக்கும் விதத்தில் மீள திருத்தப்பட்டது.** மீன்பிடி மற்றும் சுற்றுலாத்துறைகளின் மீது ஏற்பட்ட தாக்கத்தின் முக்கிய காரணமாக 2005 இல் பொருளாதார வளர்ச்சி சிறிதளவிலேனும் பாதிக்கப்படக்கூடும். அதிகரித்த மீள்கட்டவாக்க நடவடிக்கைகள் மீன்பிடி மற்றும் சுற்றுலாவின் பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட இழப்புக்களை ஓரளவிற்கு எதிரீடு செய்யும். பிரதேச அபிவிருத்தி மீதான வலியுறுத்தல்கள் மற்றும் அரசாங்கத்தின் நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சித் திட்டம் என்பன வற்றின் காரணமாக 2006 ஆம் ஆண்டிலிருந்து வளர்ச்சியானது அனைத்து துறைகளுக்கும் புவியியல் பிரதேசங்களுக்கும் பரந்து 6 சதவீதத்திற்கும் மேலாக விரைவடையும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

- **உடனடியான அதேபோன்று நடுத்தரகால இலக்குகளை எய்துவதில் பல கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் காணப்படுகின்றன.** முதலாவது, பன்னாட்டு எண்ணெய் விலைகள் மேலும் அதிகரிக்கக் கூடிய தன்மையினைக் கொண்டிருக் கின்றன. இரண்டாவது, உலகளாவிய பொருளாதாரம் 2005 இல் மெதுவடையக்கூடிய அறிகுறிகளை ஏற்கனவே காட்டியுள்ளது. மூன்றாவது 2005 இலிருந்து பல்நூலிழை உடன்படிக்கை கட்டம்கட்டமாக அகற்றப்படுவதன் காரணமாக இலங்கையின் முக்கிய ஏற்றுமதிக் கைத்தொழிலான புடவைகள் மற்றும் ஆடைகள் துறை உலகச் சந்தையில் அதிகரித்த போட்டித் தன்மையினை எதிர்நோக்குகின்றது. நான்காவது, வாக்குறுதியளிக்கப்பட்ட வெளிநாட்டு உதவிகளின் பகிர்ந்தளிப்பில் தாமதமேதும் ஏற்படுமாயின் அவசரமான புத்தாக்க மற்றும் மீள்கட்டுமான வேலைகள் தாமதமடைந்து பொதுவான பொருளாதார செயலாற்றத்தினை நடுத்தரக் காலத்தில் பாதிப்படையச் செய்யலாம். இத்தகைய மோசமான எந்த ஒரு தன்மையினையும் எதிர்நோக்க நாடு தயாராக இருத்தல் வேண்டும்.

- **வளர்ச்சியை தடுக்கின்ற அமைப்பு ரீதியான பலவீனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கைகளை எடுக்கின்ற அதேவேளை, பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டிலான மேம்பாடுகளை தொடர்ந்து வலுப்படுத்துவது மிக முக்கியமானதாகும்.** இது தொடர்பாக, நாட்டின் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டுத் தன்மையினை மேம்படுத்துவதற்கு நாணய விரிவாக்கத்தினைக் கட்டுப்படுத்துவதும் இறைத் திரட்சி செயற்பாடுகளை நிறைவுசெய்வதும் தேவைப்படும் முக்கிய நடவடிக்கைகளாகவுள்ளன. அரச செலவினங்களை உற்பத்தியாக்கம் மிக்க ரீதியில் பயன்படுத்திக் கொள்வதும் அரசதுறையின் விநியோகப் பொறிமுறையை பொருளாதாரத்தின் அனைத்து துறைகளையும் சென்றடையும் விதத்தில் மீள நிலைப்படுத்தப் படுவதும் உற்பத்தியாக்கம் மிக்க அரச முதலீட்டினைப் பாதிக்கும் விரயம் மிக்க உதவு தொகைகளை கட்டம் கட்டமாக அகற்றுவதன் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருக்கும். இறை அரசிறையினை இறை மிகைக்கு இட்டுச்செல்லும் விதத்தில் அதிகரிப்பதன் மூலம் துறைவாரியான ஏற்றத்தாழ்வுகளை அகற்றுவதிலும், உறுதிப்பாடு, வளர்ச்சி இரண்டினையும் மேம்படுத்துவதிலும் இறை மற்றும் நாணயக் கொள்கை இரண்டிற்கும் நெகிழ்ச்சித் தன்மை வழங்கப்படுகிறது. பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டிற்கும் நாட்டின் ஏனைய பகுதியில் இடம்பெற்று வரும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கும் குந்தகம் ஏற்படாத விதத்தில் மீள்கட்டுமானத்திற்கும் புனரமைப்பிற்குமாக வெளிநாட்டு உதவிகளைப் பயனுறு முறையில் பயன்படுத்திக் கொள்வதற்கு ஈர்த்துக் கொள்ளும் இயலாற்றலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் தேவைப்படுகின்றது. வெளிநாட்டு உதவிகளின் பாரிய உட்பாய்ச்சலிலிருந்து எழுகின்ற உள்நாட்டு பொருளாதாரத் தளம்பல்களை பொருத்தமான முறையில் கட்டுப்படுத்துகின்ற அதேவேளையில் வெளிநாட்டு உதவுதொகைகளின் பயன்பாட்டு வீதத்தினை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுப்பதும் முக்கியமானதாகும்.

- **நிறுவனங்கள், சந்தைகள் மற்றும் உட்கட்டமைப்பு என்பனவற்றை முன்னேற்றுவதற்கு அமைப்பியல் ரீதியான சீர்திருத்தங்கள் அவசியமானவையாகும்.** பொருத்தமான விலையிடல் பொறிமுறையை விருத்தி செய்தல், போட்டித்தன்மையை உயர்த்துதல் மற்றும் நிறுவன அமைப்பினை வலுப்படுத்தல் என்பன தொடர்பில் அரசதுறைத் தொழில் முயற்சிகளின் தொழிற்பாட்டு வினைத்திறனை முன்னேற்றுவது அவசியமானதாகும். வலுத்துறையினை மீளமைப்பதன் மூலமும் குறைந்த செலவினைக் கொண்ட மாற்று மூலங்களுக்கு

மாறுவதன் மூலமும் நாட்டின் வலு நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்கான வலியுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். இலங்கையின் வெளிநாட்டுப் போட்டித் தன்மையானது மற்றைய போட்டி நாடுகளுடன் ஒப்பிடுகையில் குறைந்த செலவினைக் கொண்ட வலுவின் கிடைப்பனவிலேயே முக்கியமாக தங்கியுள்ளது. மற்றைய சீர்திருத்தங்கள் காரணிச் சந்தைகளில் வினைத்திறனினை உயர்த்துதல், கிராமிய மற்றும் சிறிய நடுத்தர தொழில் முயற்சித் துறைகள் நிதி வசதிகளைப் பெறுவதனை அதிகரித்தல், இன்றியமையாத பொது வசதிகளை வழங்குதல், போதுமானளவு அரச முதலீடுகளை மேற்கொள்ளல், பௌதீக மற்றும் நிறுவன ரீதியான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், அரசாங்கத்தின் உதவிகளின்றி பொருளாதார முகவர்கள் தமது சொந்த மூலவளங்களுடன் வெற்றிகரமாக இயங்குவதற்கேற்ற விதத்தில் ஊக்குவிப்புத் திட்டங்களை அபிவிருத்தி செய்தல், மனித மூலதனத்தினை அபிவிருத்தி செய்தல், புதிய தொழில் நுட்பம் அதேபோன்று அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சியினை ஊக்குவித்தல் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

- **தொழில் சந்தை சீர்திருத்தங்கள் தொடர்பில் தொழில் வழங்குனர்கள் ஊழியர்கள் இருவரும் உற்பத்தியாக்கத்தினை அடிப்படையாகக் கொண்ட ஊதியத் திட்டத்தினையும் உள்நாட்டு உற்பத்தியின் போட்டித் தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக தொழில் சந்தையின் நெகிழ்ச்சித் தன்மையினைப் பேணுவதன் முக்கியத்துவத்தினையும் தொழில் சந்தைச் சீர்திருத்தங்கள் கொண்டிருப்பது முக்கியமானதாகும்.** இலங்கையின் தொழிற்படை இயக்கவாற்றல் வாய்ந்ததும் போட்டித்தன்மை கொண்டதுமான பொருளாதாரத்தின் கேள்விகளை ஈடுசெய்வதனை இயலச் செய்யும் வகையில் இரண்டாந்தர மற்றும் மூன்றாந்தரக் கல்வியை பொருத்தமான முறையில் மேம்படுத்துவதன் மூலம் தொழில்படையின் தேர்ச்சியை தரமுயர்த்துவதும் முக்கியமானதாகும்.

- **வங்கித் தொழில் துறையின் போட்டித் தன்மையினை மேம்படுத்துவதிலான நிதியியல் துறை சீர்திருத்தங்களில் இலங்கை உறுதியான முன்னேற்றம் கண்டுள்ளது. இவ்வாறிருப்பினும் ஊழியர் செலவுகள் வங்கித் தொழில் துறையின் சராசரி சொத்துக்களில் 1.9 சதவீதமாக உயர்வாக இருப்பதன் காரணமாக இலங்கையில் வங்கிகளின் வட்டி வீத வேறுபாடு இப் பிராந்தியத்திலேயே மிக உயர்வாக இருக்கிறது.** இந்தியாவிலும், பாக்கித்தானிலும் ஒப்பிடத்தக்க ஊழியர் செலவுகள் சராசரிச் சொத்தில் 1.3 சதவீதமாகவேயுள்ளன. எனவே இலங்கையிலுள்ள வங்கிகள் வினைத்திறனை மேம்படுத்துவதனூடாக இவ்விடைவெளியினைக் குறைப்பதற்கு சிறப்புக் கவனம் செலுத்துவது அவசியமானதாகும்.

- **6–8 சதவீத வளர்ச்சியினை எய்துவதற்கான இலங்கையின் உள்ளார்ந்த வளம் பல துறைகளில் தங்கியிருக்கிறது.** இலங்கையின் உயர்ந்த கல்வியறிவு கொண்ட தொழிற்படை, இலங்கையர்களின் கற்றுக் கொள்வதில் காட்டும் மிகுந்த ஆவல், மற்றும் முக்கிய கடல் பாதைகளுக்கும் பன்னாட்டு தொலைத் தொடர்பூட்டல் வழிகளுக்கும் அணித்தாக கேந்திர மையத்தில் அமைந்துள்ளமை என்பனவற்றைக் கருத்தில் கொண்டு பணிகள் துறை பெருமளவு வாய்ப்புக்களை வழங்குகின்றது. நிதியியல் பணிகள், பொழுதுபோக்குத் துறை, துறைமுகப் பணிகள், மற்றும் தகவல் மற்றும் தொலைத் தொடர்பூட்டல் என்பன வளர்ச்சியடைவதற்கான பெருமளவு வாய்ப்புக்களை கொண்டிருப்பதனை எடுத்துக் காட்டுகின்றன. இவ்வனைத்துத்துறைகளினதும் வளர்ச்சியானது அதிகரித்த உற்பத்தியாக்கம், தொழில்நுட்பங்களை பின்பற்றல் மற்றும் ஒழுங்கு விதிகளை மேலும் தளர்த்துதல் என்பன மூலம் இலங்கையில் உற்பத்தியாக்க மனோபாவ கலாச்சாரத்தை விருத்தி செய்வதன் மூலம் ஊக்குவிக்கப்படல் வேண்டும். பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான வளர்ச்சி ஊக்குவிப்புக் காரணிகளை அபிவிருத்தி செய்வதிலான அரச முயற்சிகளை ஒருங்கிணைப்பதற்கும் கொள்கை உருவாக்கம் மற்றும் நடைமுறைப்படுத்தலில் அரச தனியார் பங்கேற்பினை ஊக்குவிப்பதற்குமாக 2004 இல் அரசாங்கம் பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய சபையினை ஏற்படுத்தியது[2].

- **அரசாங்கத்தின் சுனாமி அனர்த்தத்திற்கு பின்னைய மீட்சி முயற்சிகள் அதன் நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கான செயலணிக்குழு மற்றும் மீட்பு**

2. பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய சபையானது, பொருளாதாரக் கொள்கை, நிதியியல் துறை, மூலதனச் சந்தை, வர்த்தகம் மற்றும் தீர்வை, செலவினம், போக்குவரத்து, சுற்றுலா, சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் அபிவிருத்தி, ஆடை, வாழ்க்கைச் செலவு, வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, கல்வி, கொடை வழங்குநர் இணைப்பு மற்றும் வடக்கு கிழக்கு மாகாண அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு, தொழில் உருவாக்கம், தேர்ச்சி அபிவிருத்தி மற்றும் தொழில் உறவுகள், பெருந்தோட்டக் கைத்தொழில் நலத்துறை கட்டடவாக்கம், மிலேனிய அபிவிருத்தி இலக்குகள், கிராமிய அபிவிருத்தி மற்றும் வறுமை ஒழிப்பு, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள், சட்டம் ஏற்றுமதி மற்றும் அரச துறை சீர்திருத்தங்கள் என்பனவற்றின் ஒவ்வொரு துறைகளிலுமுள்ள பிரச்சனைகளை ஆராயும் 25 கொத்தணிகளை தொழிற்படுத்துகிறது.

*சிறப்புக் குறிப்பு -2*

## வர்த்தக வங்கித் துறையிலுள்ள வட்டி வீத வேறுபாடு மற்றும் வட்டி மிகை தொடர்பான ஒரு பிராந்திய ஒப்பீடு

வட்டி வீத வேறுபாடும் வட்டி மிகையும் ஒரு பொருளாதாரத்தில் நிதியியல் இடையீட்டாளர்களது செயற்றிறனை வெளிப்படுத்துவனவாகும். வட்டி வீத வேறுபாடு என்பது வட்டி உழைக்கும் சொத்துக்களிலிருந்தான சராசரி விளைவுக்கும் வட்டி செலுத்தப்படும் பொறுப்புக்களுக்கான சராசரி செலவிற்குமிடையிலான வேறுபாடு என வரையறுக்கப்படுகிறது[1]. வட்டி மிகை என்பது வங்கிகளது சராசரி சொத்துக்களுக்கான தேறிய வட்டி வருமான விகிதமென வரையறுக்கப் படுகிறது[2].

வட்டி வேறுபாடுகளையும் வட்டி மிகையையும் பல்வேறு காரணிகள் தீர்மானிக்கின்றன. முதலாவதாக, செயற்படாக் கடன்கள் காரணமாக ஏற்படும் இழப்புக்களை ஈடுசெய்வதற்காக வங்கிகள் தமது வட்டி வருமானத்திலிருந்து ஒதுக்கங்களைச் செய்ய வேண்டியிருப்பதனால் செயற்படாக்கடன்கள் வங்கிகளது பயனுறுதி மிக்க வட்டி வருமானத்தை குறைவடையச் செய்கின்றன. இரண்டாவதாக வங்கிகள் நிருவாக மற்றும் பிற தொழிற்பாட்டு செலவுகளை ஈடுசெய்ய வேண்டியுள்ளது. மூன்றாவதாக, சில நாடுகளில் வங்கிகள் சட்டரீதியான ஒதுக்கு வீதமொன்றைப் பேணுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றன. (அதாவது சட்ட ரீதியான ஒதுக்க தேவைப்பாடு) நாணயக் கொள்கையின் ஒரு பகுதியாக அமைகின்ற இந்த ஒதுக்கத்திற்கு எவ்வித கொடுப்பனவும் வங்கிகளுக்கு செய்யப்படுவதில்லை. நான்காவதாக, வங்கிகள் வைப்பிலிருந்தான எடுப்பனவுகளை எதிர்கொள்வதற்காக காசு மீதிகளைப் பராமரிக்கின்றன. இம் மீதிகளும் வட்டி எதையும் உழைக்கப்படுவதில்லை. ஐந்தாவதாக, அமைப்பியல் ரீதியான வரையறைகள் நிதித்துறையில் போட்டித்தன்மையை பாதிக்கின்றன. இறுதியாக, சட்ட மற்றும் பிற நடைமுறைகள் தொடர்பான தடைகள் பேரினப் பொருளாதார காரணிகளும் பேரினப் பொருளாதார சூழல் தொடர்பிலான நிச்சயமின்மைகளும் போன்ற இடையீட்டுச் செலவுகளில் அதிகரிப்பினை உருவாக்கக்கூடும்.

### அட்டவணை 1
### தேர்ந்தெடுக்கப்பட்ட தெற்காசிய நாடுகளிலான வட்டி வீத வேறுபாடு

சதவீதத்தில்

| விடயம் | இந்தியா | பாக்கித்தான் | பங்களாதேஷ் | இலங்கை |
|---|---|---|---|---|
| **வட்டி வீத வேறுபாடு** | 2.6 | 2.2 | 1.6 | 4.7 |
| செயற்படாக் கடன்களில் வேறுபாட்டால் ஏற்பட்ட தாக்கம் | 0.3 | 0.4 | 1.2 | 1.1 |
| நியதி ஒதுக்கு வீதத்தால் வேறுபாட்டால் ஏற்பட்ட தாக்கம் | 0.4 | 0.2 | 0.4 | 0.6 |
| காசு நிலுவை வேறுபாட்டால் ஏற்பட்ட தாக்கம் | 0.1 | 0.5 | 0.1 | 0.4 |

*2003 இற்கான தரவை அடிப்படையாக கொண்டது*

### அட்டவணை 2 :
### தேர்ந்தெடுக்கப்பட்ட தெற்காசிய நாடுகளிலான வட்டி மிகை

சராசரி சொத்துக்களின் சதவீதமாக

| விடயம் | இந்தியா | பாக்கித்தான் | பங்களாதேஷ் | இலங்கை |
|---|---|---|---|---|
| 1. வட்டி வருமானம் | 7.3 | 4.6 | 6.4 | 8.5 |
| 2. வட்டி செலவினம் | 4.4 | 1.6 | 4.5 | 4.4 |
| 3. வட்டி மிகை (1-2) | 2.9 | 3.0 | 1.9 | 4.1 |
| 4. வட்டியல்லா வருமானம் | 2.0 | 2.1 | 1.6 | 2.7 |
| 5. வட்டியல்லா செலவினம் | 2.2 | 2.5 | 1.8 | 3.9 |
| 5.1 ஊழியர் செலவு | 1.3 | 1.3 | வி.கி. | 1.9 |
| 5.2 ஏனையவை | 0.9 | 1.2 | வி.கி. | 2.0 |

*2003 இற்கான தரவை அடிப்படையாகக் கொண்டது*

அட்டவணைகள் 1, 2 என்பன இலங்கையிலும் அருகிலுள்ள நாடுகளிலுமுள்ள வட்டி வீத வேறுபாடுகளையும் வட்டி மிகையினையும் சுருக்கமாகக் காட்டுகின்றன. வட்டி வீத வேறுபாடானது செயற்படாக் கடன்கள், வர்த்தக வங்கிகளின் கையிலுள்ள காசு மற்றும் சட்டரீதியான ஒதுக்கு வீதம் என்பவற்றின் தாக்கத்தை அடையாளம் காண அனுமதிக்கும். அதேவேளை வட்டி மிகையானது வங்கிகளின் தொழிற்பாட்டுச் செலவுகளின் வருமானத்தினூடாக இணைக்கும் செயற்பாட்டுச் செலவுகளின் தாக்கத்தை அடையாளம் காண உதவுகின்றது.

1. வட்டி வீத வேறுபாடு(%) = $\dfrac{\text{வட்டி வருமானம்}}{\text{(வட்டி உழைக்கும் சராசரி சொத்துக்கள் + செயற்படாக் கடன்கள் + சட்டரீதியான மத்திய வங்கியிடமுள்ள நியதி ஒதுக்கங்கள் + கையிலுள்ள காசு) என்பவற்றின் சராசரி}}$ $\dfrac{\text{வட்டி செலவினங்கள்}}{\text{சராசரி வைப்புக்களும் கடன்களும்}}$

2. வட்டி மிகை (%) = $\dfrac{\text{வட்டி வருமானம் – வட்டி செலவினம்}}{\text{சராசரி சொத்துக்கள்}}$ %

**சிறப்புக் குறிப்பு 8 தொடர்ச்சி**

வட்டி வீத வேறுபாடும் வட்டி மிகையும் இடையீட்டுச் செலவுக் கிரயமானது தெற்காசியாவிலுள்ள ஏனைய அருகிலுள்ள நாடுகளைக் காட்டிலும் இலங்கையில் அதிகமானது என்பதனைப் புலப்படுத்துகின்றன. இதற்கான முக்கிய காரணமாக உள்நாட்டு வங்கித்தொழில் முறைமையிலுள்ள உயர்ந்த தொழிற்பாட்டுச் செலவு விளங்குகிறது. வங்கித்தொழில் முறை ஒன்றிலுள்ள உயர் வட்டி மிகையானது ஆழமாக வேரூன்றியுள்ள செயற்றிறனின்மை, போட்டித்தன்மை காணப்படாமை, வருமான மூலங்களை பன்முகப் படுத்தாமை, வங்கி கடன் வழங்கலுக்கு சாதகமானதாகவும் பண மற்றும் மூலதனச் சந்தைகளின் ஒருபக்கம் சாய்ந்த அபிவிருத்தி மற்றும் கடன் சந்தை வீத மாற்றங்களை பிரதிபலித்து அதற்கிணங்க சீராக்கப்படாத நெகிழ்வற்ற வீதம் புலப்படுத்துகின்றது. எனவே இவ்விடயத்தில் பொதுமக்களது விழிப்புணர்ச்சியை உருவாக்கவும் போட்டித்தன்மையை ஊக்குவிக்கவும் மத்திய வங்கி வங்கிகளது கடன் வழங்கல் மற்றும் வைப்பு வீதங்களையும் பிற கட்டணங்கள் மற்றும் தரகுகளையும் பிரசுரிக்க ஆரம்பித்துள்ளது. மேலும், கடன் மற்றும் வைப்பு வீதங்களை தமது வியாபார அலுவலகங்களில் காட்சிக்கு வைக்குமாறும் வங்கிகள் கோரப்பட்டன. இது பொதுமக்கள் சிறந்த வீதங்களைப் பெற்றுக் கொள்ள வங்கிகளுடன் பேரம்பேச உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

செயற்படாக் கடன்களை மீளப்பெறுவது நீண்ட சிக்கலான சட்ட நடைமுறைகளால் பாதிக்கப் படுவதுடன் அதிக செலவு மிக்கதாகவுமுள்ளது. இவ்விடயத்தில் தேவையான சட்ட மறுசீரமைப்புக்கள் ஏற்படுத்தப் படுவதும் மேலும் திறன்மிக்க நிறுவனக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதும் அவசியமாகும். பல நாடுகளில் செய்யப்பட்டதைப் போன்று சொத்து முகாமைக் கம்பனிகளை ஏற்படுத்துவதும் ஒரு வழிமுறையாக அமையலாம். இடையீட்டு செலவுகளைக் குறைப்பதில் பிணையங்கள் சந்தையை ஊக்கமளிப்பதும் அபிவிருத்தி செய்வதும் பிரதானமானதாகும். ஏனெனில் பிணையங்கள் சந்தையின் வளர்ச்சியானது வங்கிகளை அவற்றின் கடன் வட்டி வீதங்களைக் குறைக்குமாறு அழுத்தத்தைக் கொண்டுவரும். மேலும் கடன் வட்டி வீதங்களை, நிதி பயன்படுத்தப்படும் செயற்றிட்டங்களின் ஆற்றல்களைப் பொறுத்து தீர்மானிப்பதும் வழங்கப் படும் பிணையங்களை முறையாகப் பகுப்பாய்வு செய்வதும் இடையீட்டுச் செலவினை குறைப்பதற்கு உதவும்.

**மற்றும் நிவாரணத்திற்கான செயலணிக் குழு என்பனவற்றின் தொழிற் பாடுகளூடாக, அனர்த்த முகாமைத்துவ கொள்கைகள் மற்றும் உபாயங்களையும் தேசிய மீள்கட்டுமான நிகழ்ச்சித் திட்டங்களையும் அபிவிருத்தி செய்வதில் ஈடுபட்டிருக்கும் தன்மை ஊக்கம் தருவதாகவுள்ளது.** அரசாங்கம், சமாதான செயற்பாட்டினை முன்னெடுத்தல், அரசியல் உறுதிப்பாட்டினையும், சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுதல், ஆளுகையினை மேம்படுத்தல் என்பனவற்றிலும் ஈடுபட்டுள்ளது. பன்னாட்டு அமைப்புக்கள் இலங்கையை இப் பிராந்தியத்திலுள்ள நாடுகளிடையே அதன் சிறந்த ஆளுகை மற்றும் குறைந்த அளவிலான 'சிவப்பு நாடா' என அழைக்கப்படும் நிருவாக தாமதங்கள் மற்றும் குறைந்த மட்ட ஊழலுக்காக ஏற்கனவே பாராட்டியுள்ளன.[3]

- **இதன் சாதனைகளை மேலும் திரட்சிப் படுத்தவும், பொருளாதாரத்தினை உயர்ந்த வளர்ச்சிப் பாதையில் பயணிக்கச் செய்யவும் அரசாங்கம் மிகுந்த வினைத்திறனும் சமத்துவமும் மிக்க முறையில் பொதுப் பொருள்கள் மற்றும் பணிகளின் வழங்கலை அதிகரிக்கச் செய்கின்ற அதேவேளையில் தனியார் துறைக்கு அதன் உற்பத்தியாக்க சக்தியை வெளிப்படுத்தத்தக்க வசதியை ஏற்படுத்தி தூண்டுதலளிக்கக் கூடிய சூழலை வழங்குதல் வேண்டும்.** இச் செயல்முறைகள் ஏற்கனவே தொடங்கியிருப்பதன் காரணமாக, தனியார் துறையானது அதிகரித்த உற்பத்தியாக்கம், ஆராய்ச்சிகளிலும் அபிவிருத்தியிலும் தொடர்ச்சியாக ஈடுபடுதல், உலகளாவிய அறைகூவல்களுக்கு முகம் கொடுத்தல் என்பனவற்றினூடாக உற்பத்தியாக்க துறையினை விரிவடையச் செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் வளர்ச்சி செயலாக்கத்திற்கு ஆதரவளிக்கும் விதத்தில் அது சுயமான முயற்சிகளை மேற்கொள்வது அவசியமாகவுள்ள வேளையில், இவற்றிலிருந்து நன்மைகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும். இத்தகைய இயக்கவாற்றல் மிக்க தனியார் துறையானது தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி, வறுமையைக் குறைத்து நாட்டில் உறுதியான பொருளாதார அபிவிருத்தியை எய்துவதற்கான கூட்டுச் சமூக

3. இலங்கை. கிராமிய மற்றும் நகர முதலீட்டு சூழ்நிலையை மேம்படுத்துதல்; உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, கொழும்பு 2005.

பொறுப்பாண்மையை ஊக்குவித்து பொருளாதாரத்தினை முன்னோக்கிச் செலுத்தும்.

## 1.2 வெளிநாட்டுப் பொருளாதாரச் சூழல்

- **இலங்கையின் சமூக பொருளாதார நிலைமைகளை தீர்மானிப்பதில் வெளிநாட்டு பொருளாதார சூழல் முக்கிய பங்கினை வகிக்கின்றது.** வெளிநாட்டு வர்த்தகத்துடன் பெருமளவிற்கு தொடர்புபட்டுள்ள சிறிய திறந்த பொருளாதாரமொன்றில் வெளிநாட்டு பொருளாதார சூழலானது இலங்கையின் செல்வத்தை உருவாக்குதல், வாழ்க்கை நிலைமைகள், தொழில் வாய்ப்பு உருவாக்கம் என்பனவற்றிலும் வலுவான நீண்டகால வளர்ச்சிப் பாதையை நோக்கி முன்னேற்றுவதற்கான இயலாற்றலிலும் முக்கியமான பங்கினை ஆற்றுகிறது. எனவே இலங்கை உலகின் எஞ்சிய பகுதிகளுடன் பொருளாதார செழிப்புக்களிலும் சரி அல்லது மந்தமான தன்மைகளிலும் சரி தனித்திருக்க முடியாது.

- **2004 இல் பன்னாட்டு எண்ணெய் விலைகளில் அச்சுறுத்தத்தக்க உயர்வு காணப்பட்டபோதும் உலகப் பொருளாதாரம் கடந்த ஒரு சில தசாப்தங்களில் பதிவு செய்யப்பட்ட விரைந்த உலகளாவிய பொருளாதார வளர்ச்சியான 5.1 சதவீதம் கொண்ட பரந்தளவிலான வளர்ச்சியைக் காட்டியது.** உலகப் பொருளாதாரத்தின் மீட்சிக்கு ஐக்கிய அமெரிக்கா முக்கியமாகப் பங்களித்ததுடன் இது 2004 இல் 4.4 சதவீதம் கொண்ட மதிப்பிடப்பட்ட உயர்ந்த வளர்ச்சி வீதத்தினைப் பதிவு செய்தமைக்கு வலுவான தனியார் நுகர்வுச் செலவினம், தொடர்ச்சியான சாதகமான முதலீட்டுச் செலவினம் ஆகிய இரண்டுமே காரணங்களாகும். யப்பானின் பொருளாதாரமும் பல ஆண்டுகளாகக் காணப்பட்ட பொருளாதார மந்தங்களினைத் தொடர்ந்து 2004 இல் வலுவான செயலாற்றத்தினைப் பதிவு செய்தது. மாறாக, குறைவடைந்த உள்நாட்டுக் கேள்வி, இதன் நாணய பெறுமதி உயர்வு என்பனவற்றின் காரணமாக யூரோ பிரதேசங்கள் மெதுவான வேகத்தில் வளர்ச்சியடைந்து வெளிநாட்டுக் கேள்வியையும் குறைவடையச் செய்தன. 2004 இல் உலகளாவிய பொருளாதாரத்தினைப் பாதித்த எண்ணெய் விலைத் தாக்கங்கள் பெயரளவு நியதிகளில் மிக உயர்வாக இருந்தபோதும், 1970 களில் காணப்பட்ட கடுமையான எண்ணெய்த் தாக்கங்களுடன் ஒப்பிடுகையில் உண்மை நியதிகளில் இது அவ்வளவிற்கு மோசமானதாக இருக்கவில்லை.

- **தோற்றம் பெற்றுவரும் சந்தை மற்றும் மாற்றத் திற்குள்ளாகி வரும் பொருளாதாரங்களினதும் வளர்ச்சி பரந்தளவினதாகவும் கைத்தொழில் நாடுகளில் காணப்படும் சிறந்த பொருளாதார செயலாற்றத்திலிருந்தும், பண்ட விலைகளின் அதிகரிப்பிலிருந்தும் பெருமளவு நன்மைகளைப் பெற்றுக் கொள்கின்றனவாகவும் காணப்படுகின்றன.** 2004 இல் ஆசியாவில் தோற்றம் பெற்று வருகின்ற பொருளாதாரங்கள், இரு பாரிய தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்களான சீனா மற்றும் இந்தியாவின் முறையே 9.5 சதவீத, 7.3 சதவீத வளர்ச்சியினால் தொடர்ந்தும் வளர்ச்சியில் முன்னிலை யிலிருந்தன. ருசியா, உக்கிரேன் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் புதிய நாடுகள் என்பனவற்றை உள்ளடக்கிய ஐரோப்பாவின் மாற்றத்திற்குள்ளாகிவரும் பொருளாதாரங்கள் 2004 இல் அவற்றின்

அட்டவணை 1.1

**உலகப் பொருளாதார அபிவிருத்திகளும் தோற்றப்பாடும்**
**(வேறுவிதமாகக் குறிப்பிடப்பட்டாலன்றி ஆண்டு சதவீத மாற்றம்)**

| | உண்மை | | எறிவுகள் | |
|---|---|---|---|---|
| | 2003 | 2004 | 2005 | 2006 |
| **உலக வெளியீடு** | 4.0 | 5.1 | 4.3 | 4.4 |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரம் | 2.0 | 3.4 | 2.6 | 3.0 |
| ஐக்கிய அமெரிக்கா | 3.0 | 4.4 | 3.6 | 3.6 |
| யூரோப்பகுதி | 0.5 | 2.0 | 1.6 | 2.3 |
| ஐக்கிய இராச்சியம் | 2.2 | 3.1 | 2.6 | 2.6 |
| யப்பான் | 1.4 | 2.6 | 0.8 | 1.9 |
| அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் | 6.4 | 7.2 | 6.3 | 6.0 |
| அபிவிருத்தி அடைந்து வரும் ஆசியா | 8.1 | 8.2 | 7.4 | 7.1 |
| சீனா | 9.3 | 9.5 | 8.5 | 8.0 |
| இந்தியா | 7.5 | 7.3 | 6.7 | 6.4 |
| **உலக வர்த்தக அளவு (பொருட்கள் மற்றும் பணிகள்)** | 4.9 | 9.9 | 7.4 | 7.6 |
| இறக்குமதிகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரம் | 3.6 | 8.5 | 6.5 | 6.3 |
| அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரம் | 8.9 | 15.5 | 12.0 | 11.0 |
| ஏற்றுமதிகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரம் | 2.8 | 8.1 | 5.9 | 6.8 |
| அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரம | 10.7 | 13.8 | 9.9 | 9.7 |
| **விலை அசைவுகள்** | | | | |
| நுகர்வோர் விலைகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரம் | 1.8 | 2.0 | 2.0 | 1.9 |
| அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரம் | 6.0 | 5.7 | 5.5 | 4.6 |
| பண்ட விலைகள் | | | | |
| எண்ணெய் | 15.8 | 30.7 | 23.2 | -5.9 |
| எரிபொருள் அல்லாதவை | 7.1 | 18.8 | 3.8 | -5.1 |
| **ஆறுமாத இ.வ.கி.வ.வீதம் (சதவீதம்)** | | | | |
| ஐ.அ.டொலர் வைப்புக்கள் மீது | 1.2 | 1.8 | 3.3 | 4.1 |

மூலம்: உலகப் பொருளாதார தோற்றப்பாடு (ஏப்பிறல் 2005) ப.நா.நிதியம்

பொருளாதார செயலாற்றத்தினை மேம்படுத்தியிருந்தன. ஆபிரிக்காவிலும், மத்திய கிழக்கிலுமுள்ள பல நாடுகள் உயர்ந்த எண்ணெய் மற்றும் பண்டங்களின் விலைகள் மூலம் நன்மையடைந்துள்ளன.

- **உயர்ந்த உலகளாவிய பொருளாதார வளர்ச்சியுடன் இணைந்து 2004 இல் உலக வர்த்தகம் 9.9 சதவீதத்தில் வளர்ச்சியடைந்தது.** இது 2000 இன் பின்னர் பதிவு செய்யப்பட்ட மிக உயர்ந்த வளர்ச்சியாக விளங்கியதுடன் ஏற்றுமதி சார்ந்த நாடுகளின் வினைத்திறனிற்கும் இயக்கவாற்றலுக்குமான வாய்ப்புக் களையும் விரிவாக்குவதாகவுள்ளது.
- **தொடர்ச்சியான பணச்சுருக்கம் தொடர்பான அச்சத்தினை படிப்படியாக இல்லாமல் செய்யும் விதத்தில், 2003 இல் நிலவிய வரலாற்றிலேயே மிகக் குறைந்த மட்டமான உலகளாவிய பணவீக்கம் இறை மற்றும் நாணயக் கொள்கைகள் உயர்வடைந்து செல்லும் உலகளாவிய கேள்வி மற்றும் உயர்வடைந்து செல்லும் எண்ணெய் விலைகள் என்பனவற்றினால் தூண்டப்பட்டு 2004 இல் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியது.** ஆனால் அளவுக்கதிகமான கொள்கைப் பிரதிபலிப்புகள் பெரும்பாலான கைத்தொழில் நாடுகளில் உயர்ந்த பணவீக்க எதிர்பார்ப்புக்களைத் தோற்றுவித்ததன் காரணமாக முன்னைய நாணயக் கொள்கைத் தூண்டுதல்கள் முடிவிற்கு கொண்டு வரப்பட்டதுடன் இதன் விளைவாக பன்னாட்டு வட்டி வீதங்களில் படிப்படியான அதிகரிப்புக்கள் தோற்றம் பெற்றன.
- **பன்னாட்டு நிதியியல் சந்தை அபிவிருத்திகள் சீரானதாக காணப்பட்டதுடன் சந்தைச் சீராக்கங்கள் நிதியியல் முறையின் உறுதித் தன்மைக்கோ அல்லது நிதியியல் நிறுவனங்களின் ஆரோக்கியத்திற்கோ அச்சுறுத்தலை தோற்றுவிக்கவில்லை.** எனினும் பாதகமானதொரு விடயமாக, தோற்றம் பெற்று வரும் சந்தைப் பொருளாதாரங்களுக்கான தேறிய மூலதன உட்பாய்ச்சல்கள் 2004 இல் வீழ்ச்சியடைந்து அந்நாடுகளின் சென்மதி நிலுவையை மோசமடையச் செய்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- **2004 இல் ஐ.அ.டொலர் மற்றைய முக்கிய நாணயங்களுக்கெதிராக தொடர்ந்தும் தேய்வடைந்தது.** எனினும் இது முன்னைய இரு ஆண்டுகளிலும் பார்க்க மெதுவான வேகத்திலேயே காணப்பட்டது. ஐக்கிய அமெரிக்காவின் நடைமுறைக் கணக்கில் ஏற்பட்ட தொடர்ச்சியான பாரிய பற்றாக்குறை ஐக்கிய அமெரிக்க டொலர் பலயீனமடையக் காரணமாயிற்று. எனினும், ஐ.அ.டொலர்களின் தேய்மானத்தின் மீதான இத்தளம்பல்களின் தாக்கம் ஐ.அமெரிக்க வட்டி வீதங்கள் உயர்வடைந்தமையின் மூலம் ஓரளவிற்கு எதிரீடு செய்யப்பட்டமைக்கு சென்மதி நிலுவையில் மிகைகளைக் கொண்டிருந்த ஆசிய பொருளாதாரங்கள் அவற்றின் திரண்ட அலுவல்சார் ஒதுக்குகளின் தொகையில் பெரும் பகுதியினை ஐ.அமெரிக்காவின் அரச பிணையங்களில் முதலீடு செய்தமையே காரணமாகும்.
- **நெகிழ்ச்சித் தன்மை கொண்ட செலாவணி வீதங்களுடனான தோற்றம் பெற்றுவரும் பெரும்பாலான சந்தைப் பொருளாதாரங்களின் நாணயங்கள் ஐ.அ.டொலருக்கெதிராக உயர்வடைந்தவேளையில், சீனா, மலேசியா மற்றும் கொங்கொங் என்பன ஐ.அ.டொலாருக் கெதிராக நிலையான மாற்று வீதத்தினை பேணின.** இது, இப்பிராந்தியத்தில் குறிப்பாக, நிலையான செலாவணிவீத அமைப்புக்களை பின்பற்றிவரும் நாடுகளின் மீது செலாவணி வீத முகாமைத்துவத்தில் பெருமளவு நெகிழ்ச்சித் தன்மையினை ஏற்படுத்துவதற்கு பன்னாட்டு ரீதியான அழுத்தம் கொடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் காட்டியது. இதேபோன்று, முக்கிய நாணயங் களுக்கிடையேயான குறுக்கு வீதங்களில் காணப்படும் கடுமையான தளம்பல்கள் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பேரண்டப் பொருளாதார முகாமைத்துவத்தில் இடர்ப்பாடுகளைத் தோற்றுவிக்குமாகையால் முக்கியமான கைத்தொழில் நாடுகளிடையே நெருக்கமான பேரண்டப் பொருளாதாரக் கொள்கை இணைப்பு இருப்பது அவசியமானதாகும்.
- **2005 இல் உலகளாவிய பொருளாதார வளர்ச்சியானது ஏறத்தாழ 4.3 சதவீதமான குறைந்த வீதத்தில் இருக்குமென எறிவு செய்யப்பட்ட போதும் இவ்வாண்டில் உலகளாவிய பொருளாதாரத் திற்கான வாய்ப்புக்கள் சாதகமானதாக இருக்கும்போல் தோன்றுகின்றது.** மெதுவான உலகளாவிய பொருளாதார வளர்ச்சியினைப் பிரதிபலித்து உலக வர்த்தகத்தின் அளவிலான வளர்ச்சி 2004 இன் 9.9 சதவீதத்திலிருந்து 2005 இல் 7.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடையுமென எறிவு செய்யப்பட்டுள்ளது. எண்ணெயின் விலைகள் மற்றைய பண்டங்களின் விலைகளிலும் பார்க்க விரைவாக அதிகரிக்கும் என எறிவு செய்யப்பட்டுள்ளமையினால் எண்ணெய்யை

அட்டவணை 1.2
**நிலையான விலைகளில் (1996) மொத்த தேசிய உற்பத்தி**

| விடயம் | பெறுமதி (ரு.மில்லியன்) | | மொ.உ.உவின் பங்கின் சதவீதமாக (%) | | வீத மாற்றம் (%) | | மாற்றத்திற்கான பங்களிப்பு (%) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2003(அ) | 2004(ஆ) | 2003(அ) | 2004(ஆ) | 2003(அ) | 2004(ஆ) | 2003(அ) | 2004(ஆ) |
| **வேளாண்மைத்துறை** | **176,450** | **175,182** | **19.0** | **17.9** | **1.6** | **-0.7** | **5.4** | **-2.5** |
| வேளாண்மையும் | 137,150 | 135,297 | 14.7 | 13.8 | 3.2 | -1.4 | 8.0 | -3.7 |
| காட்டுத்தொழில் | 16,887 | 17,107 | 1.8 | 1.7 | 1.4 | 1.3 | 0.4 | 0.4 |
| மீன்பிடித்தொழில் | 22,412 | 22,779 | 2.4 | 2.3 | -6.9 | 1.6 | -3.1 | 0.7 |
| **கைத்தொழில்துறை** | **246,417** | **259,256** | **26.5** | **26.5** | **5.5** | **5.2** | **24.3** | **25.7** |
| சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் | 15,699 | 16,946 | 1.7 | 1.7 | 5.7 | 7.9 | 1.6 | 2.5 |
| தயாரிப்பு | 151,951 | 159,696 | 16.3 | 16.3 | 4.2 | 5.1 | 11.5 | 15.5 |
| கட்டடவாக்கம் | 64,115 | 68,332 | 6.9 | 7.0 | 5.5 | 6.6 | 6.3 | 8.5 |
| மின்வலு, வாயு, நீர் | 14,651 | 14,282 | 1.6 | 1.5 | 21.6 | -2.5 | 4.9 | -0.7 |
| **பணிகள்துறை** | **507,191** | **545,487** | **54.5** | **55.7** | **7.9** | **7.6** | **70.3** | **76.8** |
| போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல் | 125,538 | 142,679 | 13.5 | 14.6 | 10.6 | 13.7 | 22.7 | 34.4 |
| மொத்த மற்றும் சில்லறைவியாபாரம் சுற்றுலாவிடுதிகளும் உணவகங்களும் | 206,507 | 218,924 | 22.2 | 22.3 | 7.8 | 6.0 | 28.4 | 24.9 |
| நிதியியல் பணிகள், உண்மைச் சொத்தும், வியாபாரப் பணிகள் | 108,578 | 114,717 | 11.7 | 11.7 | 8.8 | 5.7 | 16.6 | 12.3 |
| பொது நிருவாகம், ஏனைய அரச பணிகள், பாதுகாப்பும் ஏனைய சமுதாய, சமூக தனியாள் பணிகள் | 66,568 | 69,166 | 7.2 | 7.1 | 2.1 | 3.9 | 2.6 | 5.2 |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **930,057** | **979,925** | **100.0** | **100.0** | **6.0** | **5.4** | **100.0** | **100.0** |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருவாய் | -9,468 | -11,300 | | | -32.2 | 19.3 | | |
| **மொத்த தேசிய உற்பத்தி** | **920,588** | **968,625** | | | **6.6** | **5.2** | | |

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

இறக்குமதி செய்யும் நாடுகளின் வர்த்தக மாற்று விகிதம் மோசமடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஐக்கிய அமெரிக்காவில் தொடர்ந்தும் குறிப்பிடத்தக்களவில் காணப்படும் இரட்டைப் பற்றாக்குறைகளான, இறைப் பற்றாக்குறை (2005 இன் மொ.உ.உற்பத்தியில் 4.4 சதவீதமென மதிப்பிடப்பட்டுள்ளது) மற்றும் வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை (2005 இன் மொ.உ.உற்பத்தியில் 5.8 சதவீதமென மதிப்பிடப் பட்டுள்ளது) என்பன ஐக்கிய அமெரிக்கா மற்றும் உலகப் பொருளாதாரத்தில் எதிர்பார்க்கப்படும் உயர் வளர்ச்சிக்கு கீழ்நோக்கிய இடர்நேர்வுகளை தோற்றுவித்திருக்கின்றன. இலங்கையின் பாரிய ஏற்றுமதிச் சந்தையாக ஐக்கிய அமெரிக்கா விளங்குவதனால் ஐக்கிய அமெரிக்காவின் பொருளாதாரத்திலான எந்த ஒரு மெதுவடைவதலினதும் இலங்கை மீதான தாக்கமானது குறைவடைகின்ற ஏற்றுமதி களினூடாக பெருமளவிற்கு இடம்பெறலாம்.

## 1.3 2004 இல் பேரண்டப் பொருளாதாரச் செயலாற்றமும் கொள்கைகளும்

### பொருளாதார வளர்ச்சி, தேசிய வருமானம் மற்றும் வருமானப் பங்கீடு

- **2004 இல் மொ.உ. உற்பத்தி, உண்மை நியதிகளில் 5.4 சதவீதத்தினால் வளர்ச்சி யடைந்து, பூகோள ரீதியான அரசியல் உறுதியற்ற தன்மை, மோசமான எண்ணெய் விலை அதிகரிப்புக்கள், வரட்சி, நிச்சயமற்ற அரசியல் தன்மை என்பனவற்றினால் 2004 இல் தோன்றிய சவாலுக்குரிய சூழலொன்றில் எதிர்த்து நிற்கக்கூடிய ஆற்றலொன்றைப் பொருளாதாரம் எடுத்துக் காட்டியது.** இவ்வளர்ச்சியானது, 2003 இல் பதிவு செய்யப்பட்ட வளர்ச்சியான 6.0 சதவீதத்திலும் பார்க்க குறை வானதாக இருந்தபோதும் இது கடந்த சில தசாப்தங்களாகப் பேணப்பட்டு வரும் ஏறத்தாழ 5 சதவீதம் கொண்ட ஆண்டு வளர்ச்சிப் போக்கை விஞ்சிக் காணப்பட்டது. 2004 இல் வளர்ச்சியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு குறிப்பிட்ட சில பிரதேசங்களின் பெருந்தோட்ட வேளாண்மையினையும்,

அதேபோன்று பெரும்போக மற்றும் சிறுபோக நெற்செய்கை களையும் நீர் மின்வலு உருவாக்கத்தினையும் பாதித்த மோசமான வானிலையின் விளைவாக வேளாண்மைத் துறையின் செயலாற்றம் மோசமடைந்தமையே முக்கிய காரணமாகும். இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களின் விலைகளில், குறிப்பாக பெற்றோலியத்தின் விலைகளில் ஏற்பட்ட உயர்வும் அனைத்து மூன்று துறைகளான வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளின் உற்பத்திச் செலவின் மீது எதிர்க்கணியமான தாக்கத்தினைக் கொண்டிருந்தது.

- **2004 இல் நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தி ரூ.2,029 பில்லியன்களாக மதிப்பிடப்பட்டு 15.2 சதவீதமான அதிகரிப் பொன்றைப் பதிவு செய்தது. இது 5.4 சதவீதமான உண்மைப் பொருளாதாரவளர்ச்சியினது விலைமட்டத்தில் ஏற்பட்ட 9.2 சதவீதம் கொண்ட (மொ.உ.உற்பத்தி சுருக்கி) அதிகரிப்பின் விளைவால் ஏற்பட்டதாகும்.** 2004 ஆம் ஆண்டிற்கான தலைக்குரிய மொ.உ.உற்பத்தி நடைமுறைச் சந்தை விலைகளில் ரூ.104,347 இற்கு 14.1 சதவீதத்தினால் அதிகரித்தது. ஐ.அ.டொலர் நியதிகளில் தலைக்குரிய மொ.உ.உற்பத்தி ஐ.அ.டொலர் 948 இலிருந்து முதற்தடவையாக ஐ.அ.டொலர் 1,000 இனை விஞ்சி ஐ.அ.டொலர் 1,031 இற்கு 8.8 சதவீதத்தினால் அதிகரித்தது.

- **வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானத்திற்காக சீராக்கம் செய்யப்பட்ட மொ.உ.உற்பத்தி என வரைவிலக்கணம் செய்யப்படும் மொத்தத் தேசிய உற்பத்தி (மொ.தே.உற்பத்தி) உண்மை நியதிகளில், 2003 இன் 6.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 5.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணிகள் வருமானம் முன்னைய ஆண்டுகளைப் போன்று எதிர்க்கணியமாக இருந்தபோதும் கடந்த சில ஆண்டுகளில் காணப்பட்ட முன்னேற்றங்களுடன் ஒப்பிடுகையில் 2004 இல் 19 சதவீதத்தினால் மேலும் வீழ்ச்சியடைந்தது. இதற்கு 2004 இல் வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் மற்றும் வெளிநாட்டவர்களால் தாய்நாட்டிற்கு அனுப்பப்பட்ட இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்கள் என்பவற்றின் பேரிலான உயர்ந்த வெளிப் பாய்ச்சல்களே முக்கிய காரணமாக அமைந்தன.

- **கடந்த ஐந்து தசாப்த காலத்தில், இலங்கையின் பொருளாதாரம் 4.2 சதவீதம் கொண்ட சராசரி வீதத்தில் வளர்ச்சியடைந்துள்ளதெனினும், வளர்ச்சியை ஊக்குவிக்கும் காரணிகளில் ஆழமாக வேர்விட்டுள்ள குறைபாடுகளின் காரணமாக நாட்டை உயர்ந்த வளர்ச்சிப் பாதைக்கு உயர்த்துவதற்கு முடியாமல் போயிற்று.** தேவைப்படும் விரைவான வளர்ச்சிக்கு பொருளாதார உட்கட்டமைப்பின் அபிவிருத்தியானது தொடர்ச்சியான சந்தை, நிறுவன ரீதியான, மற்றும் உட்கட்டமைப்பு சீர்திருத்தங்ளினூடாக விரைவுபடுத்தப்பட வேண்டும். சமூக உட்கட்டமைப்பு சீர்திருத்தங்களை மேற் கொள்வதன் மூலம் போதுமானளவு உயர்ந்த மட்ட மனித மூலவளத்தை உருவாக்க முடியுமாகையால் குடித்தொகையில் ஒரு சில துறையினரின் எதிர்ப்புக்களுக்கிடையிலும் இது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற அதேவேளை, அவற்றின் நன்மைகள் பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டப்பட்டு வருகின்றது. தொழில் நுட்பம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் பல்வேறு துறைகளிலும் சிறியளவில் பரவி வருகின்றன. பல அரச அமைப்புக்கள் மோசமான தெரிவுகள், ஒழுக்க தீங்குகள், மிகக் குறைந்தளவு ஆளுகை மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை போன்ற வளர்ச்சிக்குரிய அடையாளங்களுக்கு எதிரான தன்மைகளை எடுத்துக்காட்டுவதற்குப் புறம்பாக, கடுமையான வினைத்திறனின்மைப் பிரச்சனைகளினாலும் பாதிக்கப்பட்டுள்ளன. சிறந்த மூலவள ஒதுக்கத்தினை உறுதிப் படுத்துவதற்கு அவசியமான சந்தைகள் பொருளாதார நடவடிக்கைகளின் பெரும்பாலான துறைகளில் குறிப்பாக நிதியியல் துறையில் குறைந்த செயற்பாட்டுடனேயே தொடர்ந்தும் காணப்படுகின்றன.

- **மொ.உ.உற்பத்தியின் பிரதேச வாரியான பரம்பல், 2003 இல் மொ.உ.உற்பத்தியில் 49 சதவீதத்திற்கு மேல்மாகாணம் பங்களித்த மையைக் காட்டியது.** பொருளாதார நடவடிக்கைகள் வழமையாக சிறந்த சமூக மற்றும் பொருளாதார உட்கட்டமைப்பினைச் சுற்றி குவிந்திருப்பதனால் இப்பாரிய பங்கு விளங்கிக் கொள்ளத்தக்கதாகும். அத்தகைய வசதிகளை மேல்மாகாணம் வழங்குகிறது. இலங்கை எந்த ஒரு உள்நாட்டு வர்த்தக மற்றும் முதலீட்டுத் தடைகளையும் கொண்டிராமையினால் தற்போதுள்ள பிரதேச ரீதியான சமமற்ற தன்மைகளுக்கு மோசமான உட்கட்டமைப்பு வசதிகள், முக்கியமாக வீதிகள், மின்வலு மற்றும் தொலைத் தொடர்பூட்டல் போன்றனவே தடைகளாக விளங்கின. எனவே, பிரதேச ஏற்றத் தாழ்வுகளை களைவதற்கு பரந்தளவிலான பொதுவசதிகளையும் உட்கட்டமைப்பு வசதிகளையும்

Central Bank of Sri Lanka
17694
17 MAY 2005
LIBRARY
INFORMATION CENTRE
Information Department

மாகாணங் களுக்குக் கிடைக்கச் செய்வது அவசியமானதாகும்.

- **தொடர்ந்து வந்த அரசாங்கங்களினால் முயற்சிகள் எடுக்கப்பட்டபோதும், இலங்கையின் வருமானப் பங்கீடு சுதந்திரத்திற்குப் பின்னரான காலப்பகுதி முழுவதிலும் ஒப்பீட்டு ரீதியில் மாற்றமெதுவுமின்றியே காணப்படுகின்றது.** இலங்கை மத்திய வங்கியினால் காலத்திற்குக் காலம் நடாத்தப்படும் நுகர்வோர் நிதி அளவீட்டினால் எடுத்துக் காட்டப் பட்டவாறு வருமானப் பங்கீட்டிலான சமமான அல்லது சமமற்ற தன்மையின் அளவினை எடுத்துக் காட்டுகின்ற கினி குணகமானது 1953 ஆம் ஆண்டு தொடக்கம் ஏறத்தாழ 0.5 கொண்ட குறுகிய வீச்சிலேயே காணப்படுகிறது. வருமானப் பங்கீட்டிலான புலனாகக் கூடிய முன்னேற்றமற்ற தன்மைக்கு இக்காலப்பகுதியில் இலங்கையினால் அடையப்பட்ட குறைந்த பொருளாதார வளர்ச்சியே காரணமாகும். இதன் விளைவாக, புதிய தொழில் உருவாக்கங்கள் மிகச்சொற்ப அளவில் காணப்பட்டதுடன் இதன் காரணமாக சாதாரணமான அபிவிருத்தி செய்முறைகளினூடாக வறிய மக்கள் வறுமைக்கோட்டைக் கடக்கின்ற இயலாற்றல் மிகக் குறைவாகக் காணப்பட்டது. மோசமாக இலக்கிடப்பட்ட ஏழைகள் சார்பான கொள்கைகளும் கூட இப் பிரச்சனைகளை ஒழிப்பதற்கு உதவவில்லை. எனவே இலக்கிடலில் செயற்றிறனை அதிகரிப்பதற்கும் வளர்ச்சியை அதிகரிப்பதற்கும் வளர்ச்சி சார்ந்த-ஏழைகள் சார்பான கொள்கையினை தொடர்ந்து பின்பற்றுவது முக்கியமானதாகும்.

## உற்பத்தி மற்றும் துறைவாரியான செயலாற்றம்

**வேளாண்மை:**

- **2003 இல் மிதமாக வளர்ச்சியடைந்த வேளாண்மைத்துறை, 2004 இல் வீழ்ச்சியடைந்தமைக்கு நெல் மற்றும் தெங்கு உற்பத்தி குறைவடைந்தமையே காரணமாகும்.** வடகீழ் பருவக் காற்று தவறிப்போனமை மற்றும் 2004 இல் தென்மேல் பருவக்காற்று மழை கிடைப்பதில் ஏற்பட்ட தாமதம் என்பனவற்றால் விளைவிக்கப்பட்ட நீண்ட வரட்சியே இவ்வீழ்ச்சிக்கு முக்கியமாகப் பங்களித்தது. எனினும் கிடைக்கத்தக்க நீரை உச்ச அளவில் பயன்படுத்தும் விதத்தில் வேளாண்மையாளர்கள் நெல்லிலிருந்து ஏனைய துணை உணவுப் பயிர்களுக்கும், காய்கறி செய்கைக்கும் மாறிக் கொண்டமையினால் இவற்றின் உற்பத்தி மேம்பாடடைந்தது. 2003 மேயில் ஏற்பட்ட வெள்ளச் சேதத்திலிருந்து தேயிலை உற்பத்தி ஓரளவிற்கு மீட்சியுற்ற வேளையில், கவர்ச்சிகரமான பன்னாட்டு சந்தை விலைகளுக்கு இசையும் வகையில் இறப்பர் உற்பத்தி மேலும் அதிகரித்தது. 2003 இல் உயர் வீதத்தினால் வளர்ச்சியடைந்த தெங்கு உற்பத்தி 2004 இல் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. சீனி உற்பத்தி தனியார் துறையின் தீவிரமான பங்கேற்புடன் தொடர்ந்தும் அதிகரித்தது. விலங்கு வளர்ப்புத்துறை கலப்பான செயலாற்றத்தினைக் காட்டியவேளையில் கடற்றொழில் துறை சிறிதளவு முன்னேற்றத்தினைக் காட்டியது.

- **2004 இல் மொ.உ.உற்பத்தியில் வேளாண்மையின் பங்கு 17.9 சதவீதமாக இருந்தது.** இப்பங்கு, மற்றைய இரு துறைகளினாலும் செய்யப்பட்ட பங்களிப்புக்களிலும் பார்க்க ஒப்பீட்டு ரீதியில் குறைவானதாக இருந்தபோதும் பிறநாடுகளின் வேளாண்மைப் பங்குடன் ஒப்பிடுகையில் கணிசமானதாக இருந்தது. அபிவிருத்தி யடைந்த நாடுகளில் இதன் பங்கு 1-2 சதவீதத்தில் குறைவாகக் காணப்பட்ட வேளையில், விரைவாக அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளில் இது ஏறத்தாழ 10 சதவீதமாக காணப்படுகின்றது.

- **கடந்த பல ஆண்டுகளாக மொ.உ.உற்பத்தியில் வேளாண்மையின் பங்கு பன்னாட்டு ரீதியாகக் குறைவடைந்தே வந்திருக்கின்றது.** இப் பங்கு வீழ்ச்சியடைகின்றமைக்கு வேளாண்மை உற்பத்திகளுக்கான கேள்வியின் வருமான-நெகிழ்ச்சியற்ற தன்மை, பொருளாதார அளவுச் சிக்கனங்களை அடைவதனைத் தடுக்கின்ற துண்டாடப்பட்ட வரையறுக்கப்பட்டளவு நிலம், மற்றைய மனித மூலதன செறிவுத் துறைகளுக்கு தொழிலாளர் பெயர்ந்து செல்லுதல் மற்றும் கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளுடன் உற்பத்திக் காரணிக்காக போட்டியிடுவதில் காணப்படும் இடர்ப்பாடு போன்ற வேளாண்மையின் வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் மட்டுப்படுத்துகின்ற இத்துறையில் காணப்படும் பல முக்கிய குறைபாடுகளே காரணமாகும். இவ் வரையறைகளை கருத்திற்கொண்டு சிங்கப்பூர் போன்ற மட்டுப்படுத்தப்பட்ட நிலப்பரப்பைக் கொண்ட சில நாடுகள் மரபுரீதியான வேளாண்மை யிலிருந்து விலகியிருப்பதுடன் ஐக்கிய அமெரிக்கா, யப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற மற்றைய நாடுகள் வேளாண்மைத் துறையினைப் பாதுகாக்க கணிசமான உதவு தொகைகளை வழங்குகின்ற அதேவேளையில் ஆராய்ச்சிகளினூடாக பெறுமதி கூட்டப்பட்ட வேளாண்மையினை ஊக்குவித்தும் வருகின்றன.

1004

- **வேளாண்மை உற்பத்தியாக்கத்தினை உயர்த்துவதற்கான முக்கியமான விடயமாக உயர்ந்த விளைச்சலைத் தருகின்ற வர்க்கங்கள், மேம்பட்ட நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ நடைமுறைகளை அறிமுகப் படுத்தல், சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் செயற்கைச் சூழல் பயிர்ச்செய்கை போன்ற புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தல் பன்னாட்டு ஒத்துழைப்பினூடாக ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பவியல் அபிவிருத்தி மற்றும் முன்னேற்றங்கண்ட பயிர்ச்செய்கை நடைமுறைகளை பின்பற்றுதல் மற்றும் வளமாக்கி பூச்சிகொல்லிகள், நீர் போன்ற உள்ளீடுகளை வினைத்திறன் மிக்க முறையில் பயன்படுத்தல் என்பன விளங்குகின்றன.** கடந்த காலங்களில் அரசாங்கத்தினால் வழிநடத்தப்படும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களினூடாக இப் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண இலங்கை முயற்சித்து வந்திருக்கிறது. அத்தகைய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் பல்வேறு நவீன அம்சங்களை உருவாக்கிய வேளையில் அவை உலகளாவிய அபிவிருத்திகளுக்கு இணையான வேகத்தில் இடம்பெற்றிருக்காமைக்கு உண்மையில், ஏனைய நாடுகளில் விருத்தி செய்யப்படும் பின்பற்றல் அல்லது பிரதியிடல் ஆகிய கூடியளவிற்கு செயற்றிறன் வாய்ந்த வழி முறைகளை மேற்கொள்வதிலும் பார்க்க மரபுரீதியான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதில் கூடியளவு நாட்டம் கொண்டிருந்தமையே காரணமாகும். மரபு ரீதியான ஆராய்ச்சிகள் விரும்பத்தக்க பெறுபேறுகளை அளிக்க நீண்டகாலம் எடுக்குமென்பதனாலும் இத் துறையில் காணப்படும் பிரச்சனைகள் மிகத் தீர்மானமானவையாகக் காணப்படுவதனால் நீண்டகாலம் காத்திருக்க முடியாது. எனவே மிக அவசரமான உபாயமானது ஏற்கனவே அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள முன்னேற்றங் கண்ட தொழில்நுட்பங்கள், உயர்ந்த விளைச்சல் தரும் வர்க்கங்கள் மற்றும் கள மட்டங்களிலான வேளாண்மை நடைமுறைகள் என்பனவற்றை பின்பற்றுவதாகக் காணப்படுகிறது. இந் நோக்கத்திற்காக, உள்நாட்டு தனியார் தொழில் முயற்சிகளுக்கும் அயல் நாடுகளிலுள்ள இணைக்கிணையாளர்களுக்குமிடையில் பயன் பெறத்தக்க ஒத்துழைப்பினை ஊக்குவித்தல் வேண்டும்.

- **வேளாண்மைத் துறையின் அபிவிருத்திக்கான இன்னொரு தேவைப்பாடு யாதெனில் சந்தை சார்ந்த, நிலையான, நன்கு குறித்துரைக்கப்பட்ட வர்த்தகக் கொள்கையொன்றைப் பின்பற்றுவதாகும்.** குறிப்பிட்ட சில வேளாண்மைப் பண்டங்கள் மீதான வர்த்தகக் கொள்கையானது, குறிப்பாக இறக்குமதித் தீர்வையானது வாழ்க்கைச் செலவினைக் குறைத்தல் மற்றும் வேளாண்மையாளர் வருமானத்தினை உயர்த்துதல் ஆகிய ஒன்றுக்கொன்று முரணான சிறந்த குறிக்கோள்களை அடைவதற்காக 2004 இல் பல தடவைகள் திருத்தப்பட்டது. அத்தகைய அவ்வப்போதைக்கான கொள்கை மாற்றங்கள், வேளாண்மைத் துறையின் நீண்டகால உறுதிப்பாட்டிற்கு அவற்றின் விலைத்திரிபுத் தாக்கங்களினூடாக தீங்கிழைத்துவிடும்.

**கைத்தொழில்**

- **2004 இல் கைத்தொழில் துறை 5.2 சதவீதமான வளர்ச்சியைப் பதிவு செய்தது.** மின்வலு மற்றும் நீர் துணைத்துறைகள் தவிர்ந்த, கைத்தொழில் துறையின் அனைத்து துணைத்துறைகளும் இதன் உயர்ந்த செயலாற்றத்திற்கு பங்களித்தன.

- **2004 இல் தயாரிப்புத் துறையின், பாரிய துணைத்துறையான தொழிற்சாலைக் கைத்தொழில்கள் 6.1 சதவீதத்தினால் விரிவடைந்தன.** இத்துணைத்துறை 2004 இன் மொத்த கைத்தொழில் வளர்ச்சியில் 59 சதவீதத்திற்கு பங்களித்தது. வளர்ச்சியானது ஆண்டின் முதலரைப் பகுதியில் மிதமாகக் காணப்பட்டதெனினும், ஆண்டின் பின்னரைப் பகுதியில் வலுவாக அதிகரிக்கத் தொடங்கியது. கடந்த காலங்களைப் போன்றே, தனியார் துறைக் கைத்தொழில்கள் 2004 இலும் தொழிற்சாலைக் கைத்தொழில் துறையின் வெளியீட்டில் மிக உயர்ந்த பாரிய பங்கான 96 சதவீதத்திற்கு வகை கூறியது.


- **2004 இல் தொழிற்சாலைக் கைத்தொழில்களில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு முக்கியமான பங்களிப்புக்கள் (90 சதவீதத்திற்கு மேல்) ஒன்பது முக்கிய கைத்தொழில் வகைகளுள் நான்கிலிருந்து, அதாவது புடவை, அணியும் ஆடைகள், மற்றும் தோல் உற்பத்திகள்; உணவு, குடிபானம், மற்றும் புகையிலை உற்பத்திகள்; இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள்; மற்றும் உலோகமல்லா உற்பத்திகள் என்பனவற்றி லிருந்து கிடைத்தது.** 2004 இல் ஏற்றுமதிச் சந்தை சார்ந்த மற்றும் உள்நாட்டுச் சந்தை சார்ந்த கைத்தொழில்கள் இரண்டும் நன்கு செயலாற்றின. இவை உலகளாவிய பொருளாதார மீட்சி, அதிகரித்த உள்நாட்டு நுகர்வோர் கேள்வி, குறைந்த வட்டி வீத அமைப்பு, தொடர்ச்சியான யுத்த நிறுத்தம், மற்றும் தொலைத்தொடர்பூட்டல், தகவல் தொழில்நுட்பம், துறைமுகப் பணிகள் போன்ற

சிறப்புக் குறிப்பு 3

## இலங்கையில் போட்டித்தன்மையை ஊக்குவித்தல்

ஒரு நாட்டின் போட்டித்தன்மை என்பது உயர்நிலை அல்லது மேன்மை நிலையினை எய்துவதனைக் குறிக்கோளாகக் கொண்டு அதன் சொத்துக்கள், மக்கள், செயன்முறைகள் என்பவற்றை செயற்றிறனுடன் முகாமைப்படுத்துவதனூடாக பெறுமதி அதிகரிப்பினை தோற்றுவிக்கக்கூடிய அந்நாட்டின் ஆற்றல் என வரையறுக்கப்படுகின்றது. நாடொன்றின் சுபீட்சமும் அதன் மக்களது வாழ்க்கைத் தரமும் போட்டித்தன்மையினால் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. போட்டித் தன்மையென்பது ஒப்பீட்டு ரீதியானதேயன்றி முழுமையானதன்று. மேலும் இது நிலையானதல்ல மாற்றமடைவதாகும். அரசாங்கத்தின் கொள்கைகளும் வியாபாரச் சூழலுமே போட்டித் தன்மையைப் பெரிதும் தீர்மானிக்கின்றன. ஏனெனில் போட்டிச் சூழலொன்றில் செயற்படும் மற்றும் மறுதலிக்கும் ஆற்றலை நிர்ணயிப்பனவாகவும் தேவைப்படுகின்ற தந்திரோபாய மாற்றங்களை நடைமுறைப்படுத்த மக்களுக்கு உள்ள ஆற்றலையும் நிறுவனங்களது நவீனத்துவத்தினையும் நிர்ணயிப்பன வாகவும் இவை காணப்படுகின்றன. இக்காரணிகள் பொருளாதாரமொன்றில் தொடர்ச்சியாக காணப்பட்டாலேயே போட்டித் தன்மையை தொடர்ந்து பேண முடியும்.

நாடொன்றின் போட்டித் தன்மையென்பது முழு பொருளாதாரத்தினதும் போட்டித்தன்மையாகும். நாடுகள் அவற்றின் போட்டித் தன்மைக்கேற்ப குறைந்த மட்டத்திலிருந்து உயர் மட்டம் வரை வகைப்படுத்தப்படுகின்றன. எனினும் பொருளாதார மொன்றிலுள்ள தனிப்பட்டவொரு நிறுவனங்களே நாட்டின் போட்டித்தன்மையை நிர்ணயிக்கும் பொருட்களையும் பணிகளையும் உற்பத்தி செய்கின்றன. பொருளாதாரத்தின் ஒவ்வொரு துறை களிலும் தொழில்படுகின்ற நிறுவனங்கள் மட்டத்திலான தீர்மானமெடுத்தல் செய்முறைகளினாலேயே போட்டித்தன்மை உருவாக்கப்படுகின்றது. எனினும் தனிப்பட்ட நிறுவனங்களது தீர்மானமெடுத்தல் செய்முறையில் பொருளாதார சூழல் பெருமளவான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. எனவே நாடொன்றின் போட்டித்தன்மையை மேம்படுத்து வதற்கு அவசியமானதொரு நிபந்தனையாக பொருத்தமான கொள்கைகளினூடாக உறுதி வாய்ந்த பேரின பொருளாதார மற்றும் நிறுவன ரீதியான சூழலை பேணுதல் காணப்படுகின்றது. போட்டித் தன்மையை ஊக்குவிப்பதற்கான கொள்கைகள் முறை




குறிப்பு. 14 காரணிகளின் பட்டியலிலிருந்து பதிலிறுத்தவர்கள் தங்கள் நாட்டில் வியாபாரம் செய்வதற்கு மிகப் பிரச்சனையாகக் காணப்படும் ஐந்து காரணிகளைத் தெரிவுசெய்யுமாறும் அவற்றை 1இலிருந்து (மிகப்பிரச்சனையானவை) 5வரை நிரல்படுத்துமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டனர். வரை படத்திலுள்ள சட்டங்கள் பதிலிறுத்தவர்கள் அவர்களது நிரல்படுத்தலின்படி வழங்கிய கணிப்பினைக் காட்டுகின்றது.

மூலம். உலகளாவிய போட்டித் தன்மை பற்றிய அறிக்கை 2004 -2005 உலகப் பொருளாதார மன்றம்

சார்ந்த இடர்நேர்வுகளை குறைத்தல் மற்றும், நிறுவனங்கள் தமது போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்கு பல்வேறுபட்ட மாற்று வழிகளிலிருந்து தெரிவுகளை மேற்கொள்ள ஏதுவான உறுதியானதொரு வியாபாரச் சூழலையும் வழங்கல் என்பனவற்றில் கவனம் செலுத்த வேண்டும். நிறுவனங்கள் தமக்கு மிகச் சிறந்தது எது என்பதனை தீர்மானித்து இறுதியில் போட்டியின் விளைவினை நிர்ணயிக்கின்றன. இதற்கு மாறாக நிறுவனங்களை அவற்றின் தீர்மானமெடுத்தலில் கட்டாயப்படுத்தும் அல்லது பணிக்கும் கொள்கைகள் போட்டி மனோபாவத்தை பாதிப்பதாகவே அமையும்.

உதவு தொகைகளை வழங்குவதனூடாக அல்லது கூலி மட்டங்களை உயராது வைத்திருப்ப தனூடாக நாடொன்றின் சந்தைப் பங்கினை விரிவுபடுத்துவதானது அதன் போட்டித் தன்மையை நிலைத்திருக்கத்தக்க விதத்தில் அதிகரிக்க உதவாது என்பதனை மிகவும் போட்டித்தன்மை வாய்ந்த உலக

**சிறப்புக் குறிப்பு 3 (தொடர்ச்சி)**

நாடுகளின் அனுபவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. உதவு தொகைகள் கைத்தொழில்களுக்கு தற்காலிக பாதுகாப்பையே வழங்குவதனால் போட்டித் தன்மையை அதிகரிப்பதில் அவை செயற்றிறனற்றன என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. இதற்கென பயன்படுத்தப்படும் மூலவளங்களை வேறு நோக்கங்களுக்கு பெருமளவு செயற்றிறனுடன் பயன்படுத்தப்பட முடியும். குறிப்பிட்ட துறைகளை இலக்காகக் கொண்டு செயற்கையான விலை சீராக்கங்களை மேற்கொள்ளுதல் அல்லது உள்ளீடுகளின் விலைகளை செயற்கையாகக் குறைத்தல் என்பன நாடொன்றின் போட்டித்தன்மையை மேம்படுத்த உதவாது என்பதுவும் மேலும் நிரூபிக்கப்பட்டுள்ளது. நிலைத்திருக்கக்கூடிய போட்டித்தன்மையானது உற்பத்தித்திறன் அதிகரிப்புக்களினூடாக மாத்திரமே உருவாக்கப்படுகின்றது. உயர்ந்த உற்பத்தித் திறனானது நாடொன்று உயர் கூலி மட்டங்கள், வலுவானதொரு நாணயம், மூலதனத்தின் மீதான கவர்ச்சிகரமான ஈட்டம் என்பனவற்றுடன் மக்களின் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தினையும் கொண்டிருப்பதற்கு ஆதரவளிக்கும். எனவே அரசாங்கத்தின் பங்கானது உறுதி வாய்ந்த பேரின பொருளாதார மற்றும் நிறுவன ரீதியான கட்டமைப்பை ஏற்படுத்துவதாக இருப்பதுடன் பொருளாதாரத்தில் போட்டித் தன்மையை மேம்படுத்துவது தொடர்பிலான வியாபார ரீதியான தீர்மானங்களை மேற்கொள்ளல் நிறுவனங்களது பொறுப்பில் விடப்படல் வேண்டும்.

நிறுவன மட்டத்தில் போட்டித் தன்மையை அடைவது மீதான மரபு ரீதியான கோட்பாடுகள் பெரிதும் தொழிலாளர், மூலப்பொருள் மற்றும் பிற பயன்பாட்டு கிரயங்களை குறைத்தல், விநியோக நேரத்தினை மிகவும் குறைத்தல் மற்றும் உற்பத்தித் தரத்தை அதிகரித்தல் என்பவற்றின் மீதே பெருமளவு கவனம் செலுத்தின. எனினும் அதிகரித்த போட்டி மிக்க தற்போதைய சந்தைச் சூழலில் இக்காரணிகள் மாத்திரம் சர்வதேச சந்தைகளில் போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்கு போதுமானவையல்ல. இதற்கு மேலதிகமாக நாட்டில் போட்டித்தன்மை மிக்க கலாச்சாரமொன்றினை கட்டியெழுப்புவதற்கு சுதந்திர சந்தை கொள்கைகளை தொடர்வதற்கான உறுதியான அரசியல் திடசங்கற்பம், தெளிவான வர்த்தக, முதலீட்டு மற்றும் நாணயக் கட்டுப்பாட்டுச் சட்டங்கள், தரமிக்க போதுமானளவு உட்கட்டுமான வசதிகள், நியாயமானதும் பிரயோகிக்கத் தக்கதுமான ஒழுங்கு முறைப்படுத்தல் விதிமுறைகள், சிறியதும், திறமை மிக்கதுமான சிவில் நிருவாகம் சுயாதீனமானதும், திறன் மிக்கதுமான நீதி முறைமை, மக்களது மனப்பாங்கை மாற்றுதல், சமத்துவமான செயற்பாட்டு தளத்தை உருவாக்குதல் மற்றும் சிறந்த ஆளுகை ஆகிய பல வழங்கல் பக்க காரணிகளை நடைமுறைக்கிடுவது முக்கியமானதாகும். சட்டம் ஒழுங்கினை முறையாக நடைமுறைப்படுத்துவதும் நாட்டில் உறுதியானதொரு வியாபாரச்சூழலை உருவாக்குவதற்கு முக்கியமானதாகும்.

2004-2005 காலப்பகுதிக்கான உலகளாவிய போட்டித்தன்மை தொடர்பான அறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு இலங்கையின் வியாபார போட்டித்தன்மை தரவரிசை 2003 இன் 57 இலிருந்து 2004 இல் 68 ஆக மோசமடைந்தது. இவ் அறிக்கையின்படி ஸ்திரமற்ற கொள்கை, ஸ்திரமற்ற அரசாங்கம், கட்டுப்பாடு மிக்க தொழிலாளர் சட்ட விதிகள் போதுமானதற்ற உட்கட்டுமான வசதிகள் என்பன இலங்கையில் வியாபரத்தினை மேற்கொள்வதற்கு மிகவும் இடையூறாகவுள்ள காரணிகளாக காணப்படுகின்றன. இவற்றை வரைபடம் 1 இல் காணலாம். எனவே நாட்டின் வியாபார சூழலை மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்டு பிரச்சனைக்குரிய இக்காரணிகள் பரிமாணத்தினை மிகவும் குறைப்பதற்கு கொள்கை வகுப்பாளர்கள் கவனம் செலுத்தல் வேண்டும்.

அடிப்படைக் கைத்தொழில் உட்கட்டமைப்பு வசதிகளில் காணப்பட்ட முன்னேற்றம் மற்றும் இலகுபடுத்தப்பட்ட சுங்க நடைமுறைகள் என்பனவற்றிலிருந்து நன்மைகளைப் பெற்றுக் கொண்டன. ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களில் காணப்பட்ட போட்டித் தன்மைக்கு உற்பத்தியாக்கத்தில் ஏற்பட்ட மேம்பாடு மற்றும் உற்பத்திச் செலவுகள் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டமை என்பன வசதியளித்தன.

- **கடந்த இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக நடைமுறையிலிருந்த புடவை மற்றும் அணியும் ஆடைகள் அனுமதிப் பங்குமுறை 2005 சனவரி 1 ஆம் நாளிலிருந்து முடிவிற்கு வந்தது.** எனினும், 2005 இல் கைத்தொழில்கள் மீதான இதன் தாக்கம் கணிசமானதாக இருக்க மாட்டாது. குறைந்தது ஒரு தசாப்தத்திற்கு முன்பே இது அறிவிக்கப்பட்டமையால் அனுமதிப்பங்கற்ற உலகில்

போட்டித்தன்மை மூலம் மேற்கொள்ளப்படுகின்ற வர்த்தக அமைப்பொன்றினை எதிர்நோக்கும் விதத்தில் இலங்கையில் மீளமைத்தல் செயற்பாடுகள் படிப்படியாக இடம்பெற்று வருகின்றன. மீளமைத்தல் செயற்பாடானது, உற்பத்தித் தனிச்சிறப்பு, கையேற்பு மற்றும் இணைப்புக்கள், பதனிடல் மேம்பாடுகள், தொழில்நுட்ப அபிவிருத்திகள், தேர்ச்சி அபிவிருத்திகள், முக்கியமான கூட்டிணைப்பினை உருவாக்குதல் மூலப்பொருள் மற்றும் துணைப்பொருட்கள் உற்பத்திகளான கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல் இயலாற்றலை மேம்படுத்தல் ஆகிய வழிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் விளைவாக, கைத்தொழிலானது விலை, தரம் மற்றும் விரைவான விநியோகம் என்பனவற்றினூடாக பன்னாட்டுச் சந்தைகளில் உயர்ந்த நன்மதிப்பினை உருவாக்கக் கூடியதாக இருந்தது.

**பணிகள்**

- **கடந்த பல ஆண்டுகளாக பணிகள் துறையானது அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பல நாடுகளிலும் காணப்படுகின்றவாறு இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு தூண்டுதலளித்து வருகின்றது. 2004 இல் பணிகள் துறை 7.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து பொருளாதார வளர்ச்சியின் 77 சதவீதத்திற்கு பங்களித்தது.** இத்துறையானது மொத்த வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பாளராக காணப்பட்ட மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், சுற்றுலாவிடுதி மற்றும் உணவகம் (25 சதவீதம்), போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் நிதியியல், தொடர்பூட்டல் (34 சதவீதம்) மற்றும் உண்மைச்சொத்து மற்றும் வியாபாரப் பணிகள் (12 சதவீதம்) என்பனவற்றை உள்ளிட்ட பரந்தளவிலான பணிகளை உள்ளடக்கியிருக்கிறது.

- **2004 இல் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக துணைத் துறையில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி இரண்டுடனும் தொடர்பான வர்த்தகம் குறிப்பிடத்தக்களவில் வளர்ச்சியடைந்து பணிகள் துறைக்கு பெறுமதி சேர்த்தது.** ஏற்றுமதி வர்த்தகம் 7.7 சதவீதத்தினாலும், இறக்குமதி வர்த்தகம் 9 சதவீதத்தினாலும் வளர்ச்சி கண்டன. 2004 இல் உள்நாட்டு வர்த்தக துணைத்துறை, 1.7 சதவீதத்தினால் மிதமாக வளர்ச்சியடைந்து வேளாண்மையில் பொருட்களின் உற்பத்தியில் ஏற்பட்ட பொதுவான வீழ்ச்சியைப் பிரதிபலிக்கிறது. சுற்றுலா வருகைகள் 13.1 சதவீதத்தினால் அதிகரித்து 566,202 கொண்ட உச்ச மட்டத்தை அடைந்தமையின் மூலம் கிடைத்த நன்மைகளைப் பயன்படுத்தி 2004 இல் சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்களின் துணைத்துறை 15.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

- **2004 இல் போக்குவரத்து களஞ்சியப்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல் துறையின் கூட்டப்பட்ட பெறுமதி 13.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** இவ்வளர்ச்சியானது தொலைத் தொடர்பூட்டல் மற்றும் சரக்கு கையாளல் துணைத்துறைகளின் குறிப்பிடத்தக்க செயலாற்றத்தினால் பெறப்பட்டது. உயர்ந்த வேகத்தில் தொடர்ச்சியாக அதிகரித்து வந்த தொலைத் தொடர்பூட்டல் துணைத்துறை 2004 இல் 31 சதவீதத்தினால் மேலும் விரிவடைந்தது. 2004 இல் துறைமுகப் பணிகள் 12.3 சதவீதமான ஆரோக்கியமான வளர்ச்சியைப் பதிவு செய்து கப்பற்சரக்கு நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவினை எடுத்துக்காட்டியது. பொருளாதாரத்திலுள்ள பாரிய பணிகள் துறைகளில் ஒன்றான போக்குவரத்து துணைத்துறை 4.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

- **நிதியியல் பணிகள், உண்மைச்சொத்து மற்றும் வியாபாரப் பணிகள் துறை 2003 ஆம் ஆண்டின் 8.8 சதவீதத்திற்கெதிராக 2004 இல் 5.7 சதவீதத்தினால் வளர்ச்சி யடைந்தது.** இம்மெதுவான போக்கிற்கு, கடந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்ட உயர்ந்த வளர்ச்சிக்கு பின்னர் வங்கித்தொழில் துணைத்துறையில் காணப்பட்ட மெதுவான வளர்ச்சியே முக்கிய காரணமாகும். குறைந்த வட்டி வீதங்களின் காரணமாக வங்கித்தொழில் துறையின் கொடுகடன் வளர்ச்சி 20 சதவீதத் திற்கும் உயர்வாக இருந்தபோதும், மைய வங்கித்தொழில் நடவடிக்கைகளிலிருந்து உழைக்கப்பட்ட தேறிய வட்டி வருமானத்தின் வளர்ச்சி கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைவாக இருந்தது. மேலும், பிணையங்களின் வர்த்தகப்படுத்தல் மூலமான இலாபங்கள் வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக வட்டியல்லா வருமானமும் மிகக்கூடுதலாக வீழ்ச்சியடைந்தது. காப்புறுதி, குத்தகையிடல் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துணைத் துறையும் வங்கித்தொழில் துணைத்துறையினை விட கூடுதலாக செயலாற்றின.

## நுகர்வு, சேமிப்புக்கள் மற்றும் முதலீடு

- **2004 இல் மொத்த உள்நாட்டுச் செலவினம் 18.4 சதவீதத்தினால் அதிகரித்தது.** தேசிய வருமானக் கணக்கீட்டில், ரூ.2,029 பில்லியன் கொண்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியை மொத்த உள்நாட்டு கேள்வியும், தேறிய பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளின் மூலம் அளவிடப்பட்ட

அட்டவணை 1.3

**கூட்டுக்கேள்வயும் சேமிப்பமுதலீட்டு இடைவெளியும்– 2003– 2004**

| விடயம் | ரூபா பில்லியன் | | மொ.உ.உ வின் சதவீதமாக | |
|---|---|---|---|---|
| | 2003 | 2004 (அ) | 2003 | 2004(அ) |
| **1. உள்நாட்டுக்கேள்வி** | **1,870.0** | **2,214.0** | **106.2** | **109.1** |
| 1.1.நுகர்வு | 1,481.2 | 1,706.8 | 84.1 | 84.1 |
| தனியார் | 1,341.9 | 1,542.1 | 76.2 | 76.0 |
| அரசு | 139.3 | 164.7 | 7.9 | 8.1 |
| 1.2. முதலீடு ( மொத்தஉள்நாட்டு மூலதன ஆக்கம்) | 388.8 | 507.2 | 22.1 | 25.0 |
| தனியார் | 295.1 | 402.6 | 16.8 | 19.8 |
| அரசு | 93.7 | 104.6 | 5.3 | 5.2 |
| **2. தேறிய வெளிநாட்டுக் கேள்வி** | **-108.8** | **-184.6** | **-6.2** | **-9.1** |
| பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 632.9 | 738.7 | 35.9 | 36.4 |
| பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் இறக்குமதிகள் | 741.7 | 923.3 | 42.1 | 45.5 |
| **3. மொத்தக் கேள்வி (மொ.உ.உ)(1)+(2)** | **1,761.2** | **2,029.4** | **100.0** | **100.0** |
| 4. உள்நாட்டுச் சேமிப்புக்கள் (3) - (1.1) | 280.0 | 322.6 | 15.9 | 15.9 |
| தனியார் | 338.2 | 400.8 | 19.2 | 19.8 |
| அரசு | -58.2 | -78.2 | -3.3 | -3.9 |
| 5. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் | -16.5 | -20.7 | -0.9 | -1.0 |
| 6. வெளிநாட்டிலிருந்தான தேறிய தனியார் நடைமுறை மாற்றல்கள் | 116.3 | 136.6 | 6.6 | 6.7 |
| 7. தேசிய சேமிப்புக்கள் (4) + (5) + (6) | 379.7 | 438.6 | 21.6 | 21.6 |
| **8. சேமிப்பு முதலீட்டு இடைவெளி** | | | | |
| உள்நாட்டு சேமிப்புக்கள் - முதலீடு (4) - (1.2) | -108.8 | -184.6 | -6.2 | -9.1 |
| தேசிய சேமிப்பு - முதலீடு (6) - (1.2) | -9.0 | -68.6 | -0.5 | -3.4 |
| 9. அலுவல்சார் கொடைகள் அற்ற வெளிநாட்டு நடைமுறைக் கணக்குக்குறை (2) + (5) + (6) | -9.0 | -68.6 | -0.5 | -3.4 |

(அ) தற்காலிகமானவை மூலம்: இலங்கை மத்திய வங்கி

வாறான தேறிய வெளிநாட்டுக் கேள்வியும், செலவினப் பக்கத்தில் பிரதிபலிக்கின்றன. மொத்த உள்நாட்டுக் கேள்வி அல்லது மொத்த உள்நாட்டுச் செலவினமென்பது உள்நாட்டு நுகர்வினையும் மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் அல்லது முதலீட்டினையும் உள்ளடக்கியதாகும். 2004இல் மொ.உ. செலவினம் ரூ.2,214 பில்லியனுக்கு 18.4 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் தேறிய வெளிநாட்டுக் கேள்வி எதிர்க்கணியமான ரூ.185 பில்லியனாக மதிப்பிடப்பட்டது.

- **நடைமுறைச் சந்தை விலைகளில் நுகர்வுச் செலவினம் ரூ.1,707 பில்லியன்களாக மதிப்பிடப்பட்டு 2003 இனை விட 15.2 சதவீதங் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது.** இது சராசரி விலை மட்டத்தில் ஏற்பட்ட 9.8 சதவீதம் கொண்ட அதிகரிப்பொன்றையும், உண்மை நுகர்வில் ஏற்பட்ட 4.9 சதவீதம் கொண்ட அதிகரிப்பொன்றையும் பிரதிபலிக்கிறது. இது உண்மை நியதிகளில் மொ.உ.உற்பத்தியில் ஏற்பட்ட வளர்ச்சியிலும் பார்க்கக் குறைவானதாகும். யுத்த நிறுத்தத்தினைத் தொடர்ந்து நுகர்விற்கான இதுவரை அடக்கி வைக்கப்பட்டிருந்த கேள்வியானது யுத்த நிறுத்தத்தின் முதலிரண்டு ஆண்டு காலப்பகுதியிலும் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுவிட்டது. மொத்த நுகர்வில், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக தனியார் நுகர்வு 2003 இன் 76.2 சதவீதத்திலிருந்து 2004 இல் 76 சதவீதத்திற்கு மிகச் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தவேளையில் அரச நுகர்வு 2003 இன் 7.9 சதவீதத்திலிருந்து 2004 இல் 8.1 சதவீதத்திற்கு அதிகரித்தது. ஆண்டின் பிற்பகுதியில் அத்தியாவசியமல்லாத நுகர்வுப் பொருட்கள் மீது விதிக்கப்பட்ட உயர்ந்த இறக்குமதித் தீர்வைகள் தனியார் நுகர்வு குறைவடைந்தமைக்கு பங்களித் திருக்கலாம்.

- **2004 இல் முதலீட்டிற்கான சூழல் தூண்டுதலளிப்பதாக இருந்ததுடன் குறைந்த வட்டி வீதம், தொடர்ச்சியான யுத்தநிறுத்தம் என்பன வற்றினால் ஊக்குவிக்கப்பட்டது.** நடைமுறைச் சந்தை விலைகளில், முதலீட்டுச் செலவினம் (மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம்) ரூ.507 பில்லியனாக மதிப்பிடப்பட்டதுடன், இது 2003 இனை விட 30.5 சதவீதம் அதிகமானதாக இருந்தது. எனினும், உண்மை நியதிகளில் முதலீட்டுச் செலவினம் 11.7 சதவீதத்தினால் மட்டும் அதிகரித்தமையானது முதலீட்டுச் செலவினத்தின் மீதான பணவீக்கத் தாக்கம் மிகப்பெரிதாக இருந்தமையினை எடுத்துக் காட்டுவதாக இருந்தது. உண்மை முதலீட்டில் ஏற்பட்ட வளர்ச்சியானது, 2003 இன் பின்னரைப் பகுதியிலிருந்து முதலீட்டாளர் நம்பிக்கை தொடர்ச்சியாக மேம்பட்டு வருவதன் அடையாள மாகக் காணப்படுகிறது. மொத்த முதலீட்டு மட்டம் வலுவான உயர்ந்த பொருளாதார வளர்ச்சி யொன்றினை எய்துவதற்கு தேவைப்படும் விரும்பத் தக்க மட்டத்திற்கு கீழேயே இன்னமும் காணப்பட்ட போதும், முதலீட்டு/மொ.உ. உற்பத்தி விகிதம் 2003 இன் 22.1 சதவீதத்திலிருந்து 25 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவிற்கு மேம்பட்டது.

- **தனியார் மற்றும் அரச சேமிப்புக்கள் இரண்டி னையும் உள்ளடக்குகின்ற உள்நாட்டுச் சேமிப்புக்கள் ரூ.323 பில்லியன்களாக மதிப்பிடப்பட்டதுடன் முன்னைய ஆண்டினை விட 15.2 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டின.** இவ்வதிகரிப்பிற்கு தனியார் சேமிப்புக்கள் 18.5 சதவீதத்தினால் மேம்பட்டமையே ஒரே காரணமாகும். தனியார் துறை சேமிப்பின் வளர்ச்சிக்கான தூண்டுதல், உயர்ந்த இலாபத்தன்மை மற்றும் சிறந்த செய லாற்றம் என்பனவற்றின் பின்னணியில் கம்பனித்

துறையின் சேமிப்புக்கள் அதிகரித்தமையின் மூலம் வழங்கப்பட்டது. கடந்த இரு ஆண்டுகளிலும் முன்னேற்றங்கண்ட அரசின் குறைச்சேமிப்புக்கள் 2004 இல் மோசமடைந்து அரசின் மீண்டெழும் செலவினம் அதிகரித்தமையினைப் பிரதிபலித்தது. தனியார் துறை சேமிப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு அரசதுறைக் குறைச் சேமிப்பில் ஏற்பட்ட அதிகரிப்பினை ஈடுசெய்யப் போதுமானதாக இருந்ததுடன் 2003 இல் 15.9 சதவீதமாக இருந்த மொத்த உள்நாட்டு சேமிப்பு விகிதம் (உள்நாட்டு சேமிப்பு/ மொ.உ.உற்பத்தி) 2004 இலும் அதே மட்டத்திலேயே காணப்பட்டது.

- **உள்நாட்டுச் சேமிப்புக்கள், தேறிய வெளிநாட்டு தனியார் மாற்றல்கள் மற்றும் வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் என்பனவற்றின் கூட்டுத்தொகையாக மதிப்பிடப்பட்ட தேசிய சேமிப்புக்கள் ரூ.439 பில்லியனுக்கு 15.5 சதவீதத்தினால் அதிகரித்தன.** தேசிய சேமிப்பு விகிதமும் (தேசிய சேமிப்புக்கள்/மொ.உ.உற்பத்தி) 2003 ஆம் ஆண்டின் அதேமட்டமான 21.6 சதவீதத்தில் காணப்பட்டது. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் தொடர்ந்தும் எதிர்க்கணியமாக இருந்ததுடன், இது உயர்ந்த உலகளாவிய வட்டி வீதங்களின் காரணமாக வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் அதிகரித்தமையின் விளைவாக மேலும் மோசமடைந்தது. தொழிலாளர் பணவனுப்பல்களை உள்ளடக்கிய தேறிய தனியார் மாற்றல்கள் உயர்ந்த வீதத்தில் மேம்பாடடைந்து வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானத்தின் எதிர்க்கணியத் தாக்கத்தினை தணித்தன.

- **இதன் விளைவாக, சேமிப்பு முதலீட்டு இடைவெளி 2003 இன் ஏறத்தாழ ரூ.8 பில்லியனிலிருந்து (மொ.உ.உற்பத்தியில் 0.5 சதவீதம்) 2004ல் ரூ.69 பில்லியனுக்கு (மொ.உ.உற்பத்தியில் 3.4 சதவீதம்) அதிகரித்தது.** இவ்விடைவெளி சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையாக பிரதி பலிக்கப்படுகிறது. 2004 இல் தேறிய மூலதன உட்பாய்ச்சல் மூலமாகக் கிடைத்த வெளிநாட்டுச் சேமிப்புக்கள் விரிவடைந்த சேமிப்பு-முதலீடு பற்றாக்குறையினை நிதியிட போதுமானதாக இல்லாமையினால் இவ்விடைவெளியினை நிரப்புவதற்கு நாடு அதன் வெளிநாட்டு ஒதுக்குகளை இழக்க வேண்டியிருந்தது.

### பொருளாதார சமூக உட்கட்டமைப்பு

- **விரைவான வளர்ச்சிக்கு மிக இன்றியமையாத தேவையாக விளங்கி வருவதற்குப் புறம்பாக, நன்கு அபிவிருத்தியடைந்த உட்கட்டமைப்பு முறையானது தொடரான வர்த்தகப் படுத்தத்தக்க பணிகளை உருவாக்குகின்றதுடன் வறுமை ஒழிப்பிற்குத் தேவையான தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சிக்கும் உதவுகின்றது.** ஆகவே, போதுமான உட்கட்டமைப்பு அபிவிருத்திகளை வழங்கத் தவறுவது பொருளாதார வளர்ச்சி யையும், வறுமை ஒழிப்பினையும் தடை செய்கின்ற அதேவேளையில் உள்நாட்டுக் கேள்வியையும் சிறந்த வசதிகள் கிடைக்கத் தக்கதாகவுள்ள வெளிநாடுகளுக்கு திசைதிருப்பி விடுகின்றது.

- **பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பில் காணப்படும் பொதுவான தரக் குறைவு பல்வேறு பலயீனங்களில் எடுத்துக் காட்டப்படுகிறது.** இலங்கையின் பன்னாட்டுப் போட்டித் தன்மையானது, முக்கிய கடல் வழிகளுக்கு மிக அணித்தாக இருக்கும் அதன் கேந்திர அனுகூலங்கள், உயர்ந்த கல்வி அறிவு வீதம், தீவின் இயற்கைப் பண்பு மற்றும் தாராள பொருளாதாரக் கொள்கைகள் என்பனவற்றைக் குறைத்து மதிப்பிடும் வகையில் பின்தங்கியிருக்கிறது. நலக்கவனிப்பு மற்றும் கல்வி போன்ற பல இன்றியமையாத பணிகளை நாடு வெளிநாட்டுச் செலாவணியினை குறிப் பிடத்தக்களவில் உழைக்கும் விதத்தில் அபிவிருத்தி செய்யக் கூடியதாக இருக்கின்றபோதும், அவை இலங்கையர்களினால் வெளிநாடுகளிலிருந்து அதிகரித்த அளவில் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றன. சரியான விலையிடல் இல்லாமையின் காரணமாக தண்ணீர் போன்ற இயற்கை மூலவளங்கள் உறுதியற்ற விதத்தில் சுரண்டப் பட்டு வருகின்றன. ஆகவே நிலைத்திருக்கக் கூடிய விதத்தில் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கக்கூடிய, அதேவேளையில் தொடர்ச்சியான போட்டித்தன்மையையும் வர்த்தகப்படுத்தக்கூடிய பணிகளையும் உருவாக்குகின்றதுமான உட்கட்டமைப்பு அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு புதிய முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

- **2004 இல் பொருளாதார உட்கட்டமைப்புக்களை வழங்குகின்ற பல தொழில் முயற்சிகள் வினைத்திறனை முன்னேற்றுவதற்காக முக்கியத்துவமிக்க தொழில்முயற்சிகள் முகாமைத்துவ முகவராண்மையின் கீழ் கொண்டுவரப்பட்டன.** இலங்கை மின்சபை, இலங்கைப் புகைவண்டிப் பகுதி, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனம் என்பனவற்றின் நிதியியல் செயலாற்றம் கடுமையாக மோசமடைந்தது. தேசிய பொருளாதாரத்திற்கு அவை வழங்குகின்ற பணிகளின் உபாயம் மிக்க

சிறப்புக் குறிப்பு 4

## எண்ணெய் விலை அதிகரிப்பின் தாக்கங்கள்

2004 இல் கடுமையாக அதிகரிக்கத் தொடங்கிய பன்னாட்டு எண்ணெய் விலைகள் 2005 இன் தொடக்கத்தில் வரலாற்றிலில்லாத உயர்ந்த மட்டத்தினை அடைந்தன. பிறென்ட் மசகெண்ணெய்யின் விலை 2004 ஒத்தோபரின் பீப்பாய் ஒன்றிற்கான ஐ.அ.டொலர் 52 கொண்ட முன்னைய உயர்ந்த விலையுடன் ஒப்பிடுகையில் 2005 மார்ச்சில் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 56 இற்கு அதிகரித்தது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மசகெண்ணெய்யின் சராசரி இறக்குமதி விலை 2003 இன் பீப்பாய் ஒன்றிற்கான ஐ.அ.டொலர் 29 உடன் ஒப்பிடுகையில் 2004 இல் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 38 இற்கு 31 சதவீதத்தினால் அதிகரித்தது. பெற்றோலிய விலைகளிலேற்பட்ட அதிகரிப்பிற்கு பல காரணங்கள் பொறுப்பாயமைந்தன. சீனா, இந்தியா, ஐக்கிய அமெரிக்கா மற்றும் யப்பான் ஆகிய நாடுகளிலிருந்தான குறிப்பிடத்தக்களவு உயர்ந்த கேள்வியின் காரணமாக, எண்ணெய்க்கான உலகளாவிய கேள்வி கடந்த 16 ஆண்டுகளில் இப்பொழுது மிக விரைந்த வேகத்தில் அதிகரித்திருக்கிறது. சீனாவின் எண்ணெய் நுகர்வு மட்டுமே 2004 இல் 20 சதவீதத்தினால் அதிகரித்திருக் கிறது. மத்திய கிழக்கு, வெனிசூலா மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளில் காணப்பட்ட பதற்றமான அரசியல் நிலைமைகளும், மோசமான வானிலை நிலைமைகளும் வழங்கலின் தடைக்கு காரணமாக இருந்தன. மேலும், உலகின் நாளாந்த நுகர்வான 82 மில்லியன் பீப்பாய்களுக்கு மேலாக ஏறத்தாழ வெறுமனே 1 சதவீதமளவில் காணப்பட்ட சிறிதளவு மிகையான இயலளவும், பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பல்லாத, பாரிய எண்ணெய் உற்பத்தியாளராக விளங்கும் ருசிய எண்ணெய்க் கம்பனியான யூகோசில் காணப்பட்ட நிதியியல் நெருக்கடியும் எண்ணெய் விலை உயர்விற்கு பங்களித்தன. உயர்ந்த எண்ணெய் விலைகள் 2005 இலும் தொடரும்போல் தெரிகின்றது. உலகம் முழுவதிலுமுள்ள பெற்றோலிய இறக்குமதி நாடுகளின், அபிவிருத்தியடைந்து வருகின்ற, அபிவிருத்தியடைந்த நாடுகள் அனைத்தும் பெற்றோலிய விலைகளில் ஏற்பட்ட எதிர் பார்க்கப்படாததும் முன்னெப்பொழுது மில்லாததுமான அதிகரிப்புக்களைக் கையாள்வதில் சவால்களை எதிர்நோக்கின.

2004 இல் இலங்கை ஏறத்தாழ 30 மில்லியன் பீப்பாய் பெற்றோலிய உற்பத்திகளை இறக்குமதி செய்தது. இதில் ஏறத்தாழ 50 சதவீதம் மசகெண்ணெய் வடிவிலும், மீதி ஊர்திகளுக்கான டீசலை முனைப்பாகக் கொண்டு, பல்வேறு வகைப்பட்ட சுத்திகரிப்பு உற்பத்தி களையும் உள்ளடக்கியிருந்தது. முக்கிய பெற்றோலிய உற்பத்திகளின் அதாவது பெற்றோல், மண்ணெண்ணெய் மற்றும் ஊர்திகளுக்கான டீசல் என்பனவற்றின் ஆண்டு நுகர்வு 2.6 பில்லியன் லீற்றர்களாக விளங்கியது. போக்குவரத்துத் துறை முக்கிய பெற்றோலிய நுகர்வாளராக விளங்கியதுடன் வலு, கைத்தொழில் மற்றும் குடியிருப்பாளர் துறைகள் இதனை பின்தொடர்ந்து காணப்பட்டன. ஊர்திப் பதிவுகளின் எண்ணிக்கை அதிகரித்தமையின் காரணமாக போக்குவரத்துத் துறையின் பெற்றோலிய நுகர்விற்கான கேள்வி வலுவாக உயர்வடைந்தது. இதேபோன்று, மாற்றுவலு மூலங்கள் இல்லாமை, திட்டமிடப்பட்டுள்ள நிலக்கரி வலுவும் நீர் மின்வலுச் செயற்றிட்டங்களும் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படாமை என்பனவற்றின் விளைவாக வெப்ப மின்வலுவின் பயன்பாடு அதிகரித்தமையின் காரணமாக வலு உருவாக்கத்தில் பெற்றோலிய உற்பத்திகளின் பயன்பாடும் விரைவாக அதிகரித்திருக்கிறது.

இலங்கை போன்ற எண்ணெய் இறக்குமதி செய்கின்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் மீது எண்ணெய் விலை உயர்வின் காரணமாக ஏற்படும் பொருளாதார தாக்கமானது வெளிநாட்டு தாக்கங்களை எதிர்த்து நிற்கும் தன்மையிலும் தாக்கத்தினைத் தணிப்பதற்கு மேற்கொள்ளப்படுகின்ற கொள்கை களிலுமே பெருமளவிற்கு தங்கியிருக்கும். தாக்கத்தின் அளவும் கூட, பொருளாதாரத்தில் வலுக் கொண்டிருக்கக்கூடிய செறிவு மற்றும் இயற்கை வாயு, நிலக்கரி வலு, நீர் மின்வலு போன்ற மாற்று வலு மூலங்களின் கிடைப்பனவு என்பனவற்றின் மீது தங்கியிருக்கும். பொருத்தமானதும் சரியானதுமான வழிமுறைகள் எடுக்கப்பட்டாலொழிய எண்ணெய் விலைகளின் உயர்வானது கடுமையான வெளிநாட்டு உள்நாட்டு துறைகளின் உறுதியற்ற தன்மைக்கு வழிவகுக்கக்கூடும். வெளிநாட்டுத் துறையில், எண்ணெய் விலைகளில் ஏற்படுகின்ற சடுதியான அதிகரிப்பு வர்த்தக சமநிலையினை விரிவாக்கி திரண்ட சென்மதி நிலுவை மோசமடைவதற்கும், நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகள் இழக்கப்படுவதற்கும் வழிவகுத்து, செலாவணி வீதத்தின் மீது அழுத்தத்தினை ஏற்படுத்துகின்றது. உள்நாட்டு உறுதிப்பாடற்ற

**சிறப்புக் குறிப்பு 4 (தொடர்ச்சி)**

தன்மையானது, உயர்ந்த எண்ணெய் விலைகள் முழுமையாக உணரப்படுகின்றனவா என்பதனைப் பொறுத்தே இருக்கும். முழுமையான விலையுயர்வும் ஊடுகடத்தப்படுவது, இது பணவீக்க மொன்றினையே ஏற்படுத்தும். ஆனால் உதவுதொகைக் கொடுப்பனவுகளூடாக அரசாங்கம் உயர்ந்த எண்ணெய் விலைகளை ஈர்த்துக் கொள்வது வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை விரிவடைதல், உயர்வடைந்து செல்லும் அரச படுகடன் மற்றும் வட்டி வீதங்கள், தனியார் துறை முதலீடுகளை இல்லாமல் செய்தல், வருமான ஏற்றத்தாழ்வுகள் விரிவடைதல் அதேபோன்று நீண்டகால பணவீக்கத்தை விளைவித்தல் என்பனவற்றிற்கு இட்டுச்செல்லும்.

உயர்ந்த பன்னாட்டு எண்ணெய் விலைகள் தொடர்பாக உரிய நேரத்தில் சரியான வழிமுறைகளை எடுத்தாலொழிய, இது நாட்டின் சென்மதி நிலுவையை மோசமடையச் செய்வதனூடாக கடுமையான பேரண்டப் பொருளாதார தளம்பல்களுக்கு இட்டுச்சென்றுவிடும். 2004 இல் பெற்றோலிய இறக்குமதிகள் மீதான மொத்த செலவினம் ஐ.அ.டொலர் 1,211 மில்லியனுக்கு ஐ.அ.டொலர் 372 மில்லியனால் (44 சதவீதத்தினால்) அதிகரித்து, வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைவதற்கும் சென்மதிநிலுவையின் திரண்ட நிலுவையில் பற்றாக்குறையைப் பதிவு செய்யவும் குறிப்பிடத்தக்களவிற்கு பங்களித்தது. மோசமடைந்த வர்த்தக நிலுவை செலாவணி வீதத்தின் மீதும் வெளிநாட்டு ஒதுக்குகளின் மீதும் மோசமான தாக்கமொன்றினை ஏற்படுத்தின.

2002 சனவரியில் அறிமுகப்படுத்தப்பட்ட விலையிடல் சூத்திரத்திற்கமைய முக்கிய பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு விலைகள் மாதாந்தம் திருத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், 2004 சனவரிக்குப் பின்னர் விலையிடல் சூத்திரத்தின் நியதிகளின்படி உள்நாட்டு விலைகள் முழுமையாகச் சீராக்கப்படவில்லை. இது எண்ணெய்க் கம்பனிகளுக்கு பாரிய இழப்புக்களை தோற்றுவித்து உதவு தொகைகளை வழங்குவதற்கு அரசாங்கத்தினை நிர்ப்பந்தித்தது. பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் மீதான ஒரு ரூபா உதவு தொகை ஆண்டொன்றிற்கு ரூ.2.6 பில்லியன் உதவு தொகையினைத் தேவைப்படுத்தும். எண்ணெய்க் கம்பனிகளுக்கு அரசாங்கம் ரூ.18 பில்லியன் கொண்ட மொத்த உதவுதொகைக்கே வழங்கும் கடப்பாட்டினைக் கொண்டிருந்தது. இது 2004 இன் மொ.உ.உற்பத்தியில் ஏறத்தாழ 0.9 சதவீதமாக இருந்தது.

இப்பாரிய அளவு உதவு தொகையினை நிதியிட அரசாங்கம் வரிகளை அதிகரிக்க வேண்டும் அல்லது அதன் செலவினத்தில் எங்காவது குறைப்பினை ஏற்படுத்த வேண்டும் அல்லது கடன்பட வேண்டியிருக்கும். வரிகள் அதிகரிக்கப்படுமாயின் எரிபொருள்களைப் பயன்படுத்துவோர் மற்றும் பயன்படுத்தாதோர் எல்லோருமே அதனைச் செலுத்த வேண்டியிருக்கும். எனினும் வரி விதிப்புக்கள் பொதுவாக மறைமுக வரிகளாக இருப்பதனால், உயர் வருமான தொகுதியினரை விட குறைந்த வருமானம் பெறும் குழுவினரே வரிச்சுமையை பெருமளவிற்கு சுமக்க வேண்டியிருக்கும். அரசாங்கம் அதன் செலவினங்களை ஏதாவதோரிடத்தில் குறைக்க வேண்டியிருக்குமாயின், அதன் காரணமாக பிற்பட்ட பிரிவினருக்கான உதவி வழங்கும் ஆற்றல் குறைவடையக்கூடும். அல்லது நீண்டகால பொருளாதார அபிவிருத்திக்கு இன்றியமையாததான உட்கட்டமைப்பு செயற்றிட்டங்கள் மீதான முதலீட்டு ஆற்றல் கட்டுப்படுத்தப்படக்கூடும். உள்நாட்டுச் சந்தைகளிலிருந்து அரசாங்கம் அதன் கடன்பாடுகளை அதிகரிக்குமாயின், இது மூலவளங்களை இல்லாமல் செய்யும் செயற்பாட்டினூடாக தனியார் துறைக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள மூலவளங்களைக் குறைத்து விடும் அல்லது கடன்பாடுகள் வங்கித்தொழில் முறையினூடாக மேற்கொள்ளப்படுமாயின் பணவீக்கம் ஏற்படும். எரிபொருள் உதவு தொகையின் காரணமாக ஏற்பட்ட அதிகரித்த அரச கடன்பாடுகளின் விளைவாக பணவீக்கத்தில் ஏற்படும் உயர்வு வறியோரைக் கூடுதலாகப் பாதிப்பதற்கான காரணம் பணவீக்கத்திற்கு எதிராகத் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் ஆற்றல் அவர்களிடம் இல்லாதிருப்பதேயாகும். அத்தகைய அரச கடன்பாடுகள் தற்போதைய சந்ததியினரின் நல்வாழ்வின் மீது மோசமான பாதிப்பினை ஏற்படுத்துவது மட்டுமன்றி எதிர்காலச் சந்ததியினரின் மீதும் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. மேலும், ஒப்பீட்டு ரீதியில் உதவு தொகை வழங்கப்பட்ட எரிபொருளின் உயர்ந்தளவு பாவனையாளர்களாக செல்வந்தர்களே இருப்பதனால் உதவு தொகையில் பெரும் பங்கும் அவர்களது கைக்கே செல்கிறது.

பன்னாட்டு விலைகளின் அதிகரிப்புக்களுக்குச் சமாந்தரமாக உள்நாட்டு விலைகளை அதிகரிப்பது குறிப்பாக எரிபொருளை சிக்கனமின்றி பயன்படுத்துவோரின் எரிபொருள் பாவனையைக் குறைக்கும். இவ்வுலகளாவிய நெருக்கடியினைக் கருத்திற்கொண்டு எரிபொருளைக் கவனமாகப்

**சிறப்புக் குறிப்பு 4 (தொடர்ச்சி)**

பாவிப்பது இலங்கையின் எரிபொருள் இறக்குமதியை குறைவடையச்செய்து வெளிநாட்டுச் செலாவணியினைச் சேமிக்கவும் உதவும். எண்ணெய்ப் பாவனையில் 10 சதவீதம் கொண்டதொரு குறைப்பு ஆண்டொன்றிற்கு ஐ.அ.டொலர் 150 மில்லியன்களைச் சேமிக்க உதவும். இது சேமித்த வெளிநாட்டுச் செலாவணியினை வேறு இன்றியமையாத இறக்குமதிகளுக்குப் பயன்படுத்துவதற்கு நாட்டினை இயலச்செய்யும். உச்ச நன்மைகளை அடைவதற்கு, மற்றைய துறைகளில் நெருக்கடிகள் உருவாகுவதிலிருந்தும் நெருக்கடிகளை தடுக்கும் பொருட்டு அதிகரித்த எரிபொருளின் விலைகளின் தாக்கம் பயணிகள் போக்குவரத்து, வலு உருவாக்கம் போன்ற மற்றைய துணைத் துறைகளையும் சென்றடைய அனுமதிக்கப்படல் வேண்டும்.

பன்னாட்டு விலைகளை உள்நாட்டு விலைகளில் பிரதிபலிக்கச் செய்வதற்காக விலையிடல் சூத்திரத்தின் நடைமுறைப்படுத்தலுக்குப் புறம்பாக, மேலும் பல துணை வழிமுறைகளும் காணப்படுகின்றன. இவையும், பொருளாதாரத்தில் உயர்ந்த எண்ணெய் விலைகளின் பாதகமான தாக்கத்தினைக் குறைக்கக்கூடும். எடுத்துக்காட்டாக, வீதி நெரிசல் எரிபொருள் பாரியளவில் விரயமாவதற்கு வழியமைக்கிறது. எனவே, வீதி நெரிசலை தவிர்ப்பதற்கு பொருத்தமான முறையொன்றினை அபிவிருத்தி செய்யும் விதத்தில் நகர மற்றும் நெருஞ்சாலை வடிவமைப்பதிலும் திட்டமிடுவதிலும் முன்னுரிமையளித்தல் வேண்டும். வினைத்தறன் மிக்க பொது போக்குவரத்து முறையினை அபிவிருத்தி செய்வது தனிப்பட்ட ஊர்திகளின் பாவனையை குறைத்து அதன் மூலம் வலுவினைச் சேமிப்பது மட்டுமன்றி சுற்றாடல் பாதுகாப்பிற்கும் உதவும். தற்போதுள்ள புகைவண்டி முறையினை சிறந்த முறையில் பயன்பாட்டிற்குள் கொண்டுவருவது பயணிகள் மற்றும் பொருள் போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்படும் சிறிய ஊர்திகளினால் பயன்படுத்தப்படும் வலுவினை சேமிக்க உதவும். மேலும் நிலக்கரி வலு மற்றும் ஏனைய மாற்று வலு மூலங்களை அபிவிருத்தி செய்வது வலு உருவாக்கத்திற்கான பெற்றோலிய இறக்குமதிகள் மீதான அழுத்தத்தினை தவிர்க்கும்.

முக்கியத்துவத்தினைக் கருத்திற் கொள்கையில் இது பேரண்டப் பொருளாதார உறுதிப் பாட்டிற்கு அச்சுறுத்தலாகக் கூட அமையக்கூடும்.

- **மின்வலுத் துறையானது, 2004 இல் வலு உருவாக்கச் செலவினை அதிகரிக்கின்ற வரட்சி மற்றும் உயர்ந்த பெற்றோலிய விலைகள் ஆகிய இரு தாக்கங்களினால் பாதிக்கப் பட்டிருக்கிறது.** மாற்றமற்ற விலைகள் இலங்கை மின்சபையின் நிதியியல் நிலைமை மோசமடைய வழிவகுத்ததுடன் பாரிய வரவு செலவுத் திட்ட உதவியினையும் தேவைப்படுத்தியது. நிலக்கரி வலுப்பொறித் தொகுதி உட்பட புதிய வலுச் செயற்றிட்டங்கயையும் முன்மொழியப்பட்ட சீர்திருத்தங்களையும் நடைமுறைக்கிடுவதில் காணப்பட்ட தாமதமும், வலு முறைமையிலான இழப்புக்கள் உயர்வாக இருப்பதும் மின்வலுத் துறையின் பிரச்சனைகளை மேலும் சிக்கலாக்கியுள்ளன.

- **2004 இல் பன்னாட்டு எண்ணெய் விலைகள் (பிரெண்ட்) 2003 இனை விட 35 சதவீதத்தினால் அதிகரித்தமையின் காரணமாக பெற்றோலியத் துறை பன்னாட்டு விலைகளின் தாக்கத்திற்குட் பட்டதுடன் இலங்கையின் பொருளாதாரத்தின் மீதும் மோசமான தாக்கங்களை ஏற்படுத்தியது.** பன்னாட்டு விலை அசைவுகளினால் பாதிக்கப்படாத தாமதமான மற்றும் போதுமானதற்ற எரிபொருள் விலைச் சீராக்கங்கள் எரிபொருளின் உள்நாட்டு நுகர்வு தொடர்ந்து அதிகரிப்பதற்கு வழிவகுத்ததுடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை இந்திய எண்ணெய்க் கம்பனிகளுக்கு இழப்புக்களை ஏற்படுத்தி அதன் விளைவாக அரசாங்கத்திற்கு உதவுதொகைக் கொடுப்பனவுகளையும் விளைவித்து சென்மதி நிலுவையினையும் மோசமடையச் செய்தன.

- **இலங்கை அது அமைந்திருக்கும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடத்தின் பெருமளவு காரணமாக பன்னாட்டுக் கடல் போக்குவரத்தில் அது ஒப்பீட்டு ரீதியில் அனுகூலமான தன்மைகளை அனுபவித்து வருகின்றதெனினும், நாட்டின் போட்டித் தன்மையானது துறைமுகப் பணிகளின் வினைத்திறனின் மீதும் இவ்வலையமைப்பு பன்னாட்டு போக்குவரத்து வலையமைப்புடன் எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளது என்பதிலுமே பெருமளவிற்கு தங்கியிருக்கும்.** இலங்கையின் வீதி வலையமைப்பின் உள்ளடக்கத்தின் பரப்பளவு பன்னாட்டு தரங்களின்படி திருப்திகரமானதாக உள்ளபோதும் வீதிகளின் தரம் மோசமானதாகக் காணப்படுகின்றது. இலங்கையில், வீதி அபிவிருத்திகளுடன் தொடர்பான முக்கிய

பிரச்சனைகளாக திட்டமிடப்பட்ட வீதிச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் அளவுக்கதிகமான தாமதம், புதிய வீதிச் செயற்றிட்டங்களுக்கும் ஏற்கனவேயுள்ள வீதி வலையமைப்பினைப் பேணுவதற்கும் தேவையான நிதிகளை போதுமான அளவில் திரட்டிக் கொள்ள இயலாமை என்பன விளங்கின.

- **பன்னாட்டு வர்த்தகத்தில் ஏற்பட்ட வளர்ச்சி மற்றும் உற்பத்தியாக்க மேம்பாடுக்ள் என்பனவற்றின் பயனாக 2004 இல் துறைமுகப் பணிகள் ஆரோக்கியமான வளர்ச்சியைப் பதிவு செய்தன.** எனினும், துறைமுகப் பணிகள் பிராந்திய போட்டிகளின் காரணமாக தொடர்ந்தும் அறை கூவல்களை எதிர்நோக்கின. துறைமுகப் பணிகளின் வினைத்திறனையும் உற்பத்தியாக்கத்தினையும் மேலும் மேம்படுத்துவதும், உத்தேச கொழும்பு தெற்கு துறைமுக செயற்றிட்டத்தினை உரிய நேரத்தில் நிறைவு செய்வதும் இச்சவால்களை வெற்றிகரமாக எதிர்நோக்குவதற்கு அவசிய மானவையாகும்.

- **போதுமானதற்ற பணிகள், மோசமான தரம் மற்றும் குறைந்த அளவு பயணிகள் பாதுகாப்பு என்பனவற்றால் பயணிகள் போக்குவரத்துத்துறை தொடர்ந்து பாதிக்கப்பட்டது.** அரசுடமையான கொத்தணிப் பேரூந்துக் கம்பனிகள் பாரிய இழப்புக்களை ஏற்படுத்தியமை அரச உதவிகளின் மீது அவை பெருமளவிற்கு தங்கியிருக்க வழிவகுத்தன. புகைவண்டிப் போக்குவரத்து முறைமையானது விலையிடல், முகாமைத்துவம் மற்றும் தொழிலாளர் என்பனவற்றில் காணப்பட்ட நெகிழ்ச்சியற்ற தன்மைகளினால் பாதிக்கப்பட்ட அதன் பணிகளின் மோசமான தரத்திற்கும் பாரிய தொழிற்பாட்டு இழப்புக்களுக்கும் வழிவகுத்ததுடன் இதன் காரணமாக வரவு செலவுத் திட்டத்தின் மீதும் பாரிய சுமை ஏற்றப்பட்டது. கம்பனி அமைப்பொன்றிற்குள் இதன் குறைபாடுகளை வெற்றி கொள்வ தற்கு இலங்கைப் புகைவண்டிக்கு வசதியளிப்பதற்காக இது 2003 இல் அதிகார சபையொன்றாக மாற்றப்பட்டதெனினும் தொழிற்சங்கங்களின் எதிர்ப்புக் காரணமாக இம்மாற்றம் 2005 சனவரியில் புறக்கீடு செய்யப்பட்டது.

- **யுத்த நிறுத்தத்தின் பயனாக கடந்த மூன்றாண்டுகளாக உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வான் பயணங்கள் அதிகரித்தன.** பன்னாட்டு வான் பயண நிறுவனங்களையும் சுற்றுலாப் பயணிகளையும் நாட்டிற்கு கவருவதற்காக பெருமளவு ஒழுங்கு விதித் தளர்த்தல்களுக்கும், இருபுடை தாராளமயப்படுத்தல் உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கும் வழிவகுக்கும் விதத்தில் சிவில் வான் போக்குவரத்துத் துறைக்கு மிக முக்கியமான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

- **நுகர்விற்கும் நீர்ப்பாசனத்திற்குமான உறுதியான நீர் வழங்கல் தேசிய முன்னுரிமை வாய்ந்ததாகும்.** நீர் மூலவளங்களின் உறுதியான பயன்பாட்டினை அடைவதற்கு வீண் விரயத்தையும் அளவுக்கதிகமான பயன்பாட்டையும் தடுக்கக்கூடிய மேம்பட்ட நீர் முகாமைத்துவ நடைமுறைகள் அவசியமானவையாகும். இலங்கையின் நீர் மூலவளங்களின் நீண்டகால உறுதிப்பாட்டினை அச்சுறுத்துகின்ற இரண்டு முக்கிய காரணிகளாக பொருத்தமற்ற விலையிடலும் ஒழுங்குவிதிகளிலுள்ள குறைபாடுகளும் விளங்குகின்றன. குழாய் மூலமான குடிநீர் விலை மற்றும் குறுக்கு உதவு தொகை பிரிவுகளுக்குட் பட்டதாக இருந்தபோதும் மற்றைய வடிவிலான நீர் வழங்கல்கள் அளவுக்கதிகமான பயன்பாட்டினையும், சுற்றாடல் சிதைக்கப் படுவதனையும் தடுக்கும் விதத்தில் ஒழுங்கு முறைப்படுத்தப் படவில்லை.

- **2004 இல் அரச நலத்துறை பல்வேறு முக்கிய பின்னடைவுகளினால் பாதிக்கப்பட்டமைக்கு அடிக்கடி காணப்பட்ட தொழில் தகராறுகள், அதன் பணிகளின் மோசமான தரம், டெங்கு காய்ச்சல் மற்றும் டெங்கு இரத்தப்போக்கு காய்ச்சல் பரவியமை என்பன முக்கிய காரணங்களாக அமைந்தன.** இவை இலக்கிடல் எதுவுமின்றி சகலருக்குமான அரச நலக்கவனிப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் பாரிய பொது நிதியிடலைப் பேணுவதில் தொடர்ந்தும் காணப்படும் இடர்ப்பாடுகளை எடுத்துக்காட்டின. நோய்த்தடுப்பு நலக்கவனிப்புக்களில் தனியார்துறை முதலீட்டாளர்கள் மிகக் குறைந்த ஊக்குவிப்புக் களையே கொண்டிருப்பதனால், பொருத்தமான இலக்கிடல்கள் நோய்த்தடுப்பு நலக்கவனிப்புக்களுக்கான நிதியினை சேமிக்க உதவும்.

- **விரைவான வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் தொடர்ச்சியாக மேம்பட்டு வரும் கல்வி முறையொன்று அவசியமானதாகும்.** பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் பல்கலைக்கழகக் கல்வியினைப் பெறமுடியாமல் போனதன் மூலம் எடுத்துக் காட்டப்பட்டவாறு இலங்கையில் பல்கலைக்கழகக் கல்வி குறைந்த அளவிலேயே அபிவிருத்தியடைந் துள்ளது. இலங்கைக்குள்ளே காணப்படும் எதிர்ப்புக்கள், அரசாங்கம் உயர்

கல்வித் துறையினை ஒழுங்குமுறைப்படுத்துவதனை ஊக்கமிழக்கச் செய்தன. இது இறக்குமதிகளுக்குச் சார்பாக உள்நாட்டு உற்பத்தியினை கட்டுப்படுத்து வதற்கு சமனாகும். எனினும், சுதந்திரம் பெற்ற காலப்பகுதியில் இலங்கை அதன் பல்கலைக்கழகக் கல்வியின் உயர்தரம் காரணமாக வெளிநாடுகள் பலவற்றிலிருந்து மாணவர்களைக் கவரக் கூடியதாக இருந்தது. ஆனால் கடந்த பல ஆண்டுகளாக நிலைமைகள் குறிப்பிடத்தக்களவிற்கு மாற்ற மடைந்ததன் காரணமாக இலங்கை மாணவர்கள் இன்று தமது உயர் கல்விக்காக இந்தியா, நேபாளம் உட்பட மற்றைய பல நாடுகளுக்கு பெருமளவில் செல்வதற்கு அந்நாடுகளிலுள்ளதையொத்த வசதிகள் இந்நாட்டில் போதுமானளவிற்குக் கிடைக்காமையே காரணமாகும் என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும். பல்கலைக்கழகக் கல்வியின் ஒழுங்குவிதிகளைத் தளர்த்துவதானது தேவைப்படும் நியமங்களை பேணுவதற்கான உத்தியோகபூர்வ அங்கீகாரத்தைக் கொண்ட அனைத்தையு முள்ளடக்கிய திட்டம், தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் காலாந்தர மதிப்பீடுகள் என்பனவற்றுடன் இணைந்ததாக இருத்தல் வேண்டும்.

- **நாட்டில் உயர் கல்விக்கான வாய்ப்புக்களில் காணப்படும் கடுமையான குறைபாடுகளைக் கருத்திற்கொண்டு உயர் கல்வியை வழங்கு வதற்கான மாற்று வழிகளைக் கண்டறிவது அவசிய மானதாகும்.** பன்னாட்டு ஆய்வுகள் ஆரம்ப, இரண்டாந்தரக் கல்வியின் சமூக விளைவு வீதமானது தனியார் விளைவு வீதத்தினைக் காட்டிலும் மிக அதிகமான தென்பதனை எடுத்துக்காட்டி அரசாங்கம் தொடர்ந்தும் ஆரம்ப, இரண்டாந்தரக் கல்வியில் முதலீட்டை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தினை நியாயப்படுத்து கின்றன. எனினும், தனியார் விளைவு வீதமானது மூன்றாம் நிலைக்கல்வியில் அதிகமாகக் காணப்படுவதானது, உயர் கல்விக்கு அரச முதலீட்டின் மீது தொடர்ச்சியாக தங்கியிருக்க வேண்டியதன் பின்னாலுள்ள பொருளியல் ரீதியான பகுத்தறிவு வாதத்தினை கேள்விக்குரியதாக்குகிறது.

## விலைகள், கூலிகள் மற்றும் தொழில்நிலை

- ***2004 இல் பணவீக்கம் அதிகரித்தது.*** இது, முதலில் முதன்மைச் சந்தை மட்டத்தில் அல்லது மொத்த விற்பனை மட்டத்திலும், அதன் பின்பு சில்லறைச் சந்தை மட்டத்திலுமாக சகல விலைச்சுட்டெண் களிலும் அவதானிக்கப்பட்டது. பிராந்திய மட்டத்திலும் விலைகளில் அதிகரித்துச் செல்லும் போக்கு காணப்பட்ட போதிலும், பிராந்திய நிலையங்களிடையேயான விலை வேறுபாடுகள், பகிர்ந்தளிப்பு, தகவலின் விரைவான பாய்ச்சல் மற்றும் போக்குவரத்து வசதிகள் என்ப வற்றிலான மேம்பாடுகள் காரணமாக ஒடுங்கின.

- ***வழங்கல் மற்றும் கேள்விக் காரணிகள் 2004இல் பணவீக்கத்தின்மீது அழுத்தத்தினை உருவாக்கின.*** வழங்கல் காரணிகளினுள், நாட்டின் குறிப்பிட்ட சில பகுதிகளில் நிலவிய நீடித்த வரட்சியும் குறிப்பாக பெற்றோலியப் பொருட்கள் உள்ளிட்ட முக்கிய பண்டங்களின் அதிகரித்த பன்னாட்டு விலைகளும் முக்கியமானதாக விளங்கின. வழங்கல் பக்கத்திலான இவ்வபிவிருத்திகள், முக்கிய பன்னாட்டு நாணயங்களுக்கெதிரான ரூபாவின் பெறுமானத்தேய்வு, அரிசி இறக்குமதிகளில் வரையறைகளைப் பேணியமை மற்றும் இறக்குமதிகள் மீதான பெறுமதி கூட்டப்பட்ட வரியின் மேல்நோக்கிய திருத்தம் என்பவற்றால் மோசமடைந்தன. முன்னைய ஆண்டின் ஏறக்குறைய 15 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2004 இல் கிட்டத்தட்ட 20 சதவீதங் கொண்ட உயர் வீதத்தினால் விரிவடைந்த பணநிரம்பல் விலைகள் மீதான கேள்விப் பக்கத்திலிருந்தான அழுத்தத்தைக் கூட்டியது. வங்கித் தொழில் மூலங்களூடாக பகுதியளவில் நிதியிடப்பட்ட உயர்ந்த வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையும், தனியார் துறைக்கான விரைவுபடுத்தப்பட்ட கொடுகடன் விரிவாக்கமும் நாணய விரிவாக்கத்துக்குப் பங்களிப்புச் செய்தன.

- ***2003 இல் மாற்றமுறாதிருந்த அரச துறையின் பெயரளவுக் கூலிகள் ஆண்டின் ஆரம்பத்திலும் இறுதியிலும் மேல்நோக்கித் திருத்தப்பட்டன.*** ஆண்டுத் தொடக்கத்தில், நடைமுறையிலிருந்த பணவீக்க வீதங்களால் நியாயப்படுத்தக் கூடியதைக் காட்டிலும் உயர் வீதங்களில் அரச துறையில் மேற்கொள்ளப்பட்ட சராசரி கூலி அதிகரிப்பு உற்பத்தித் திறனில் தெளிவான குறிப்பிடத்தக்க மேம்பாடின்றி உண்மைக் கூலிகளில் அதிகரிப்பை விளைவித்து மொத்தக் கேள்வியை அதிகரித்ததன் மூலம் இவ்வாண்டில் விலை அழுத்தத்திற்குப் பங்களிப்புச் செய்தது. அரச துறை கூலி அபிவிருத்திகளுக்கு மாறாக சில முறைசார் தனியார் துறை ஊழியர் வகைகள் குறைந்தபட்ச உண்மைக் கூலிகளில் இழப்புக்களை அடைந்திருக்கையில், முறைசாராத் துறையிலுள்ள பெயரளவுக் கூலிகள், பொதுவாக பணவீக்கத்தின் மட்டத்துடன் ஒத்துக் காணப்பட்டன.

- **தொழிலை முடிவுறுத்துவதற்கு பிரயோகிக்கத்தக்க புதிய இழப்பீட்டு சூத்திரம் 2005 மார்ச்சில் அறிமுகப்படுத்தப்பட்டது.** 2004 இல் தொழிற்

சங்கங்களால் மேற்கொள்ளப்பட்ட பிரதிநிதித்துவங்களைத் தொடர்ந்து தொழில் உறவுகள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சால் 2004 மே 26 இல் மேற் கொள்ளப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தினூடாக தொழிலாளர்களின் வேலையை முடிவுக்கு கொண்டுவரும் திருத்தப்பட்ட சட்டத்தின் அமுலாக்கம் இடை நிறுத்தப்பட்டதுடன், 2005 மார்ச்சில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட புதிய இழப்பீட்டுச் சூத்திரத்தைப் பயன்படுத்தி இறுதியாக அமுலாக்கப்பட்டது.

- **குடித்தொகை வளர்ச்சி 2003 இன் 1.3 சதவீதத்திலிருந்து 2004 இல் 1.1 சதவீதத்திற்கு சிறிதளவால் மெதுவடைந்தது.** இதேவேளை மாவட்ட ரீதியிலான வேறுபாடுகள் வளர்ச்சி வீதங்களில் அவதானிக்கப்பட்டவாறு பாதுகாப்பு நிலைமையால் முன்பு பாதிக்கப் பட்டிருந்த பிரதேசங்களின் குடித்தொகையில் சார்பு ரீதியில் உயர்வீதம் பதிவு செய்யப்பட்டது.
- **2004இல் பொருளாதாரச் செயற்பாட்டின் விரிவாக்கத்துடன் குறிப்பாக பணிகள் துறையிலான விரிவாக்கத்துடன் தொழில்நிலை வீதம் சிறிதளவால் அதிகரித்தது. எனினும் பங்கேற்பு வீதம் குறைவாகவிருந்த வடமாகாணத்தை உள்ளடக்கியதைத் தொடர்ந்து தொழிற்படை பங்கேற்பு வீதம் வீழ்ச்சியடைந்தது.** தொழில்நிலை வீதம், புதிய அரசின் கொள்கையின் கீழ் அரசதுறை தொழில்நிலை வாய்ப்புக்களில் ஏற்பட்ட விரிவாக்கத்தினாலும், இதைத் தொடர்ந்து அரசத்துறைக்கு பட்டதாரிகளை வேலைக்குச் சேர்த்துக்கொள்ளும் முயற்சியாலும் உதவப்பட்டது. எனினும், தொழிலின்மை வீதம் இவ்வாண்டில் குறிப்பாக படித்த இளைஞரிடையே விளங்கி சிறிய அதிகரிப்பைப் பதிவு செய்தமை கரிசனைக்குரிய விடயமாக தொடர்ந்தும் விளங்கியது.
- **விலைகள், கூலிகள் மற்றும் தொழில்நிலை மீதான சுனாமிப் பேரழிவின் தாக்கம் 2005 இல் குறிப்பாக மீன்பிடித் துறையில் அவதானிக்கப்படும்.** தற்காலிகமாக குறைவடைந்த கேள்வியால் மீனின் விலைகள் உடனடியாக அதிகரிக்காதபோதிலும் கேள்வி அதிகரிக்கத் தொடங்கியதன் பின் அதிகரிக்கத் தொடங்கின. அவசியமான உட்கட்டமைப்பு ஏற்படுத்தப்படும் வரையிலும் வழங்கலிலான பற்றாக்குறை தொடருமென எதிர்பார்க்கப் படுகிறது. இதேவேளை, ஏனைய புரதப் பதிலீடுகளின் விலைகள் ஏற்கனவே அதிகரித்துள்ளன. பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலான வர்த்தக நடவடிக்கைகளும் இடையூறுக்குள்ளாகின. அக்கரையோரப் பிரதேசங்களுக்கான சந்தைப்படுத்தலும் பகிர்ந்தளித்தலும் மீட்சியடைய சில காலம் செல்லுமாதலால் அங்குள்ள பொருளாதாரத் துறைகளிலான விலைகளும் கூலிகளும் குறிப்பிட்ட காலப்பகுதிக்கு தொடர்ந்து பாதிப்புக்குள்ளாகும். மூலவளங்களின் கிடைப்பனவிலான மட்டுப்படுத்தல்களுக்கு உரிய கவனம் செலுத்தாவிடின், புத்தாக்க மற்றும் மீள்நிர்மாணச் செயற்பாடுகள் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களின் கூலிகள் உள்ளடங்கலாக உள்ளீட்டு விலைகளில் அளவுக்கதிகமான அழுத்தத்தை ஏற்படுத்தக்கூடும்.

## பன்னாட்டு வர்த்தகமும் சென்மதி நிலுவையும்

- **ஏற்றுமதிகளிலும், இறக்குமதிகளிலும் ஏற்பட்ட அதிகரிப்புடன் வெளிநாட்டு வர்த்தகம் குறிப்பிடத்தக்களவில் விரிவடைந்தது. 2003 இலான மீட்சியை ஆதாரமாகக் கொண்டு 2004 இல் வெளிநாட்டுத் துறை, கடந்த சில தசாப்தங்களில் பதிவு செய்யப்பட்ட விரைந்த உலகளாவிய பொருளாதார வளர்ச்சியிலிருந்து நன்மையடைந்து வர்த்தகத்தில் உயர் வளர்ச்சியை எடுத்துக்காட்டிய போதிலும், பல உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு திடீர் மாற்றங்களால் விளைவிக்கப்பட்ட சவால்களை எதிர்கொண்டது.**
- **2004இல் ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர் நியதிகளில் 12.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்ததுடன் இது 2000இன் பின்னரான அதிகூடிய ஆண்டு வளர்ச்சியாக காணப்பட்டது.** ஐ.அ.டொலர் நியதிகளிலான ஏற்றுமதி வருவாய்கள், 7.8 சதவீதமான அளவு வளர்ச்சியினதும் 4 சதவீதமான அலகொன்றின் விலை அதிகரிப்பினதும் இணைந்த விளைவால் ஐ.அ.டொலர் 5,757 மில்லியனுக்கு அதிகரித்தது. ஏற்றுமதி வருவாய்களில் கைத்தொழில் ஏற்றுமதிகள் 78 சதவீதம் கொண்ட உயர் பங்குடன் முன்னணி வகிக்கையில் வேளாண்மை ஏற்றுமதிகள் 19 சதவீதத்திற்கு மட்டுமே வகைகூறின. எனவே, 2004 இல் ஏற்றுமதிகளிலான வளர்ச்சிக்கான பங்களிப்பு 85 சதவீதத்தைப் பங்களிப்புச் செய்த கைத்தொழிற்துறையிலிருந்தே பெறப்பட்ட வேளையில் எஞ்சியவை வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்து பெறப்பட்டன. கைத்தொழில் ஏற்றுமதிகளிலான 13 சதவீத வளர்ச்சியானது புடவைகளும் தைத்த ஆடைகளும், பொறியும் கருவியும் மற்றும் இறப்பரை அடிப்படை யாகக் கொண்ட பொருட்களின் வலுவான செயலாற்றத்தால் பெரும்பாலும் இட்டுச் செல்லப்பட்டது. இது, வர்த்தகப் பேச்சுவார்த்தை

களூடாக இத்துறைக்கு வழங்கப்பட்ட அதிகரித்த சந்தை நுழைவால் உதவப்பட்டது. ஐரோப்பிய ஒன்றியத்திலான சந்தைப் பங்கை விரிவாக்குவதன் மூலம் ஐக்கிய அமெரிக்கச் சந்தையில் கூடியளவில் தங்கியிருப்பதிலிருந்து எழும் உள்ளார்ந்த இடர்நேர்வுகளை தைத்த ஆடைகள் கைத்தொழில் குறைத்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது. ஐரோப்பிய ஒன்றியத்திற்கான தைத்த ஆடைகளின் ஏற்றுமதிகள் 2004 பெப்புருவரியிலிருந்து முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை திட்டத்தின் கீழ் ஐரோப்பிய சமூகத்திடமிருந்தான விசேட ஊக்குவிப்பு ஏற்பாட்டால் நன்மையடைந்தது.

- **அளவிலும் (9.0 சதவீதம்), விலைகளிலும் (9.7 சதவீதம்) ஏற்பட்ட இணைந்த அதிகரிப்புக்களால் இறக்குமதிகள் 2003 இன் 9.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 19.9 சதவீதத்தால் ஐ.அ.டொ 8,000 மில்லியனுக்கு வளர்ச்சியடைந்தன.** இறக்குமதிகளிலான உயர் வளர்ச்சி, பொருளாதார விரிவாக்கத்தின் தாக்கம், நீடித்த வரட்சி மற்றும் அதிகரித்த எண்ணெய் விலைகள் மற்றும் குறைந்த வட்டிவீத அமைப்பு என்பனவற்றை பிரதிபலிக்கின்றது. பொருளாதார விரிவாக்கம் முதலீட்டுப் பொருட்களினதும் இடைநிலைப் பொருட்களினதும் இறக்குமதிகளை அதிகரித்திருக்கையில், வரட்சி நிலைமைகள் உணவுப் பொருட்களினதும், பெற்றோலியப் பொருட்களினதும் இறக்குமதிகளின் அதிகரிப்புக்கு இட்டுச்சென்றன. நீண்டகால போக்கைத் தொடர்ந்து, நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிப் பங்கு 2004 இல் 20 சதவீதத்திற்கு தொடர்ந்து வீழ்ச்சியடைந்திருக்கையில், இடைநிலைப் பொருட்களினதும், முதலீட்டுப் பொருட்களினதும் இறக்குமதிப் பங்குகள் முறையே 58 சதவீதத்துக்கும், 21 சதவீதத்துக்கும் அதிகரித்தன. இடைநிலைப் பொருட்களின் பங்கிலான பெருமளவு அதிகரிப்பிற்கு வரலாற்றிலேயே உயர்வாகவிருந்த பன்னாட்டு எண்ணெய் விலைகள் பகுதியளவு காரணமாக விருந்தன.
- **வர்த்தக மாற்று வீதம் 2004இல் 5.2 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது.** இது இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களை குறிப்பாக பெற்றோலியம், வளமாக்கி, கோதுமை, போக்குவரத்து சாதனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் என்பனவற்றின் இறக்குமதி விலைகளிலான அதிகரிப்பினால் ஏற்பட்டதாகும். தேயிலை, இறப்பர், ஏனைய வேளாண்மை ஏற்றுமதிகள் மற்றும் கைத்தொழில் ஏற்றுமதிகள் அதிகரித்த போதிலும் அது வர்த்தக மாற்று வீதத்தை மேம்படுத்துவதற்கு போதுமானதாக இருக்கவில்லை.
- **வர்த்தகப் பற்றாக்குறை ஐ.அ.டொலர் 2,243 மில்லியனுக்கு விரிவடைந்ததுடன், இது பணிகள் கணக்கு மற்றும் பணவனுப்பல்களிலான தேறிய வருவாய்களினால் பகுதியளவில் நிதியிடப்பட்டதன் மூலம் நடைமுறைக் கணக்கின் மீதான வர்த்தக மற்றும் வருமானக் கணக்குகளினது பற்றாக்குறைகளின் தாக்கம் கட்டுப்படுத்தப்பட்டது.** உலகளாவிய பொருளாதாரத்தின் உயர் வளர்ச்சியும் தொடரும் போர்நிறுத்தத்தால் உருவாக்கப்பட்ட சமாதானச் சூழலும் சுற்றுலா வருவாய்கள் அதன் வளர்ச்சி உத்வேகத்தைத் தொடர உதவியதுடன், இது பணிகள் கணக்கின் மிகைக்கு பங்களிப்புச் செய்தது. தொழிலாளர் பணவனுப்பல்கள் 2004 இல் 11 சதவீதங் கொண்ட செழிப்பான வீதத்தில் வளர்ச்சியடைந்து நாட்டுக்கான மிகப் பாரிய தேறிய உட்பாய்ச்சலென்ற அவற்றின் நிலையைத் தக்கவைத்துள்ளன. முதலீட்டின் மீதான வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பை விட வெளிப்பாய்ச்சல்களில் அதிகரிப்பை விளைவித்த உலகளாவிய உயர் வட்டி வீதங்களின் பெருமளவு காரணமாக வருமானக் கணக்கின் பற்றாக்குறை ஐ.அ.டொலர் 204 மில்லியனுக்கு 19 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும், பணிகள் மற்றும் மாற்றல்கள் கணக்குகளின் மிகைகள் வர்த்தகம் மற்றும் வருமானக் கணக்குகளின் விரிவடைந்த பற்றாக்குறைகளை முழுமையாக எதிரீடு செய்யப் போதாதிருந்த மையினால் நடைமுறைக் கணக்கு நிலுவை 2003 இன் ஐ.அ.டொலர் 71 மில்லியனிலிருந்து (மொஉஉ இன் 0.4 சதவீதம்) ஐ.அ.டொலர் 648 மில்லியனுக்கு (மொஉஉ இன் 3.3 சதவீதம்) மோசமடைந்தது.
- **அரசுக்கான வெளிநாட்டு உதவிப் பகிர்ந்தளிப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக நிதியியல் மற்றும் மூலதனக் கணக்குக்கான குறைவடைந்த தேறிய பாய்ச்சல்களால் வெளிநாட்டுத் துறையின் பொதுவான நிலைமை மேலும் மோசமானது.** 2004 இல் அரசுக்கான நீண்டகால மொத்த உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 771 மில்லியனுக்கு 16 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருக்கையில், வெளிப்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 28 மில்லியனால் ஐ.அ.டொலர் 331 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன. நிகழ்ச்சித் திட்டக் கடன்கள் 2003 இன் ஐ.அ.டொலர் 226 மில்லியனிலிருந்து 2004 இல் ஐ.அ.டொலர் 30 மில்லியனுக்கு கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தமைக்கு பெரும்பாலும் அமைப்பு ரீதியிலான சீர்திருத்தங்களின் அமுலாக்கத்தில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாகின. இவ்வாண்டின் பெரும்பகுதியில் மெதுவடைந்து காணப்பட்ட

செயற்றிட்டக் கடன்களின் பகிர்ந்தளிப்பு ஆண்டின் பிற்பகுதியிலான செயற்றிட்டங்களின் விரைவான அமுலாக்கத்தால் மீட்சியடைந்தது. சலுகை நியதிகளிலான வெளிநாட்டு நிதியிடலின் பற்றாக்குறையினை ஈடுசெய்யும் தற்காலிக நடவடிக்கையாக அரசு வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட முறிகளை வர்த்தக நியதிகளில் மற்றும் நிபந்தனைகளில் வழங்கியது.

- **தனியார்துறைக்கான மூலதன உட்பாய்ச்சல்களிலான சாதகமான அபிவிருத்திகளும் அலுவல்சார் உட்பாய்ச்சல்களிலான பற்றாக் குறையை பகுதியளவில் எதிரீடு செய்தது.** வெளிநாட்டு நேரடி முதலீடுகள், கடன் மூலதனம் மற்றும் சொத்துப் பட்டியல் முதலீடுகள் வடிவிலான தனியார் துறைக்கான மூலதனப் பாய்ச்சல்கள் 2004 இல் குறிப்பிடத்தக்களவில் மேம்பாடடைந்து வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நம்பகத் தன்மையிலான முன்னேற்றத்தை பிரதிபலிக் கின்றன. முன்பு ஒப்பந்தம் செய்யப்பட்ட முதலீட்டுச்சபை உடன்படிக்கைகள் பலவற்றின் அமுலாக்க மானது 2004 இல் ஐ.அ.டொலர் 233 மில்லியனுக்கு 2 சதவீதத்தால் அதிகரித்த தனியார் மயப்படுத்தல் பெறுகைகள் உள்ளிட்ட பெறப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகளிலான அதிகரிப்புக்குப் பெருமளவில் பங்களிப்புச் செய்தது. சிறீலங்கா ரெலிகொம்மால் மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான ஐ.அ.டொலர் 100 மில்லியன் முறி வழங்கல் தனியார் துறைக்கான தேறிய வெளிநாட்டு கடன் மூலதனத்திலான அதிகரிப்புக்கு பிரதானமாக பங்களிப்புச் செய்தது.
- **மூலதன மற்றும் நிதியியல் கணக்குகளிலான தேறிய உட்பாய்ச்சல்கள் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையை எதிரீடு செய்வதற்கு போதுமானதாக இருக்காமையினால் பொதுவான சென்மதி நிலுவை முன்னைய மூன்று ஆண்டுகளில் தொடர்ச்சியாக பதிவு செய்யப்பட்ட மிகை களிலிருந்து மாற்றமடைந்து பற்றாக்குறையைப் பதிவு செய்தது.** இது, வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகளை 2003 இறுதியின் ஐ.அ.டொலர் 2,329 மில்லியனிலிருந்து (இறக்குமதிகளின் 4.2 மாதங்கள்) 2004 இறுதியில் ஐ.அ.டொலர் 2,196 மில்லியனுக்கு (இறக்குமதிகளின் 3.3 மாதங்கள்) வீழ்ச்சியடையச் செய்து வெளிநாட்டில் ஏற்படும் திடீர் மாற்றங் களுக்கு நாடு பாதிப்புக்குள்ளாகும் தன்மையை அதிகரித்தது.
- **இப்பாதகமான சூழலில், குறிப்பாக இவ்வாண்டின் நடுப்பகுதியில் செலாவணி வீதம் தளம்பலுற்றுக் காணப்பட்டது.** 2003 இன் 0.01 சதவீதம் கொண்ட சிறியளவிலான பெறுமானத் தேய்வுடன் ஒப்பிடுகையில், இவ்வாண்டில் ரூபா ஐ.அ.டொலருக்தெிராக 7.5 சதவீதத்தால் பெறுமானம் தேய்வடைந்தது. ஐ.அ.டொலர்கள் 517.7 மில்லியன் கொண்ட தேறிய விற்பனையினை மேற்கொண்டதன் மூலமான மத்திய வங்கியின் தலையீடுகள் மோசமான ஏற்றத்தாழ்வுகளை சுமுகமாக்கியது. ஏனைய முக்கிய பன்னாட்டு நாணயங்களுக்கெதிராக ஐ.அ.டொலர் பெறுமானத் தேய்வடைந்ததால் அந்நாணயங்களுக் கெதிராக ரூபா இன்னும் உயர்வான வீதங்களில் பெறுமானத் தேய்வடைந்தது. எனினும், சார்புரீதியிலான உயர் உள்நாட்டுப் பணவீக்கத்தைப் பிரதிபலிக்கும் வகையில் 5 நாணயக்கூடைகள் மற்றும் 24 நாணயக் கூடைகள் தொடர்பான உண்மைத் தாக்கமுள்ள செலாவணிவீதம் முறையே 1.0 சதவீதத்தாலும், 1.1 சதவீத்தாலும் மட்டும் பெறுமானத் தேய்வடைந்து இலங்கையின் போட்டித்தன்மையில் சிறு மேம்பாட்டினை மட்டுமே எடுத்துக்காட்டியது. கொடுக்கல் வாங்கல்களின் மொத்த அளவில் முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களின் பங்கு 2003 இன் 38 சதவீதத் திலிருந்து 2004 இல் 23 சதவீதத்துக்கு வீழ்ச்சி யடைந்தமையினால், வெளிநாட்டுச் செலாவணி சந்தையிலான தொழிற்பாடுகளும் நிச்சயமற்ற தன்மையைப் பிர திபலித்தன. இவ்வாண்டின் பெரும்பகுதியில் முன்னோக்கிய மிகைகளும் வட்டிவீத வேறுபாடுகளை விட பெருமளவு உயர்வாக விளங்கி உயர்ந்த பெறுமானத் தேய்வு அல்லது உயர் வடையும் வட்டி வீதங்கள் தொடர்பான சந்தை எதிர்பார்ப்பைப் பிரதிபலித்தன. எனினும், சுனாமி பேரழிவைத் தொடர்ந்து 2005இன் முதல் நான்கு மாதங்களில் அனைத்து முக்கிய நாணயங்களுக் கெதிராகவும் ரூபாவின் பெறுமானம் வளர்ச்சி யடைந்தது.
- **மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நாட்டின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் சிறிதளவால் வீழ்ச்சியடைந்து இவ்வாண்டில் குறைவடைந்த தேறியகடன் உட்பாய்ச்சலை பிரதிபலிக்கின்றது.** எனினும், உண்மை நியதிகளிலான படுகடன் இருப்பு, மொத்த வெளிநாட்டுப் படுகடனில் 73 சதவீதமானவை யென்னிலும், சிஎஉ இலும் குறித்துரைக்கப் பட்டுள்ளதால் முக்கியமாக இவ்விரு நாணயங்களுக் கெதிராக ஐ.அ.டொலரின் பெறுமானத் தேய்வின் காரணமாக 2004 இறுதியில் ஐ.அ.டொலர் 11,346 மில்லியனுக்கு 7 சதவீதத்தால் அதிகரித்தது.

இவ்வாண்டில், பன்னாட்டு நாணய நிதியக் கடன்களின் பெருமளவு மீள்கொடுப்பனவு காரணமாக படுகடன் பணி விகிதங்கள் சிறிதளவால் மோசமடைந்தபோதிலும், மொத்த வெளிநாட்டுப் படுகடனில் 90 சதவீதத்திற்கும் அதிகமானவை அரசின் சலுகை ரீதியிலான நடுத்தர மற்றும் நீண்ட தவணைப் படுகடனை உள்ளடக்கியுள்ளதால் இவ்விகிதங்கள் குறைவானதும் முகாமைப்படுத்தத் தக்கதுமான மட்டங்களில் தொடர்ந்து காணப்பட்டன.

## இறைக்கொள்கை, வரவுசெலவுத் திட்டத் தொழிற்பாடுகள் மற்றும் அரச படுகடன்கள்

- **2004 இல் இறைக் கொள்கை. இறை முகாமைத்துவ (பொறுப்பாண்மை) சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளையும், 2004 யூலையில் வெளியிடப்பட்ட இலங்கை அரசின் பொருளாதாரக் கொள்கைக் கட்டமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக் கோள்களையும் எய்துவதற்காக நெறிப்படுத்தப் பட்டது.** பொருளாதாரத்தில் நீடித்து நிலைத்திருக்கக் கூடிய நடுத்தரகால வளர்ச்சி வாய்ப்புக்களுக்கு பக்கபலமாக இறைத்திரட்சி செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுத்தல், அரச முதலீட்டை அதிகரித்தல், படுகடன் முகாமைத்துவத்தைப் பலப்படுத்தல், படுகடன் சந்தைகளை அபிவிருத்தி செய்தல், அரச தொழில் முயற்சிகளை மறு சீரமைத்தல், பொது மக்களுக்கு நிவாரணம் வழங்கல் மற்றும் இறைத் தொழிற்பாடுகளை நடைமுறைப் படுத்துவதில் வெளிப்படையான தன்மையையும் வகைகூறும் தன்மையையும் அதிகரித்தல் என்பவற்றில் இறைக்கொள்கை கவனம் செலுத்தியது.

- **அரசிறைச் சேகரிப்பிலான நழுவலுக்கும் மீண்டெழும் செலவிலான மிகையான அதிகரிப்புக்கும் இட்டுச்சென்ற பாதகமான வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு திடீர் மாற்றங்களின் காரணமாக 2004 இல் பொதுவான இறை முகாமைத்துவமும் இறை இலக்குகளின் பேணலும் சவால் மிக்கதாக மாறின.** இத்துடன், தாமதங்கள் மற்றும் எதிர்பார்க்கப்பட்டதை விடக் குறைவடைந்து காணப்பட்ட வெளிநாட்டு நிதியிடல் மற்றும் தனியார் மயப்படுத்தலிலான பெறுகைகள் என்பன அரச நிதியங்களை முகாமைத்துவத்திலுள்ள இடர்களை அதிகரிக்கச் செய்தன.

- **2004 இல் வரி அரசிறை/ மொ.உ.உற்பத்தி விகிதத்தின் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கு நேர்மாற்றமடைந்து விரிவடையும் வரித்தளம் மற்றும் மேம்பாடடையும் வரிச் சேகரிப்பு என்பவற்றின் தாக்கத்தினை பிரதிபலிக்கின்றது.** வரி அரசிறைகள் 2003 இன் மொ.உ.உற்பத்தியின் 13.2 சதவீதத்திலிருந்து 13.9 சதவீதத்திற்கு அதிகரித்து வருமான வரியிலிருந்தான அரசிறையில் ஏற்பட்ட குறைப்புக்கு மத்தியிலும் பெறுமதிசேர் வரி, இறக்குமதித் தீர்வை மற்றும் கலால் தீர்வையிலான அரசிறையிலேற்பட்ட அதிகரிப்புக்களை பிரதிபலிக்கின்றது. பெறுமதிசேர் வரியின் நிருவாகத் திலும் மீளளிப்புப் பொறிமுறையிலும் ஏற்பட்ட மேம்பாடுகள் காரணமாக பெறுமதிசேர் வரியிலிருந்தான அரசிறைகள் அதிகரித்தன. கலால் வரிகள் மற்றும் இறக்குமதித் தீர்வைகளின் மேல்நோக்கிய திருத்தங்களுடன் இணைந்து அவ்வாறான, வரிகளுக்குட்பட்ட உற்பத்தி மற்றும் இறக்குமதிகளின் அதிகரித்த பெறுமதிகள் அரசிறையில் ஏற்பட்ட அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்தன.

- **மொ.உ.உற்பத்தியின் 15.6 சதவீதமாகக் காணப்பட்ட மொத்த அரசிறைச் சேகரிப்பு, 2004 இன் வரவு செலவுத் திட்ட இலக்கான மொ.உ.உற்பத்தியின் 16.4 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் மொ.உ.உற்பத்தியின் 0.9 சதவீதம் கொண்ட பற்றாக் குறையைப் பதிவு செய்தது.** முன்னைய ஆண்டின் மொ.உ.உற்பத்தியின் 15.7 சதவீதத்தினைக் காட்டிலும் சிறிதளவு குறைவானதாகும். மொ.உ. உற்பத்தியின் 2.5 சதவீதத்திலிருந்து 1.5 சதவீதத்துக்கு வரியல்லா அரசிறையில் ஏற்பட்ட பெருமளவு வீழ்ச்சி 2004 இல் மொத்த அரசிறையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கான முக்கிய காரணமாக விளங்கியது. எனினும், இது ஆய்வுக்குரிய ஆண்டில் வரியல்லா அரசிறையின் செயலாற்றத்தைக் காட்டிலும் மிகையாக எதிர்பார்த்த வரவு செலவுத் திட்ட இலக்குகளாலேயே பெருமளவிற்கு ஏற்பட்டது.

- **எதிர்வு கூறப்பட்ட வரவு செலவுத் திட்ட இலக்குடன் ஒப்பிடுகையில் மிகையான செலவினம் மொ.உ. உற்பத்தியில் ஏறத்தாழ 0.3 சதவீதமாக மதிப்பிடப்பட்டது.** எனினும் இது மொ.உ. உற்பத்தியில் 23.7 சதவீதத்திலிருந்து 2004இல் 23.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

- **அரசிறையிலான நழுவல்களும் மிகையான செலவினமும், மத்திய அரசின் மொத்த வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை ஆரம்ப இலக்கான மொ.உ.உற்பத்தியின் 6.8 சதவீதத் திலிருந்து 2004 இல் மொ.உ.உற்பத்தியின் 8.2 சதவீதத்திற்கு அதிகரிக்கச் செய்தன.** அரசின் சேமிப்பு நிலைமையை எடுத்துக்காட்டும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை மொ.உ.உற்பத்தியின் 3.3 சதவீதத்திலிருந்து 3.9 சதவீதத்திற்கு அதிகரித்ததுடன், நடப்பாண்டின் இறைத்

தொழிற்பாடுகளின் விளைவைப் பிரதிபலிக்கும் முதன்மைப் பற்றாக்குறை 2003 இன் மொ.உ. உற்பத்தியின் 0.9 சதவீதத்திலிருந்து 2.2 சதவீதத் திற்கு அதிகரித்தது. திரண்ட அரச துறைப் பற்றாக்குறை முக்கியமாக, அரச தொழில் முயற்சிகளான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினதும், இலங்கை மின்சார சபையினதும் தொழிற்பாட்டு இழப்புக்களின் விளைவாக மொ.உ.உற்பத்தியின் 8.4 சதவீதத் திற்கு அதிகரித்தது.

- **அதிகரித்த அரசதுறைப் பற்றாக்குறைகள் உள்நாட்டு மூலங்களிலிருந்தான கடன்பாடுகளூடாக பெருமளவில் நிதியிடப்பட்டன.** அரசின் மொத்தத் தேறிய கடன்பாடுகள் ஆரம்ப இலக்கான மொ.உ.உற்பத்தியின் 3.2 சதவீதத்துடன் (ரூ.65 பில்லியன்) ஒப்பிடுகையில் மொ.உ.உற்பத்தியின் 5.8 சதவீதத்திற்கு (ரூ.117 பில்லியன்) அதிகரித்தன. 2004 இல் மத்திய அரசின் படுகடனும், பொதுத் துறைப் படுகடனும் முறையே மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக 2003இன் 105.8 சதவீதத்திலிருந்தும் 107.9 சதவீதத்திலிருந்தும் 2004இல் முறையே 105.5 சதவீதத்திற்கும் 107.5 சதவீதத்திற்கும் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தன.

- **2004 இல், இறைச் செயலாற்றத்தை மேம்படுத்து வதற்கான பல நடவடிக்கைகளை அரசு அறிமுகப் படுத்தியது.** முக்கிய நடவடிக்கைகள், வரியையும் தீர்வை முறைமைகளையும் சீர்திருத்தல்; அரசிறைச் சபையை ஏற்படுத்துவதனூடாக வரி நிருவாகத்தைப் பலப்படுத்தல், பொருளாதார பணிக் கட்டணத்தை அறிமுகப்படுத்தல், மீண்டெழும் செலவினத்தை குறைத்தல், நிருவாக விலைகளை மீளாய்வு செய்தல், முக்கியத்துவமிக்க தொழில் முயற்சிகள் முகாமைத்துவ முகவராண்மையை நிறுவி அரச தொழில் முயற்சிகளைப் பலப்படுத்தல், நிருவாகச் சீர்திருத்தக்குழு மற்றும் நிருவாகத் துக்கான தேசிய சபையை நிறுவுவதன் மூலம் நிருவாகச் சீர் திருத்தங்களைப் பலப்படுத்தல், மற்றும் இறை முகாமைத்துவச் (பொறுப்பாண்மைச்) சட்டத்தின் அறிக்கையிடும் தேவைப்பாடுகளை பின்பற்றியும் மற்றும் தேசிய கொள்வனவு முகவ ராண்மையை நிறுவியும் கொள்வனவுகளிலான வெளிப்படையான தன்மையை அதிகரித்தல் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. மாகாணங்களுக் கிடையிலான அதிகரித்தளவான வருமான வேறுபாடு மற்றும் பின்தங்கிய பகுதிகளிலான குறைந்த முதலீடுகள் என்பவற்றைக் கருத்தில் கொண்டு நீடித்து நிலைத்திருக்கக் கூடியதும் பிராந்திய ரீதியில் சமமான பொருளாதார வளர்ச்சியை தூண்டக்கூடியதுமான அரச முதலீட்டுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. இந் நடவடிக்கைகள், வீழ்ச்சியடைந்து செல்லும் அரசிறை/மொ.உ.உற்பத்தி விகிதம், அரச முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் குறைச் செயலாற்றம், தொடர்ந்து காணப்படும் அதிகரித்த வரவு செலவுத் திட்ட பற்றாக்குறைகள் மற்றும் உயர் அரச படுகடன் சுமை போன்ற இறைப் பக்கத்திலான பல முக்கிய குறைபாடுகளுக்கு தீர்வு காண உதவும். அக்குறை பாடுகளுக்கு உரிய நேரத்தில் தீர்வு காண்பது முக்கியமானது. ஏனெனில் அவற்றின் தாக்கம் உயர் கேள்வி அழுத்தங்கள், தேவைக்கதிகமான மூலவளத் தேவைப்பாடுகள் மற்றும் தனியார் முதலீட்டுக்கு நிதி கிடைக்காமற்போதல் என்பவற்றூடாக எஞ்சிய பேரண்டப் பொருளாதார முகாமைத்துவ முயற்சிகளுக்கு பரவக்கூடும்.

- **2005 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் இறைச் செயலாற்றத்திலான உறுதியான மேம்பாடு, உயர்வான சேமிப்புக்களும் முதலீடுகளும், உயர் பொருளாதார வளர்ச்சி, மிதமான பணவீக்கம் மற்றும் மேம்பாடடைந்த வெளிநாட்டு நிலுவைகள் என்பவற்றை நோக்காகக் கொண்டு எதிர்பார்க்கப் பட்ட நடுத்தரக் கால பேரண்டப் பொருளா தாரக் கட்டமைப்பை வெளியிட்டது.** அரசு சேதமடைந்த தனியார் மற்றும் பொதுச் சொத்தின் புனரமைப்பு மற்றும் மீள்கட்டுமானத்தின் செலவைப் பாரமேற்பதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டியிருப்பதால் நடுத்தர கால இறைக் கட்டமைப்பு குறிப்பாக சுனாமிப் பேர ழிவால் பாதிக்கப்படும். நிவாரணம், புனரமைப்பு மற்றும் மீள்கட்டுமானத்திற்கு நடுத்தர காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 1.8 பில்லியன் அளவிலான மூலவளம் தேவைப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. உள்நாட்டு மூலவளக் கட்டுப்பாடுகளைக் கருத்திற்கொண்டு இம் முயற்சியில் உறுதியான முன்னேற்றத்தை ஏற்படுத் துவதற்கு அரசுக்கு வழங்குவதாக உறுதியளிக்கப் பட்ட வெளிநாட்டு உதவிகளை நேரகாலத்துடன் பெற்றுக் கொள்வது அத்தியாவசியமாகிறது.

### நாணயக் கொள்கை, நாணயக் கூட்டுக்கள் மற்றும் வட்டி வீதங்கள்

- **2004 இல் நாணயக் கொள்கை பொருளாதாரத் திலான தொடரும் வளர்ச்சி உத்வேகத்தை வசதிப்படுத்தி, பணவீக்க அழுத்தங்களைக் குறைத்தல் மற்றும் நாணயக் கூட்டுக்களின் விரைந்த வளர்ச்சியை கட்டுப்படுத்தல் என்பன வற்றிற்கான தேவையின் மீது கவனம் செலுத்தியது.** எனினும், வரட்சி நிலைமைகள், மசகெண்ணெய்யின்

அதிகரித்துச்செல்லும் பன்னாட்டு விலைகள் மற்றும் அதிகரித்த அரச துறை உள்நாட்டுக் கடன்பாடுகள் உள்ளிட்ட பாதகமான வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுக் காரணிகள் பலவற்றால் உருவாக்கப்பட்ட கடினமான பேரண்டப் பொருளாதாரச் சூழலில் வளர்ச்சி உத்வேகத்திற்கு உதவுவதற்கான தேவையின் நிமித்தம் நாணய முகாமையின் நடைமுறைப்படுத்தல் 2004 இல் சவாலை எதிர்கொண்டது.

- **மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கையை, நாணயக்கூட்டுக்களை இலக்கிடும் கட்டமைப் பொன்றினுள் சுதந்திரமாக மிதக்கவிடப்பட்ட செலாவணி வீத அமைப்பின் கீழ் நடைமுறைப்படுத்தி வருகின்றது.** நாணயக் கொள்கை, மீள்கொள்வனவு வீதத்தாலும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்தாலும் உருவாக்கப்பட்ட வட்டிவீதப் பிரிவை முக்கிய கூறாக உள்ளடக்கியுள்ள தீவிர திறந்த சந்தைத் தொழிற்பாடுகளைக் கொண்ட முறைமையுடன் நடைமுறைப்படுத்தப்பட்டது. இம்முயற்சிக்கு நியதி ஒதுக்கு விகிதத்தை 10 சதவீதத்தில் மாற்றமுறாது பேணியதன் மூலம் உதவப்பட்டது. கூடியளவிலான செலாவணி வீதத்திலான உயர் மாறுபாடடையும் தன்மையை தவிர்ப்பதற்காக மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான அந்நிய செலாவணி விற்பனையைக் கருத்திற்கொண்டு, திரவத் தன்மைப் பற்றாக்குறையையும் வட்டி வீதங்களிலான மிதமிஞ்சிய தளம்பல்களையும் தவிர்க்கும்பொருட்டு முதனிலைச் சந்தையில் மத்திய வங்கியால் கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களூடாக நிதியங்களை உட்செலுத்துவதன் மூலம் பணச்சந்தையில் திரவத்தன்மை பேணப்பட்டது.
- **2004 இல் நிலவிய இடர்பாடான பொருளாதார நிலைமைகள் நாணயக் கொள்கை இறுக்கமாக்கலை உரிய நேரத்திலும் ஒழுங்கிலும் மேற்கொள்வதைத் தேவைப்படுத்தின.** 2004 இன் நடுப்பகுதியில் பணவீக்கமும் நாணய வளர்ச்சியும் மேலும் துரிதமடைந்ததைத் தொடர்ந்து மத்திய வங்கி அதன் முதல் நடவடிக்கையாக நாணயக் கூட்டுக்களிலான வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்காக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை யூனில் தீவிரமாகத் தொடங்கி அநேகமாக திரவத்தன்மை மிகை முழுவதையும் உள்ளீர்த்து நிதியங்களின் குறுங்காலச் செலவில் மேல்நோக்கிய சீராக்கத்தைத் தூண்டியது. இரண்டாவதாக, வங்கியின் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதங்கள் 50 அடிப்படைப் புள்ளிகளால் 2004 நவெம்பரில் உயர்த்தப்பட்டன. இதேவேளை, உந்து உருளிகளின் இறக்குமதிகள் போன்ற அத்தியாவசியமற்ற நுகர்வைக் கட்டுப்படுத்தவதற்காக பிரத்தியேக பாவனைக்கான குறிப்பிட்ட சிலவகை உந்து உருளிகளின் இறக்குமதிக்காகத் திறக்கப்படும் நாணயக் கடிதங்கள் மீது 100 சதவீத வைப்பு வரையறையொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது.
- **சுனாமிப் பேரழிவைத் தொடர்ந்து இத் தாக்கத்திலிருந்து பொருளாதாரம் விரைவாக மீட்சிபெற உதவுவதற்காக மத்திய வங்கி பல வழிமுறைகளை அமுலாக்கியது.** நிதிச் சந்தைகளினதும் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் முறையினதும் சுமூகமான தொழிற்பாட்டை உறுதிப்படுத்துவதற்கும் பணச்சந்தையை திரவத் தன்மையுடன் வைத்திருப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. நாளாந்த திறந்த சந்தைத் தொழிற்பாட்டு ஏலங்கள் 2005 சனவரியில் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு 2005 பெப்புருவரி இறுதிவரை தொடர்ந்திருந்த வேளையில், பாதிக்கப்பட்ட கைத்தொழில்களை மீளமைக்க உதவுவதற்காக சலுகை ரீதியிலான வீதத்தில் கடன் திட்டமொன்று உருவாக்கப்பட்டு வங்கித்தொழில் முறையூடாக அமுலாக்கப் பட்டது.
- **2004 முழுவதும் நாணயக் கூட்டுக்கள் விரும்பத்தக்க மட்டத்திற்கு மேலாக தொடர்ந்து விரிவடைந்தன.** நாணயக் கொள்கையின் தொழிற்பாடு இலக்கான ஒதுக்குப்பணம், வருடாந்த நாணய நிகழ்ச்சித் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை விட கிட்டத்தட்ட ரூ.6 பில்லியன் அதிகரித்துக் காணப்பட்டது. இதேவேளை, இடைநிலை இலக்கான விரிந்தபணமும் ($M_{2b}$) அரச துறையினதும், தனியார் துறையினதும் கொடுகடனில் ஏற்பட்ட உயர் அதிகரிப்புக்கள் காரணமாக எதிர்பார்த்ததை விட விரைந்த வளர்ச்சியைப் பதிவு செய்தது.
- **2004 இன் சென்மதி நிலுவை பற்றாக்குறையை பிரதிபலித்து தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் வீழ்ச்சியைடந்தமையினால் ஒதுக்குப் பணத்திலான வளர்ச்சி முழுமையாக மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் விளைவால் ஏற்பட்டதாகும்.** தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களிலேற்பட்ட வீழ்ச்சி, பெரும்பாலும் அரசுக்கான வெளிநாட்டு நிகழ்ச்சித் திட்ட நிதியிடலின் பெறுகைகளிலான தாமதங்களாலும், வெளிநாட்டு செலாவணிச் சந்தையிலான மிதமிஞ்சிய தளம்பலைக் கட்டுப்படுத்துவதற்காக மத்திய வங்கியால் சந்தையில் விற்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் விற்பனைகளாலும் ஏற்பட்டது.

திரவத் தன்மை நெருக்கடியை தவிர்க்கும் பொருட்டும் நிதியியல் முறைமையின் சுமூகமான தொழிற்பாட்டை உறுதிப்படுத்தும் பொருட்டும், மத்திய வங்கி முதலாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்தது. இதன் விளைவாக, மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் கணிசமானளவால் அதிகரித்தன.

- **ஒதுக்குப் பணத்தின் விரிவாக்கத் தாக்கம், இவ்வாண்டின் பிற்பகுதியில் விரைவாக வளர்ச்சியடைந்த குறுகிய மற்றும் விரிந்த நாணயக்கூட்டுக்களின் உயர் வளர்ச்சியில் பிரதி பலிக்கப்பட்டது.** பொதுமக்கள் வசமிருக்கும் நாணயம் மற்றும் கேள்வி வைப்புக்களை உள்ளடக்கிய குறுகிய பணநிரம்பல் 2004 இல் 16.6 சதவீதத்தால் விரிவடைந்தது. இவ்வாண்டின் முதலரைப்பகுதியில், விரிந்த பணத்தின் ($M_{2b}$) வளர்ச்சி 15-16 சதவீத வீச்சில் காணப்பட்ட வேளையில் 2004 இன் இரண்டாம் அரைப்பகுதியில் 17-19.6 சதவீத உயர்வீச்சினுள் தளம்பலுற்றுக் காணப்பட்டது.

- **2003 இன் இறுதிப் பகுதியளவில் விரைந்த வீதத்தில் அதிகரித்த தனியார் துறைக்கான கொடுகடன் விரிவாக்கம், நாணய விரிவாக்கத்துக்குப் பெருமளவில் பங்களிப்புச் செய்து 2004 இல் தொடர்ந்து துரிதமாக அதிகரித்தது.** தனியார் துறைக்கான கொடுகடன் 2004 இல் ரூ.115 பில்லியனால் அதிகரித்து 2003 இன் 17 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2004 இல் 22 சதவீத புள்ளிக்குப்புள்ளி வளர்ச்சியைக் காட்டியது. கொடுகடனில் ஏற்பட்ட உயர் வீதத்திலான விரிவாக்கமானது பொருளாதாரச் செயற்பாடுகளிலான தொடர்ச்சியான மீட்சி, வெளிநாட்டு வர்த்தகத்திலான விரிவாக்கம் மற்றும் உண்மை நியதிகளில் கடன்வழங்கும் வீதங்களிலேற்பட்ட வீழ்ச்சி என்பவற்றின் பிரதிபலிப்பாக காணப்பட்டது. கொடுகடனின் உள்ளடக்கம் 2004 இல் கொடுகடனுக்கான அதிகரித்த கேள்வியை எடுத்துக்காட்டுவதுடன், இது பெரும்பாலும் வர்த்தகம், நிதி, வீடமைப்பு மற்றும் நுகர்வு ஆகிய நோக்கங்களுக்கானதாக விளங்கியது.

- **2004 இல், வங்கித்தொழில் முறைமையிலிருந்தான அரசுக்கான தேறிய கொடுகடன், வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையில் ஏற்பட்ட அதிகரிப்பு, எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு நிதியிடல் மற்றும் தனியார் மயப்படுத்தல் பெறுகைகளில் ஏற்பட்ட பற்றாக்குறைகள் என்பவற்றின் காரணமாக எதிர்பார்த்ததை விட உயர் வீதத்தில் அதிகரித்தது.** வரவு செலவுத் திட்ட நிதியிடலுக்கான வங்கியல்லாத்துறை மூலவளங்களின் கிடைப்பனவிலான மட்டுப்படுத்தல்கள் அரசால் பெறப்பட்ட வங்கிக் கொடுகடனில் அதிகரிப்பை ஏற்படுத்தின. இதன்படி, வங்கித்தொழில் முறையிலிருந்தான அரசுக்கான தேறிய கொடுகடன் 2004 இல் கிட்டத்தட்ட ரூ.44 பில்லியனால் அதிகரித்தது. இவ்வாண்டின் ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்ட மீள்கொடுப்பனவுகளுக்கு மாறாக 2004 இல் அரசக் கூட்டுத் தாபனங்களுக்கான கொடுகடனில் ஏற்பட்ட ரூ.5 பில்லியன் கொண்ட அதிகரிப்பு பண நிரம்பலிலான வளர்ச்சிக்கான முக்கிய பங்களிப்புக் காரணியாக விளங்கியது.

- **இதேவேளை தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களிலிருந்தான நாணய வளர்ச்சிக்கான பங்களிப்பு எறிவு செய்யப்பட்டதைப் பார்க்கிலும் குறைவாகக் காணப்பட்டது.** வங்கித் தொழில் முறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 2004 இல் சிறிதளவால் மேம்பாடடைந்து பணநிரம்பலில் சுமார் 2 சதவீத வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தமைக்கு மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் வீழ்ச்சியடைந்தமையால் வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகவிருந்தது.

- **2003 முழுவதும் நிலவிய வட்டி வீதங்களிலான வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கானது, அதிகரித்துச்செல்லும் பணவீக்கம், பணவீக்க எதிர்பார்ப்புக்கள், அதிகரித்துச்செல்லும் கொடுகடன் கேள்வி மற்றும் நாணயக் கொள்கை இறுக்கமாக்கப்பட்டமை என்பவற்றைத் தொடர்ந்து 2004 இல் சிறு அதிகரிப்புடன் நேர்மாற்றமடைந்தது.** வட்டி வீதங்களிலான அதிகரிப்பை விட விரைவான வீதத்தில் பணவீக்கம் அதிகரித்ததால் பல சந்தைப் பிரிவுகளில் உண்மை வட்டி வீதங்கள் 2004 இல் எதிர்க்கணியமாக மாற்றமடைந்தன. அழைப்புச் சந்தை வீதங்கள் சார்புரீதியில் அடிக்கடி மாறுபாடடையும் தன்மையுடையதாக விளங்கி 2004 இல் மத்திய வங்கி வட்டிவீதப் பிரிவின் உயர் மட்டத்திற்கும் மேலாக சில சந்தர்ப்பங்களில் அதிகரித்தன. இவ்வாண்டில், வர்த்தக வங்கிகளின் கடன்வழங்கும் வீதங்களும் வைப்பு வீதங்களும் அதிகரித்தன. நிறையேற்றப்பட்ட சராசரி வழங்கல் வீதமும், நிறையேற்றப்பட்ட சராசரி வைப்பு வீதமும் இவ்வாண்டின் பிற்பகுதியில் அதிகரிக்கத் தொடங்கின. இவ்வாண்டின் இறுதிப்பகுதியில் பன்னாட்டுச் சந்தை வீதங்கள் அதிகரிக்கத் தொடங்கியதால் இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகளும் வெளிநாட்டு நாணய வைப்புக்கள்

மற்றும் வெளிநாட்டு நாணய கடன்வழங்கல் மீதான அவற்றின் வட்டி வீதங்களை அதிகரித்தன.

- **நீண்ட கால வீதங்கள் உயர் அளவுகளால் அதிகரித்ததனைத் தொடர்ந்து அரசப் பிணையங்கள் மீதான விளைவுகளும் அதிகரித்தன.** இவ்வாண்டின் முதல் ஏழு மாதங்களில் வாராந்த திறைசேரி உண்டியல் மீதான விளைவு அதிகரித்தபோதிலும், அதன் பின்பு அரச கடன்பாடுகள் இலங்கை அபிவிருத்தி முறிகளின் வழங்கலை தொடர்ந்து வெளிநாட்டு நாணய மூலங்களுக்கு நகர்ந்தமையாலும் நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள் அவர்களின் தீவிர பங்கை முதலாந்தரச் திறைசேரி உண்டியல் சந்தையில் அதிகரித்தமையாலும் வீழ்ச்சியடைந்தது. முதலீட்டாளர் விருப்பு குறுங்கால கருவிகளை வைத்திருப்பதை நோக்கி நகர்ந்தமையால் 2004 இல் மேற்கொள்ளப்பட்ட திறைசேரி முறி வழங்கல்கள் குறுகியகால முதிர்ச்சிகளைக் கொண்டிருந்தன. அரசப் பிணையங்களுக்கான இரண்டாந்தரச் சந்தை விளைவுகள் மேல்நோக்கி நகர்ந்ததுடன் மிக நீண்ட காலத்துக்கானவை உயர் வீதத்தில் அதிகரித்து நடுத்தர காலப்பகுதியிலான உயர் பணவீக்க எதிர்பார்ப்புக்களை எடுத்துக் காட்டுகின்றன.

## நிதியியல்துறை அபிவிருத்திகளும் உறுதிப்பாடும்

- **தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சியால் நன்மையடைந்த நிதியியற் துறைச் செயற்பாடுகள் மேலும் விரிவடைந்ததுடன், 2004 இல் நிதியியல் முறைமை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் ஏற்படும் பல திடீர் மாற்றங்களுக்கு மத்தியிலும் தொடர்ந்தும் எழுச்சியுள்ளதாகவே காணப்பட்டது.** பல தரப்பட்ட நிதியியல் கருவிகளும் நிதியியல் பணிகளும் விரிவடைந்தன. சில சந்தைச் சுட்டெண்கள் சாதனை மட்டங்களை அடைந்ததுடன் நிதியியற் சந்தைகளில் வர்த்தகம் செய்யப்படும் அளவுகள் 2004 இல் அதிகரித்தன. மிகச்சிறிய தொழில்முயற்சிகள், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கு நிதியியல் வசதிகளின் கிடைப்பனவை பலப்படுத்துவதற்கும் நிதியைப் பெறுவதற்கான வழிவகைகளை அதிகரிப்பதற்கும் 2004 இல் பல ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதேவேளை, கொடுப்பனவு முறைமையிலான மேலதிக சீர்திருத்தங்களுடன் நிதியியல் உட்கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டு நவீனமானது. 2004 இல் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பு வங்கித் தொழில் முறைமையின் ஆற்றல் வாய்ந்த தன்மையை மேம்படுத்துவதற்காக மேலும் பலப்படுத்தப்பட்டதுடன் சிறந்த பன்னாட்டு நடைமுறைகளுடன் இணைந்து செல்லும் வகையில் மேலும் முன்னோக்கி நகர்த்தப்பட்டது. நிதியியற் துறையில் சட்ட மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் கட்டமைப்பைப் பலப்படுத்துவதற்கும், வினைத் திறன் மற்றும் உறுதிப்பாட்டை மேம்படுத்து வதற்குமென 2004 இல் சட்ட மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் மாற்றங்கள் பல நடைமுறைக் கிடப்பட்டன.

- **பலதரப்பட்ட நிதியியல் துறை குறிகாட்டிகளிலான மேம்பாடுகள் நிதியியல் முறையின் விரிவாக்கத் திற்கு சான்று பகருகின்றன.** செழிப்பான போட்டிச் சந்தைச் சூழலில் விரிவடைந்துவரும் வைப்புத் திரட்டல், வழங்கப்பட்ட கடன்களும் முற்பணங்களும், நிதியியல் நிறுவனங்களின் பணி நிலையங்கள், குத்தகை மற்றும் வாடகைக் கொள்வனவு வசதிகள் மற்றும் காப்புறுதி நடவடிக்கை களிலான அதிகரிப்புக்கள் என்பன இவற்றுள் சிலவாகும். பல நிதியியல் நிறுவனங்களும் பெறுமதி கூட்டப்பட்ட புதிய பணிகளை அறிமுகப்படுத்தியதன் மூலம் அவற்றின் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் பணிகளை விரிவாக்கின. இவ் அபிவிருத்திகளைப் பிரதிபலிக்கும் வகையில், நிதியியல் முறைமையின் பெயரளவு நியதிகளிலான மொத்தச் சொத்துக்கள் 2004 இல் 15 சதவீதத்தினால் விரிவடைந்தன. நிதியியல் பணிகளிலான பெறுமதி கூட்டல் 2004 இல் 6.6 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும், இது 2003 இல் பதிவு செய்யப்பட்ட 10.6 சதவீதத்தை விட குறைவாக இருந்தமைக்கு 2003 இன் இலாபங்களிலான உயர் வளர்ச்சியின் தளத் தாக்கம், இன்னமும் உயர்வாகக் காணப்பட்டபோதிலும் சுருக்கமடைந்த வட்டி வீத வேறுபாடு, முறிகளிலும் பிணையங்களிலுமான முதலீட்டிலிருந்து பெறப் படும் மூலதன மிகையில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பன காரணமாக விளங்கின.

- **பல சந்தைப் பிரிவுகளிலான வர்த்தகம் செய்யும் அளவுகளில் காணப்பட்டவாறு, நிதியியற் சந்தைகள் மேலுமொரு விரிவாக்கத்தைப் பதிவு செய்தன.** வங்கிகளுக்கிடையேயான குறுகிய கால அழைப்புப் பணச்சந்தையிலும், அரச பிணையங்களின் முதலாந்தரச் சந்தையிலுமான செயற்பாடுகள் மேலும் அதிகரித்த போதிலும் அரச பிணையங்களிலான இரண்டாந்தரச் சந்தை கொடுக்கல் வாங்கல்கள் வட்டி வீதங்களிலான நிச்சயமற்ற தன்மை காரணமாக வீழ்ச்சியடைந்தன. 2004 இல் விரிவடைந்த வெளிநாட்டு வர்த்தகச் செயற்பாட்டால் நன்மையடைந்து வெளிநாட்டுச்

செலாவணிச் சந்தையிலான கொடுக்கல் வாங்கல்களின் அளவு அதிகரித்தது. 2004 இல் பங்கு விலைச்சுட்டெண்கள், நாளாந்த வர்த்தக அளவுகள் மற்றும் சந்தை மூலதனமாக்கல் என்பன சாதனை மட்டங்களை அடைந்ததனால் பங்குச்சந்தை மேம்பட்ட செயலாற்றத்தைக் காட்டியது. தற்போது வளரத் தொடங்கியுள்ள கம்பனி முறிச்சந்தை, வழங்கல் செலவுகள், சந்தைப் பங்கேற்பாளர்களின் போதுமானதற்ற விழிப்புணர்வு, இலகுவான மாற்று வங்கி நிதியிடல் கிடைக்கத்தக்கதாக இருத்தல், குறிப்பாக பிர பல்யமான கம்பனிகளுக்கு கவர்ச்சிகரமான வட்டிகளில் வங்கிக் கொடுகடன் கிடைக்கத்தக்கதாக இருத்தல் என்பவற்றால் தொடர்ந்து பாதிப்புக்குள்ளானது.

- **வினைத்திறன், போட்டித்தன்மை, நிதியியற்துறையின் மீள்எழுச்சி என்பவற்றை அதிகரிப்பதற்கும், நிதியியற் துறையின் ஆற்றல் வாய்ந்த தன்மையை மேம்படுத்துவதற்குமென கொடுப்பனவுகள் முறை மையையும் ஒழுங்கு முறைப்படுத்தல் முறை மையையும் தரமுயர்த்தி பலப்படுத்துவதற்காக 2004 இல் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.** பத்திரங்களற்ற வடிவில் அரச பிணையங்களின் தீர்ப்பனவை வசதிப்படுத்துவதற்காக பத்திரங்க ளற்ற பிணையங்கள் முறைமையையும் மத்திய வைப்பக முறைமையையும் 2003 இல் அமுலாக்கப்பட்ட அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமையுடன் இணைப்பதன் மூலம் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவு முறைமைகளில் மேலும் அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டது.

- **புதிய சட்டங்களையும் பணிப்புரைகளையும் அறிமுகப்படுத்துவதன் மூலம் ஒழுங்குமுறைப் படுத்தல் கட்டமைப்பு மேலும் பலப் படுத்தப்பட்டது.** துணைக்கம்பனிகளை உள்ளடக்கத்தக்க விதத்தில் திரண்ட அடிப்படையில் மூலதனபோதுமைத் தேவைப்பாட்டைப் பிரயோகித்தல், செயற்படாக் கடன்களுக்கான ஒதுக்குத் தேவைகளை ஒழுங்குபடுத்தல், வெளிக்கணக்காய்வுப் பணியுடன் சமகாலத்தில் வங்கிகளில் கணக்காய்வல்லாத பணிகளை பொறுப்பேற்கக் கூடாதென வெளிக் கணக்காய்வாளர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கல், மற்றும் கொடுகடன் தரமிடல்களைப் பெற்று அவற்றை 2005 நடுப்பகுதியில் வெளியிட வேண்டுமென வங்கிகளைக் கோருதல் என்பன இது தொடர்பில் மத்திய வங்கியால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளாகும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பை பலப்படுத்துவதற்கென வங்கித் தொழில் சட்டத்துக்கான திருத்தமொன்றுக்கு நாடாளுமன்றத்தால் ஒப்புதலளிக்கப்பட்டது. கொடுப்பனவு பரிமாற்றல்களுக்கான ஒருங்கிணைந்த சட்டத்தை வழங்கும் வேளையில் இலங்கையில் கொடுப்பனவுகள், தீர்த்தலும், தீர்ப்பனவு செய்தலும் ஆகிய முறைமைகளை ஆளுகைக்குட்படுத்தும் சட்ட கட்டமைப்பைப் பலப்படுத்துவதற்கான புதிய கொடுப்பனவுகள் முறைமைகள் சட்டமும் இயற்றப்பட்டது.

- **2005 இல் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டைப் பேணுவதில் ஏனைய பல கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் காணப்பட்டபோதிலும், 2004 இறுதியில் நிகழ்ந்த சுனாமிப் பேரழிவானது நிதியியற் துறையின் உறுதிப்பாட்டுக்கு முக்கிய சவாலை ஏற்படுத்தவில்லை.** உலக பொருளா தாரச் சூழல் தற்போது சாதகமாக இருந்த போதிலும் உலகளாவிய பொருளாதார வளர்ச்சி மெதுவடைதல், பெற்றோலிய விலைகளில் தொடரும் நிச்சயமற்ற தன்மைகள், கொள்கை ஊக்கு விப்புகளின் படிப்படியான நீக்கத்துடன் அதிகரித்துச் செல்லும் பன்னாட்டு வட்டி வீதங்கள் மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகளில் கணிசமாளவில் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லும் இரட்டைப் பற்றாக்குறைகள் அதாவது இறைப் பற்றாக்குறை வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை போன்ற பல காரணிகளால் நிச்சய மற்றதாக மாறக்கூடும். பணவீக்கம், உதவிப் பாய்ச்சல்கள், எரிபொருள் விலைகள் என்பவற்றிலான தொடர்ச்சியான நிச்சயமற்ற தன்மைகள், பல்புடை நூலிழை உடன்படிக்கை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டமையால் ஏற்பட்ட தாக்கங்களிலிருந்து எழும் பன்னாட்டு வர்த்தகத்தில் ஏற்படக்கூடிய மெதுவடைவு மற்றும் இறைத் திரட்சியை எய்து வதற்கான அச்சுறுத்தல்கள் என்பவற்றால் உள்நாட்டு பொருளாதாரச் சூழல் பாதிப்படையக் கூடும். சொத்துக்களின் தரத்தினை உறுதிப் படுத்துவதற்கு கவனம் செலுத்தப்படாவிடின் உயர் கொடுகடன் விரிவாக்கமானது நிதியியல் முறையின் உறுதிப்பாட்டுக்கு அச்சுறுத்தலாக அமையலாம். எனினும், நிதியியல் நிறுவனங்கள் தொடர்ந்து பலமடைதல் மற்றும் மேம்பாடடைந்த இடர்நேர்வு முகாமைத்துவ உத்திகள், ஒழுங்கமைப்பு மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பைப் பலப்படுத்தல், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளிலான மேம்பாடுகள் என்பவற்றுடன் இத்துறை அவ்விடர்நேர்வுகளை வெற்றிகரமாக முகாமைப் படுத்தக் கூடியதாக இருக்கும்.

- **நிதியியற் துறைச் செயற்பாட்டின் விரிவாக்கத்துக்கு மத்தியிலும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய**

அட்டவணை 1.4

**நடுத்தரகாலப் பேரண்டப் பொருளாதாரக் கட்டமைப்பு : 2005 - 2008**

| குறிகாட்டி | அலகுகள் | 2004(அ) | சுனாமிக்கு முன்னர் 2005 | 2006 | 2007 | 2008 | சுனாமிக்குப் பின்னர் 2005 | 2006 | 2007 | 2008 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **உண்மைத்துறை** | | | | | | | | | | |
| சந்தை விலைகளில் மொ.உ.உ. | ரூ.பில்லியன் | 2,029 | 2,297 | 2,605 | 2,914 | 3,242 | 2,343 | 2,658 | 3,000 | 3,371 |
| உண்மை மொ.உ.உ. வளர்ச்சி | % | 5.4 | 6.0 | 6.0 | 6.5 | 7.0 | 5.3 | 6.0 | 6.5 | 7.0 |
| பணவீக்கம் மொ.உ.உ. சுருக்கி | % | 9.2 | 9.0 | 7.0 | 5.0 | 4.0 | 9.7 | 7.0 | 6.0 | 5.0 |
| மொத்த முதலீடு | மொ.உ.உ % | 25.2 | 28.0 | 30.0 | 32.0 | 34.0 | 30.0 | 32.2 | 32.8 | 33.9 |
| தனியார் முதலீடு | மொ.உ.உ % | 19.8 | 21.1 | 22.7 | 24.2 | 25.9 | 21.9 | 22.7 | 24.2 | 25.9 |
| அரச முதலீடு | மொ.உ.உ % | 5.2 | 6.9 | 7.3 | 7.8 | 8.1 | 8.1 | 9.5 | 8.6 | 8.0 |
| உள்நாட்டுச் சேமிப்புக்கள் | மொ.உ.உ % | 15.9 | 18.4 | 20.8 | 22.4 | 25.6 | 17.0 | 20.8 | 22.2 | 24.8 |
| தனியார் சேமிப்புக்கள் | மொ.உ.உ % | 19.8 | 18.8 | 20.1 | 20.6 | 20.1 | 18.6 | 20.3 | 19.8 | 21.2 |
| அரச சேமிப்புக்கள் | மொ.உ.உ % | -3.9 | -0.5 | 0.7 | 1.8 | 5.5 | -1.6 | 0.5 | 2.4 | 3.6 |
| தேசிய சேமிப்பு | மொ.உ.உ % | 21.6 | 24.0 | 26.4 | 28.4 | 31.5 | 23.1 | 26.1 | 27.6 | 30.1 |
| **வெளி நாட்டுத்துறை** | | | | | | | | | | |
| வர்த்தக இடைவெளி | ஐஅடொ.மில் | -2,243 | -2,518 | -2,622 | -2,928 | -2,936 | -3,370 | -3,353 | -3,478 | -3,406 |
| ஏற்றுமதிகள் | ஐஅடொ.மில் | 5,757 | 6,305 | 6,821 | 7,383 | 8,027 | 6,354 | 6,860 | 7,343 | 7,978 |
| இறக்குமதிகள் | ஐஅடொ.மில் | 8,000 | 8,824 | 9,443 | 10,311 | 10,963 | 9,725 | 10,213 | 10,821 | 11,384 |
| பணிகள் | ஐஅடொ.மில் | 419 | 474 | 518 | 544 | 618 | 352 | 484 | 521 | 593 |
| பெறுகைகள் | ஐஅடொ.மில் | 1,527 | 1,719 | 1,866 | 2,015 | 2,199 | 1,572 | 1,794 | 1,952 | 2,131 |
| கொடுப்பனவுகள் | ஐஅடொ.மில் | 1,108 | 1,245 | 1,348 | 1,471 | 1,581 | 1,220 | 1,310 | 1,431 | 1,538 |
| நடைமுறைக் கணக்கு நிலுவை | ஐஅடொ.மில் | -648 | -824 | -792 | -872 | -672 | -1,572 | -1,505 | -1,408 | -1,133 |
| நடைமுறைக்கணக்கு நிலுவை | மொ.உ.உ % | -3.3 | -3.9 | -3.5 | -3.5 | -2.4 | :6.8 | -6.0 | -5.1 | -3.7 |
| மொத்த நிலுவை | ஐஅடொ.மில் | -205 | 97 | 108 | 73 | 202 | 101 | 176 | 200 | 250 |
| வெளிநாட்டு அலுவல்சார்ஒதுக்குகள் (மாதத்திற்கான இறக்குமதி) | மாதங்கள் | 2.8 | 2.6 | 2.8 | 2.8 | 2.9 | 2.7 | 2.9 | 3.1 | 3.2 |
| படுகடன்பணி விகிதம் (ஆ) | % | 11.5 | 11.8 | 10.5 | 9.5 | 9.6 | 7.4 | 11.1 | 10.0 | 9.7 |
| **இறைத்துறை** | | | | | | | | | | |
| வருவாய் | மொ.உ.உ % | 15.4 | 17.2 | 18.0 | 18.9 | 19.5 | 16.9 | 17.8 | 18.8 | 19.5 |
| செலவு | மொ.உ.உ % | 23.5 | 24.8 | 24.7 | 24.6 | 23.9 | 26.5 | 26.8 | 25.1 | 24.0 |
| நடைமுறைக் கணக்கு நிலுவை | மொ.உ.உ % | -3.9 | -1.3 | 0.4 | 2.2 | 3.6 | -1.6 | 0.5 | 2.4 | 3.6 |
| மொத்த வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை | மொ.உ.உ % | -8.2 | -7.6 | -6.7 | -5.7 | -4.4 | -9.6 | -9.0 | -6.3 | -4.4 |
| உள்நாட்டு நிதியிடல் | மொ.உ.உ % | 5.8 | 4.6 | 3.5 | 2.7 | 1.6 | 3.6 | 2.9 | 2.0 | 1.6 |
| **நிதியியல் துறை** | | | | | | | | | | |
| ஒதுக்குப் பண வளர்ச்சி | % | 20.9 | 14.5 | 13.5 | 12.0 | 11.5 | 15.0 | 14.0 | 13.0 | 12.5 |
| குறுகிய பண வளர்ச்சி($M_1$) (இ) | % | 16.6 | 12.5 | 11.5 | 10.0 | 9.5 | 13.0 | 12.0 | 11.0 | 10.5 |
| விரிந்த பண வளர்ச்சி($M_{2b}$) (இ) | % | 19.6 | 14.5 | 13.5 | 12.0 | 11.5 | 15.0 | 14.0 | 13.0 | 12.5 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடனின் வளர்ச்சி(இ) | ரூ.பில்லியன் | 4.9 | -15.0 | -5.0 | -5.0 | -5.0 | -15.0 | -5.0 | -5.0 | -5.0 |
| தனியார்துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி(இ) | ரூ.பில்லியன் | 114.8 | 120.0 | 126.7 | 131.1 | 126.2 | 114.6 | 125.3 | 130.8 | 141.6 |
| தனியார்துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி (இ) | % | 22.1 | 18.6 | 16.6 | 14.8 | 12.4 | 18.0 | 16.7 | 15.0 | 14.1 |

(அ) தற்காலிகமானவை

(ஆ) வணிக ஏற்றுமதிகளிலும் பணிகளிலுமிருந்தான வருவாய்களின் சதவீதமாக மொத்தப்படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

(இ) ஆண்டின் இறுதிப் பெறுமதிகளில் புள்ளிக்குப் புள்ளி வளர்ச்சி

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**சில பிரச்சனைகளும் சவால்களும் காணப்படுகின்றன.** குறிப்பாக வங்கித் தொழில்துறையில் காணப்படும் முக்கிய பிரச்சனைகளில் ஒன்றாக சார்புரீதியில் உயர்வாகக் காணப்படும் இடையீட்டுச் செலவு விளங்குகிறது. வட்டி வீத வேறுபாட்டால் அளவிடப்படும் உயர் இடையீட்டுச் செலவுக்குப் பங்களிப்புச் செய்யும் முக்கிய இரு காரணிகளாக மோசமான கொடுகடன் முகாமைத்துவம் அல்லது அதிகரித்த செயற்படாக் கடன்களும் அதிகரித்த ஊழியர் செலவுகளும் காணப்பட்டன. கம்பனி முறிச் சந்தையின் குறைவிருத்தி தன்மை, காப்புறுதியின் குறைந்தளவிலான நுழைவு, நிதியியற் சந்தைகளிலான குறைந்தளவு ஒருங்கிணைப்பு மற்றும் நிதியியற் பணிகள் மீதான வரி விதிப்பினால் விளைவிக்கப்பட்ட சந்தைத் திரிபுகள் என்பன நிதியியற் துறையிலுள்ள ஏனைய பிரச்சனைகளுள் சிலவாகும். நிதியியற் பணிகளுக்கு வரி விதிப்பதன் குறிக்கோள் அரசுக்கான அரசிறையை அதிகரிப்பதாக இருந்தபோதிலும் வேறுபட்ட சந்தை களிடையே நிதியியல் இடையீட்டுச்

செலவை திரிபுபடுத்தாதிருக்கும் வகையில் ஒரே மாதிரியான வரி விதித்தலை வேறுபட்ட சந்தைகளிடையே பேணுவதற்கு உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். சுனாமிப் பேரழிவைக் கருத்திற்கொண்டு இயற்கை அனர்த்தங்களை எதிர்கொள்வதற்கு நிதியியற் துறையினை தயார்நிலையில் வைத்திருப்பதற்கான தேவை கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நடுத்தர கால பேரண்டப் பொருளாதார கட்டமைப்பு, பிரச்சனைகள் மற்றும் கொள்கைகள்

**மனித உயிர்கள் மற்றும் சொத்துக்களுக்கு பாரிய சேதத்தை விளைவித்து இலங்கை மக்களுக்கு ஆற்றுப்படுத்த முடியாத துன்பத்தை விளைவித்த 2004 திசெம்பரிலான சுனாமியானது நிவாரணம், புனரமைப்பு மற்றும் மீள்கட்டுமானம் என்பவற்றுக்கு கணிசமான மூலவளத் தேவைப்பாட்டை ஏற்படுத்தி இலங்கையின் நடுத்தரகால பேரண்டப் பொருளாதாரக் கட்டமைப்பின் தோற்றப்பாட்டை மாற்றியது.** இயற்கைப் பேரழிவானது இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாட்டில் பல பண்புகளை வெளிக் காட்டியுள்ளதுடன் இது புதுபிக்கப்பட்ட இனங்காணலை வேண்டுகின்றது. தகவல், அறிவு மற்றும் மூலவளங்களைப் பகிர்ந்து கொள்வதை இயலச்செய்யும் உலகமயமாக்கலின் சாதகமான தாக்கங்கள் பாரிய அழிவுகளை மிகவும் குறைத்திருக்கக் கூடிய அடிப்படைக் காரணியாகத் தோற்றம் பெற்றுள்ளன. பாரியளவிலான பேரழிவுகளை கையாள்வதற்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலுமுள்ள சகல சக்திகளினதும் முயற்சிகள் தேவைப்படுவதுடன், இவை உள்நாடு அதேபோன்று வெளிநாட்டிலுள்ள வேறுபட்ட மக்களினதும் நிறுவனங்களினதும் பிரிவுகளிடேயே ஒருமைப் பாட்டையும் நன்மதிப்பையும் பேணுவதற்கான தேவையைக் கோடிட்டுக்காட்டுகிறது. பேரழிவுகளைத் தாங்கிக் கொள்வ தற்கும் முகாமைப்படுத்துவதற்குமென, நிதியியல், தொழில்நுட்ப மற்றும் முகாமைத் துறைகளில் உள்ள இயலளவை பலப்படுத்துவதற்கான மிக முக்கியமான தேவை இருக்கிறது.

- **2005 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட நடுத்தரகால பேரண்டப் பொருளாதரக் கட்டமைப்பானது நிவாரணம், புனரமைப்பு மற்றும் மீள்கட்டமைப்பு என்பவற்றுக்கு வசதியளிப்பதற்கென திருத்தி அமைக்கப்பட்டது.** மீன்பிடி மற்றும் சுற்றுலாத் துறைகள் மீதான சுனாமியின் தாக்கம் காரணமாக பொருளாதார வளர்ச்சி 2005 இல் சிறிதளவால் பாதிப்படையும். அதிகரித்த மீள்கட்டுமான நடவடிக்கைகள் மீன்பிடி மற்றும் சுற்றுலாவிலான பொருளாதாரச் செயற்பாடுகளின் இழப்பை ஓரளவிற்கு ஈடுசெய்யும். அரசின், பிராந்திய அபிவிருத்தியிலான புதுப்பிக்கப்பட்ட வலியுறுத்தல்கள், மற்றும் நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டம் என்பவற்றை தொடர்ந்து 2006 இலிருந்து வளர்ச்சி சகல துறைகளிலும் சகல பூகோளப் பிராந்தியங்களுக்கும் பரந்து காணப்படும் வகையில் 6 சதவீதத்துக்கும் அதிகமாக விரைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன் விளைவாக, பொருளாதார வளர்ச்சியில் எதிர்பார்க்கப்படும் அதிகரிப்பு மற்றும் அரசின் இடைவிடா முயற்சி என்பன காரணமாக தொழிலின்மை படிப்படியாக வீழ்ச்சியடையுமென எதிர் பார்க்கப்படுகிறது. அரச துறைச் சேமிப்புக்களில் எதிர்பார்க்கப்படும் மேம்பாட்டின் முக்கிய காரணமாக தேசிய சேமிப்புக்கள் அதிகரிக்கும். அரசியல் மற்றும் பொருளாதார உறுதிப்பாட்டுக்கு சாதகமாக பதிலிறுக்கும் முதலீடுகள், புதிய பொருளாதார கொள்கைச் சூழல் தொடர்பான தெளிவான தன்மை படிப்படியாக அடையப்படுவதனைத் தொடர்ந்து முதலீட்டுச் சபையாலும் அரசாலும் வழங்கப்படும் ஊக்குவிப்புக்களின் நன்மைகளைப் பிரதிபலிக்கும் வகையில் அதிகரிக்கும்.
- **பல்புடை நூலிழை உடன்படிக்கை கட்டம்கட்டமாக அகற்றப்படுவதனால் ஏற்படும் தாக்கத்துக்கு மத்தியிலும், உலகளாவிய பொருளாதார விரிவாக்கம் மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகள், ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா, பாக்கித்தான் ஆகிய நாடுகளிலிருந்தான முன்னுரிமை வாய்ந்த வர்த்தகப்படுத்தல் அணுகுமுறை என்பவற்றி லிருந்து நன்மையடைந்து ஏற்றுமதிகள் தொடர்ந்து வளர்ச்சியடையும்.** இலங்கையின் போட்டித் தன்மையையும், ஏற்றுமதியால் வழிப்படுத்தப்படும் அபிவிருத்தி உத்திகளையும் மேம்படுத்துவதிலான அரச முயற்சிகளுடன் தனியார் துறை தொழில் முயற்சியாண்மைகளும் இணைந்து உயர்ந்த ஏற்றுமதி வளர்ச்சியை எய்துவதனை இயலச்செய்யும்.
- **நிவாரணம், புனரமைப்பு மற்றும் மீள்கட்டுமானத் திற்கான தேவைகளுடன் இறக்குமதிகளும் நடுத்தர காலத்தில் உயர்ந்த வீதத்தில் அதிகரிக்கும்.** எனினும், நடுத்தர காலத்தில் வர்த்தகப் பற்றாக்குறையில் விளைவிக்கப்படும் அதிகரிப்பு, சலுகை ரீதியிலான வெளிநாட்டு உதவியினூடாக நிதியிடப்படும். மிதக்கவிடப்பட்ட செலாவணிவீத அமைப்பின் தொடர்ச்சியும், அதிகரித்த உட்பாய்ச்சல்களும் சென்மதி நிலுவையையும் ஒதுக்கு நிலைமையையும்

மேம்படுத்தி செலாவணி வீதத்தின் மீதான அழுத்தத்தை குறைவடையச் செய்யும்.

- **உள்நாட்டு மூலவளங்கள் மீது சுமையை ஏற்படுத்தாது, வெளிநாட்டு நிதி உதவியினூடாக நிதியிடப்படவிருக்கும் நிவாரணம், புனரமைப்பு மற்றும் மீள்கட்டுமானம் மீதான மேலதிக அரச செலவினத்துடன் நடுத்தர காலத்தில் அரச செலவினம் பெருமளவில் அதிகரிக்கும்.** எனவே, 2005 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டபோது குறிப்பிடப்பட்ட இறைத் திரட்சி குறிப்பிடத்தக்களவில் அச்சுறுத்தலுக் குள்ளாகாது. அவ்வாறான இறைத்திரட்சியின் முக்கிய அடிப்படைகளாக அதிகரித்த அரசிறை, செலவினத்தின் குறைப்பு மற்றும் படுகடனின் தாக்குப்பிடிக்கும் தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் நடைமுறைக் கணக்கில் மிகையை உருவாக்கல் என்பன விளங்கின. முன்மொழியப் பட்ட இறைத்திரட்சி நடவடிக்கைகள் உயர் பொருளாதார வளர்ச்சி வீதங்களுடன் இணைந்து அரச முதலீட்டை அதிகரிக்க இயலச்செய்து நடுத்தர காலத்தில் மொ.உ.உற்பத்திக்கான படுகடனின் விகிதத்தைக் குறைக்கும்.

- **நடுத்தரக் காலத்தில் விலை உறுதிப்பாட்டைக் கொண்டுவருவதற்காக நாணய விரிவாக்கம் கட்டுப்படுத்தப்படும்.** 6 சதவீதத்திற்கும் கூடுதலான பொருளாதார வளர்ச்சியை எய்துவதனை வசதிப்படுத்தும் வகையில் நாணய விரிவாக்கத்தினை 2005 இல் 15 சதவீதத்திற்குக் கட்டுப்படுத்தி 2008 அளவில் 12.5 சதவீதத்திற்கு படிப்படியாக குறைக்கும் வேளையில் பணவீக்க வீதத்தை 2005 இன் தொடக்கத்திலான 11 சதவீதத்திலிருந்து படிப்படியாகவும் தொடர்ச்சியாகவும் 2008 இல் 5 சதவீதத்திற்கு குறைப்பதற்கும் எதிர்பார்க்கப் படுகிறது. அரசு மற்றும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடனில் எதிர்பார்க்கப்படும் வீழ்ச்சி நாணய முகாமைத் துவத்திற்கு வசதியளிக்கும்.

- **நடுத்தரகால பேரண்டப் பொருளாதார கட்டமைப்பின் இலக்குகள் அடையப்படுவதனை இடையூறுபடுத்தும் கீழ்நோக்கிய பல இடர்நேர்வுகள் காணப்படுகின்றன.** பெருமளவு இடையூறுகளை ஏற்படுத்தும் இடர்நேர்வுகளாக எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு உதவிப் பாய்ச்சலிலான ஏதேனும் தாமதம், இதைத் தொடர்ந்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஏற்படக்கூடிய ஏதேனும் பாதகமான திடீர் மாற்றங்கள், சமாதான முன்னெடுப்புக்களிலான பாதகமான நிகழ்வுகள் மற்றும் பேரண்டப் பொருளாதார முகாமைத் துவத்திலான நழுவல்கள் என்பன விளங்கு கின்றன. திட்டமிடப்பட்டவாறு வெளிநாட்டு நிதியங்களைப் பகிர்ந்தளித்து பொதுமக்கள் நம்பகத் தன்மையை அதிகரிக்கும் வகையில் தேசத்தைக் கட்டி யெழுப்புவதற்கு அரசு திட்டமிட்டபடி மீளக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டத்தை விரைவாக அமுல்படுத்த வேண்டும். உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ எழும் எதிர்பாராத பாதகமான திடீர் மாற்றங்கள் வளர்ச்சி உத்வேகத்தை பாதிக்கக்கூடும். நம்பிக்கையை விருத்திசெய்து கொண்ட பொருளாதாரச் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வதற்கான உகந்த சூழலைப் பேணுவதற்கு சமாதான முன்னெடுப்புக்களிலான முன்னேற்றம் தொடர வேண்டும். பேரண்டப் பொருளாதார முகாமைத்துவத்திலான நழுவல்கள், வளர்ச்சி உத்வேகம், வெளிநாட்டு நிலுவை, இறைத் திரட்சி மற்றும் நாணய உறுதிப்பாடு என்பவற்றை பலவீனப்படுத்தி உயர்ந்த பணவீக்கம், குறைந்த தொழில்நிலை மற்றும் பொருளாதாரம் இலகுவில் பாதிப்புக்குள்ளாகக் கூடிய தன்மை என்பவற்றிற்கு இட்டுச் செல்லலாம்.

**நடுத்தரக் கால பேரண்டப் பொருளாதாரக் கட்டமைப்பில் எடுத்துக்காட்டப்பட்ட செயலாற்றத் தைவிட சிறந்த செயலாற்றத்தை எய்துவது, மத்திய வங்கி ஆண்டறிக்கையின் முந்திய பாதிப்புக்களில் திரும்பத்திரும்ப வெளிப்படுத்தப்பட்ட பல முக்கிய பிரச்சனைகளை எடுத்தியம்புவதிலும், சுனாமியால் விளைவிக்கப்பட்ட சவால்களை பயனுள்ள முறையில் எதிர்கொள்வதிலும் முக்கியமாகத் தங்கியுள்ளது.** இது தொடர்பில், அரசாங்கம், அதன் தொழிற்பாட்டு அமைப்புக்களான நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான செயலணிக்குழு, மீட்பு மற்றும் நிவாரணத்திற்கான செயலணிக் குழு என்பவற்றினூடாக அனர்த்த முகாமைத்துவ கொள்கைகள் மற்றும் உத்திகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் தேசிய மீள்கட்டியெழுப்பல் நிகழ்ச்சித் திட்டத்தை அபிவிருத்தி செய்தல், என்பவற்றில் ஈடுபட்டுள்ளது. நிலையான சமாதானத்தை மீள ஏற்படுத்தல், தொடர்ச்சியான அரசியல் உறுதிப்பாட்டைப் பேணல், சட்டத்தையும் ஒழுங்கையும் பேணல், பேரண்டப் பொருளாதார முகாமைத்துவத்தை மேம்படுத்தல், பொருளாதார ஆளுகையை மேம்படுத்தல் என்பவற்றிலும் அரசு ஈடுபட்டுள்ளது. அரசின் உதவுதொகையின்றி அவர்களின் சொந்த மூலவளங்களைக் கொண்ட வெற்றிகரமான பொருளாதார முகவர்களாக விளங்குவதற்கான ஊக்குவிப்புத் திட்டத்தை அபிவிருத்தி செய்தல், முக்கிய அமைப்பு ரீதியிலான சீர்திருத்தங்களைப் பொறுப்பேற்றல், பொருளாதார

உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், நலம், கல்வி மற்றும் பாதுகாப்பு வலையமைப்பு என்பவற்றிலான சீர்திருத்தங்களினூடாக சமூக உட்கட்டமைப்பையும் மனித மூலதனத்தையும் அபிவிருத்தி செய்தல், தொழில்நுட்பத்தை ஊக்குவித்தல், ஆராய்ச்சியையும் அபிவிருத்தி யையும் ஊக்குவித்தல், நிதியைப் பெறுவதற்கான வழிவகைகளை மேலும் அதிகரித்தல், வளர்ச்சி மற்றும் வருமானப் பகிர்ந்தளிப்பில் கூடியளவு சமநிலையை உறுதிப்படுத்தல், நீடித்திருக்கக்கூடிய அபிவிருத்திக்கான சூழல் பாதுகாப்பு மற்றும் உலகமயமாதல் செயன்முறையில் காத்திரமான முறையில் ஒன்றிணைதல் என்பனவும் அவசியமாகும்.

**சுதந்திரத்தின் பின்னரான காலப்பகுதி முழுவதிலும் குறைந்த இடைவெளிகளிலும் அதிகரித்த செறிவுடனும் இயற்கை அனர்த்தங்களாலும், மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட அனர்த்தங்களாலும் இலங்கை பலமுறை தாக்குதலுக்குள்ளானது என்பதை தெளிவாக அறிந்து கொண்டதன் மூலம் அனர்த்த முகாமைத்துவம் முன்னுரிமை பெற்றுள்ளது.** பல உள்நாட்டு யுத்தங்களும் முரண்பாடுகளும் நாட்டுக்கு நிரந்தர சேதத்தை ஏற்படுத்தியுள்ளன. அவ்வாறான அனர்த்தங்களின் கொடூரமானது இலங்கையிலிருந்து குறிப்பிடத்தக் களவான மூளைசாலிகளை வெளியேற நிர்ப்பந்தித்ததன் மூலம் அவ்வாறு தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களின் பயனை நாட்டின் முன்னேற்றத்துக்குக்கிடைக்காமற் செய்கின்றது. வேளாண்மை, வலு உருவாக்கம், மற்றும் வலுவில் தங்கியுள்ள ஏனைய சகல பொருளாதாரச் செயற்பாடுகளிலும் கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்தும் வரட்சிச் சுற்று ஒவ்வொரு நான்கு வருடங்களிலும் மீள் தோற்றம் பெறுகிறது. நீர் மின்வலுவிலும் உயர்ந்த செலவுடைய வெப்ப மின்வலுவிலும் அளவுக்கு அதிகமாக தங்கியிருந்தமை வரட்சிச் சுற்றுடன் இணைந்து சமகாலத்தில் நிகழும் கீழ்நோக்கிய வியாபாரச் சுற்றை உருவாக்கியுள்ளது. பெரும்பாலான வேளாண்மைப் பிரதேசங்களில் அழிவுகளை விளைவிக்கும் வெள்ளம் வழமையாக வரட்சியை தொடர்ந்து ஏற்படுகின்றது. பூமியதிர்ச்சி மற்றும் பூகம்பத்துடன் தொடர்புற்ற அசைவுகளால் உருவாக்கப்படும் சுனாமிகளிலிருந்து இலங்கை சார்பு ரீதியில் பாதுகாப்பாகவுள்ளது என்ற எண்ணம் முடிவுக்கு வந்துள்ளதென்பதை அண்மையில் இடம்பெற்ற சுனாமிப் பேரழிவு வெளிப்படுத்துகிறது. எனவே, ஒவ்வொரு தனியார், அரச, அரச சார்பற்ற மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் ஒப்பீட்டளவிலான அனுகூலத்தைப் பயன்படுத்தி முழுப் பொருளாதாரத்தையும் உள்ளடக்கத்தக்கதாக தேசிய அனர்த்தத் தவிர்ப்பு மற்றும் முகாமைத்துவ உத்திகள் உருவாக்கப்பட வேண்டும்.

- **இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைகளின் முன்னைய பதிப்புக்களில் கலந்துரையாடப்பட்டவாறு சந்தைகள் காத்திரமாக தொழிற்படுவதற்கும் பொருளாதாரம் தொடர்ந்து உறுதியாக இருப்பதற்குமான உகந்தவொரு பேரண்டப் பொருளாதர சூழலை உருவாக்கு வதற்கு பேரண்டப் பொருளாதார முகாமைத் துவத்தில் முன்னேற்றம் அத்தியாவசியமாகிறது.** தற்போது மேம்பாட்டை வேண்டிநிற்கும் துறைகளாக முகாமைத்துவப்படுத்தத்தக்க மட்டத்திற்கு அரசப் படுகடனைக் குறைத்தல், படுகடனை தாக்குப் பிடிக்கும் மட்டத்தில் பேணுவதற்கு தேவையான மிகைகளை உருவாக்குவதற்காக முதன்மைப் பற்றாக்குறையையும் நடைமுறைக் கணக்குப் பற்றாக் குறையையும் கட்டுப்படுத்தல், அளவுக்கதிக மான நாணய விரிவாக்கத்தைக் கட்டுப்படுத்தல், தோற்றம் பெற்றுவரும் எதிர்க்கணிய வட்டி வீதங்கள் பிரச்சனைக்கு தீர்வுகாணல் மற்றும் வெளிநாட்டு ஒதுக்குகளை கட்டியெழுப்பல் என்பன விளங்கு கின்றன. தேவைப்படும் வலுவானதும் நீடித்து நிலைத்திருக்கக் கூடியதுமான இறைச்சீராக்கச் செயல்முறை, இறை முகாமைத்துவ (பொறுப்பாண்மைச்) சட்டத்தின் நடுத்தரகால இலக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. விலை உறுதிப்பாட்டைப் பேணுவதை நோக்கமாகக் கொண்ட நாணய விரிவாக்கத்தைக் கட்டுப் படுத்துவதில் காத்திரமாக தொழிற் படுவதற்கு, இறைத்திரட்சி நாணயக் கொள்கைக்கு வழிவகுக்கின்றது. நெகிழ்ச்சித் தன்மை கொண்ட செலாவணிவீத அமைப்பை தொடர்ந்து பின் பற்றுவதானது உறுதிப்பாட்டை சீர்குலைக்கும் காரணிகளின் ஒன்றுதிரட்டலை இல்லாதொழிக்கும்.

- **பேரண்டப் பொருளாதார முகாமைத்துவத் திலான மேம்பாடுடன் இணைந்து செல்வதற்கு அத்தியா வசியமான அமைப்பு ரீதியிலான சீர்திருத்தங்களை உடனடியாக மேற்கொள்வது அத்தியாவசிய மாகிறது.** சீர்திருத்தங்களின் நன்மைகளை இல்லாமற் செய்யக்கூடிய சீர்குலைக்கும் கார ணிகளை குறைக்கும் அதேவேளை, சந்தையை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறைகளை அபிவிருத்தி செய்வதனூடாக வினைத்திறன் குறைந்த துறைகளிலிருந்து மனித, பௌதீக மற்றும் நிதியியல் மூலவளங்களை கூடிய வினைத்

திறன் உள்ளதும் கூடிய சமூகத் தேவைகளைக் கொண்டதுமான துறைகளுக்கு மீள்பகிர்ந்தளிப்பதனை இயலச் செய்து நாட்டின் உள்ளார்ந்த வெளியீட்டை அதிகரிப்பதற்கான தொடர்ச்சியான அமைப்பு ரீதியிலான சீர்திருத்தங்கள் அவசியமாகின்றன. கடந்த ஆண்டுகளில், இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கைகள் அமைப்பு ரீதியிலான சீர்திருத்தங்கள் அத்தியாவசியமாகத் தேவைப்படும் பல துறைகளை இனங் கண்டுள்ளன. பொருளாதார தாராள மயமாக்கலுடன் 1977 இலிருந்து அமுல்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள், உயர்ந்த பொருளாதார வளர்ச்சியை உருவாக்கக்கூடிய சந்தையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரக் கட்டமைப்பைத் தொழிற் படுத்தியமை நன்மையானது என்பதனை நிரூபித்துள்ளன. எனினும், தொழிலாளர் மற்றும் காணிச் சந்தைகள், சிவில்பணி, அரசு தொழில்முயற்சிகள், கல்வி, நலம், ஓய்வூதியங்கள், நலன்புரி மற்றும் பாதுகாப்பு வலையமைப்புகள், நிதியியல் துறை, நீதித்துறை செயற்பாடுகள் மற்றும் ஒழுங்கமைப்பு முறைமை ஆகிய துறைகளில் சீர்திருத்தங்களுக்கான மேலதிக வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. 2004 இல் அரச முக்கியத்துவமிக்க தொழில்முயற்சிகள் முகாமைத்துவ முகவராண்மையின் மாதிரியைப் பயன்படுத்தி அவ்வாறான பல சீர் திருத்தங்களை மேற்கொள்ள முயற்சித்தது.

- **தொடர்ச்சியான வளர்ச்சிக்கு உதவக்கூடிய உட்கட்டமைப்பு வசதிகளைப் போதியளவில் வழங்குவதிலுள்ள திறமையீனங்களை நீக்குவதையும், அவ்வாறான வசதிகள் பன்னாட்டு ரீதியில் ஒப்பிடத்தக்க விலைகளில் கிடைப்பதை உறுதிப்படுத்துவதையும் சீர்திருத்தங்கள் எடுத்தியம்ப வேண்டும்.** தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காகவும், வர்த்தகம் செய்யக்கூடிய பணிகள் பலவற்றை உருவாக்கி வறுமை ஒழிப்புக்கு துணைபுரிவதற்கு அத்தியாவசியமான பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதற்கான வழிமுறைகளை மேற் கொள்வதற்கான பல முக்கியமான சீர்திருத்தங்கள் அவசியமாகின்றன. தற்போது நலம் மற்றும் கல்வி வசதிகள் போன்றே வீதிகள், மின்வலு, தொலைத் தொடர்பூட்டல்கள், போக்குவரத்து மற்றும் நீர் வழங்கல் துறைகளில் கடுமையான வழங்கல் பற்றாக்குறைகளும் பிராந்திய வேறுபாடுகளும் காணப்படுகின்றன. ஆகக் குறைந்தது உற்பத்திச் செலவைக் கூட ஈடுசெய்யாத பணிகளின் விலையிடலானது, உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் முக்கிய நிறுவனங்களை அரசிடமிருந்தான வரவு செலவுத் திட்ட உதவியில் தங்கியிருக்கச் செய்கிறது. பல துறைகளில் சுதந்திரமான ஒழுங்கு முறைப்படுத்தல் பொறிமுறைகள் இல்லாதிருப் பதுடன் கிடைக்கக்கூடிய பொறி முறைகளும் பலயீனமானதாகவோ அல்லது செயற்திறனற்றதாகவோ காணப்படுகின்றன. தொழிலாளர் பிணக்குகள், போதுமானதற்ற முதலீடு மற்றும் பொருத்தமற்ற இலக்கிடல் என்பவற்றால் நலக்கவனிப்பு பிரச்சனைக்குள்ளாகியுள்ளது. சந்தைத் தேவைகளுடன் கூர்மையான பொருத்தமின்மைகளை வெளிப்படுத்தும் கல்வி விரைந்த பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான மனித மூலதனத்தை உருவாக்கவோ அல்லது தக்கவைத்துக் கொள்ளவோ முடியாதுள்ளது.

- **அதிகரித்த காரணி திரட்சிகளினூடாக அடையப்பட்ட வளர்ச்சிக்கு மேலதிகமாக, பல நாடுகளிலான தொடர்ச்சியான வளர்ச்சி ஆராய்ச்சியாலும் அபிவிருத்தியாலும் முனைப்பாக்கப்பட்ட தொழில்நுட்ப முன்னேற்றத்தாலும் ஏற்படுகிறது.** தொடர்ச்சியானதும், நீடித்து நிலைத்திருக்கக் கூடியதுமான வளர்ச்சியை அடைவதற்கு தொழில்நுட்ப முன்னேற்றங்களையும், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளையும், வசதிப்படுத்துவதற்கான தேவையை இலங்கை கொண்டிருக்கிறது.

- **சூழல் பாதுகாப்புக் கொள்கைகள் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கக் கூடாததுடன் நீடித்து நிலைத்திருக்கக் கூடிய வளர்ச்சிச் சூழலுக்கு தீங்கிழைக்காததாக இருத்தல் வேண்டும்.** சூழல் பாதுகாப்பும், நீடித்து நிலைத்திருக்கக் கூடிய பொருளாதார வளர்ச்சியும் நன்கு வடிவமைக்கப் பட்டதும் ஒருங்கிணைக்கப் பட்டதுமான கொள்கைக் கட்டமைப்பைப் பயன்படுத்தி ஊக்குவிக்கப்பட வேண்டும்.

- **மேற்கூறப்பட்ட பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதன் மூலம் மக்களுக்கு சந்தர்ப்பங்கள் வழங்கப் படாவிட்டால், தொடர்ந்து காணப்படும் வருமான சமமின்மை பொதுமக்கள் எழுச்சியை உருவாக்கக்கூடும்.** பிராந்திய சமமின்மை ஓர் இயற்கை நிகழ்வாகும். இங்கு பலதரப்பட்ட பரஸ்பர நன்மைபயக்கும் பொருளாதார நடவடிக்கைகளின் சாதகமான புறத்தாக்கங்களிலிருந்து பொருளாதாரச் செயற்பாடுகள் உயர்ந்த சமூக மற்றும் பொருளாதாரக் கட்டமைப்பைச் சுற்றி செறிவடைந்து காணப்படுகின்றன. உள்நாட்டு வர்த்தகம் மற்றும் முதலீட்டுத் தடைகள் எதுவும் இல்லாத நாட்டில், பொருளாதார நடவடிக்கைகளின் அளவை மட்டுப்படுத்தும் தடைகள் ஏதாவது இருத்தல் மற்றும் வளர்ச்சிக்கு அனுசரணையளிக்கும் பொதுவசதிகள் மற்றும் அரச முதலீட்டு வழங்கல்

குறைபாடுகள் காணப்படல் என்பன தொடர்பில் பூகோள ரீதியான சமமின்மை கரிசனையை வேண்டி நிற்கின்றது. எனவே சகலருக்கும் சந்தர்ப்பங்களை உருவாக்குவதற்கான பொருத்தமான பொது வசதிகள் மற்றும் அரச முதலீடுகள் என்பன வழங்கப்பட வேண்டும்.

- **பொருளாதாரத்தின் அனைத்து துறைகளுக்குமான, குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளுக்கான நிதிக் கிடைப்பனவை அதிகரிக்கச் செய்வது பொருளாதாரத்திற்கான அவற்றின் பங்களிப்பை மேலும் அதிகரிப்பதற்கும் பிரதேச வாரியான வருமான வேறுபாட்டைக் குறைப்ப தற்கும் இன்றியமையாததாகும்.** சிறிய மற்றும் நடுத்தர .தொழில் முயற்சிகளுக்கு வசதியளிப்ப தற்கான சிறப்பியல்பு வாய்ந்த வங்கியொன்றை நிறுவியதன் மூலம் இக் குறிக்கோளினை எய்து வதற்கான முக்கியமான கொள்கை முன்முயற்சி யொன்று எடுக்கப் பட்டுள்ளது.
- **வளர்ச்சிக்கான உள்ளார்ந்த வளத்தினை கொண்டுள்ள நாடுகள் முதலீடுகளை மேலும் கவருவதற்காக மனிதவள அபிவிருத்தி, போட்டித்தன்மை, பொருளாதார சுதந்திரம் மற்றும் ஒளிவுமறைவற்ற தன்மை என்பவற்றில் பன்னாட்டு ரீதியிலான ஒப்பீடுகளில் உயர் நிலையில் வரிசைப்படுத்தப்படுவதற்காக சிறப்பு முயற்சிகளை மேற்கொள்கின்றன.** உயர் நிலையில் இருப்பதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சியானது வளர்ச்சியினதும் அபிவிருத்தி யினதும் இலக்கை அடைவதற்கான முயற்சிகளில் நாடு கவனம் செலுத்துவதற்கான சுயமாக உருவாக்கப்பட்ட ஊக்குவிப்பாக இருக்கும். அண்மையில் உலக வங்கியினாலும் ஆசிய அபிவிருத்தி வங்கியினாலும் வெளியிடப்பட்ட ஒரு பிரசுரமானது அதன் சிறந்த ஆளுகை காரணமாக இலங்கை இப்பிராந்தியத்திலுள்ள நாடுகளிடையே முன்னிலையில் இருப்பதாகவும் குறைந்த மட்டத்திலான ஊழல் மற்றும் நிர்வாக ரீதியான தடைகளிலிருந்து நிறுவனங்கள் நன்மை யடைவதாகவும் குறிப்பிட்டுள்ளது.
- **இலங்கை உடனடியான சவால்களை எதிர்கொள்ளும் வேளையில் அதன் சாதனைகளை திரட்சிப்படுத்த வேண்டும்.** பன்னாட்டு ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆளுமையிலான சாதனைகள் மேலும் மேம்படுத்தப்படல் வேண்டும். வினைத்திறன்மிக்க அரச முதலீடுகளை கட்டுப்படுத்தி விரயமிக்க உதவுதொகைகளை கட்டம் கட்டமாக அகற்றுவதன் மூலம் அரச செலவினத்தின் வினைத்திறன்மிக்க பயன்பாடு மற்றும் பொருளாதாரத்தின் அனைத்துத்துறை களையும் சென்றடையும் விதத்தில் அரசதுறை விநியோக பொறிமுறையை மீள் ஒழுங்குபடுத்தல் என்பனவற்றை உறுதிப்படுத்தல் வேண்டும். துறை வாரியான உறுதிப்பாடற்ற தன்மையை களைந்து பொருளாதார உறுதிப்பாட்டினையும் நீண்டகால பொருளாதார வளர்ச்சியையும் ஊக்குவிப்பதில் இறை மற்றும் நாணயக் கொள்கைகளுக்கு நெகிழ்வுத் தன்மையினை வழங்கும் வகையில் இறை அர சிறையை, அதிகரித்து இறை மிகைகளுக்கு இட்டுச் செல்லுதல் வேண்டும்.
- **தகவலையும் தொழில்நுட்பத்தையும் பகிர்ந்து கொள்ளல், பொருளாதார ஒத்துழைப்பை விருத்தி செய்தல் அல்லது பன்னாட்டு நிதி உதவி என்பனவற்றிற்காக உலகளாவிய சமூகத்தில் உறுப்பினராக இருக்க வேண்டியதன் முக்கியத் துவத்தை சுனாமிப் பேரழிவு கோடிட்டுக் காட்டு கிறது.** இலங்கையின் பொருளாதாரப் பரப்பளவை விரிவாக்குவதானது, அதன் சந்தை விரிவாக் கலையும், இலங்கையர்களுக்கான அதிகரித்த பொருளாதார வாய்ப்புக்களையும் தொடர்ந்து வசதிப்படுத்தல் வேண்டும். உலக மயமாக்கலானது, பன்னாட்டு உறவுகளூடாக உற்பத்திக் காரணிகளின் செயற் திறனை மேம்படுத்தும் அதேவேளை இலங்கையின் ஏற்றுமதிச் சந்தையை விரிவாக்கு வதற்கு வழியமைக்கின்றது. விரிவடைந்தும், மாற்றமடைந்தும்வரும் மனிதனின் கேள்விகளுடன் ஒரு நாடு அதன் சகல தேவைப்பாடுகளிலும் தன்னிறைவடைவது சாத்தியமானதெனினும் உயர் செலவு மிக்கதாக காணப்படுகிறது. உலக மயமாக்கல் செயல்முறையுடனான திறன்மிக்க ஒருங்கிணைப்பானது ஒரு நாடு ஒப்பீட்டு ரீதியான அனுகூலத்தைக் கொண்டிருக்கும் பொருட்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்வதில் கவனத்தைச் செலுத்துவதற்கும் அவற்றை உலகின் ஏனைய நாடுகளுக்கு வர்த்தகம் செய்வதன் மூலம் மக்களின் நலன்புரியை மேம்படுத்துவதற்கும் இயலச் செய்கிறது. எனவே, உயர்ந்த பொருளாதார வளர்ச்சியானது சமத்துவமிக்கதாகவும், சூழலுக்கு இசைந்து செல்லக்கூடியதாகவும், நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலத்திற்கு நீடித்து நிலைத்திருக்கக் கூடிய வகையில் தற்போது நடைமுறையிலிருக்கும் உலக மயமாக்கத்துடன் ஒருங்கிணைதல் வேண்டும்.
- **இலங்கை நடுத்தரகாலப் பிரச்சனைகளில் முக்கிய கவனத்தினைச் செலுத்துகின்ற அதேவேளையில் தற்போதைய உயர்ந்த பன்னாட்டுச் எண்ணெய் விலைகள் மற்றும் சுனாமி அனர்த்தம் என்பன வற்றினால் ஏற்படுத்தப்பட்ட உடனடி சவால்களுடனும் கடுமையாகப் போராட வேண்டியிருக்கும்.** ஏனைய மாற்று வலு மூலங்கள் இல்லாத நிலையில், வெப்ப வலு உருவாக்கம் அதிகரித்து வருவதன் காரணமாக எண்ணெய் இறக்குமதிகளின் மீது நாடு தங்கியிருப்பது

ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. உயர்ந்த எண்ணெய் விலைகள் சென்மதி நிலுவை, செலாவணி வீத மற்றும் பணவீக்கம் என்பவற்றின் மீது குறிப் பிடத்தக்க அழுத்தங்களை ஏற்படுத்திய வேளையில் செலாவணி வீதமும் பணவீக்கமும் இலங்கை மின்சபையினதும், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின்தும் நிதியியல் நிலைமையினை மேலும் பலயீனமடையச் செய்தது. நுகர்வு மீதான சிக்கனத்தினை உறுதிப்படுத்தும் விதத்தில் பொருத்தமான விலைச்சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டாலொழிய உதவுதொகைக் கொடுப்பனவில் ஏற்படுகின்ற தவிர்க்க முடியாத அதிகரிப்புக்கள் இறைச் சுமையினை மேலும் அதிகரிக்கும். ஆகவே உயர்ந்த எண்ணெய் விலைகளின் காரணமாக எழும் அழுத்தத்தினைக் தாங்கும் நாட்டின் இயலாற்றலானது பேரண்டப் பொருளாதாரக் கட்டமைப்பிற்குள் பொருத்தமான கொள்கைகளை பின்பற்றுதல், மாற்றுவலு மூலங்களை அபிவிருத்தி செய்தல், எரிபொருளின் சிக்கனமற்ற பயன்பாட்டினைக் குறைத்தல், வலுவுடன் தொடர்பான அரச நிறுவனங்களை மீளமைத்தல், உயர்ந்த எண்ணெய் விலைகளுடன் தொடர்பான விரயம் மிக்க உதவுதொகைகளைக் கட்டம் கட்டமாக அகற்றுதல் என்பனவற்றின் மூலம் உயர்த்தப்படல் வேண்டும். இது தொடர்பாக, இலங்கை மின்சபையும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் முன்னுரிமை அடிப்படையில் மீளமைப்புச் செய்யப்படுவது அவசியமான தாகும். இலங்கை மின்சபை நாட்டின் எதிர்கால மின்வலுக் கேள்வியினை பூர்த்தி செய்யத்தக்க இயலாற்றலைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இல்லையெனில், நடுத்தர காலத்திலிருந்து நீண்டகாலம் வரையான காலப்பகுதியில் எதிர்பார்க்கப்படும் உயர்ந்த வளர்ச்சி எதிர்பார்ப்புக்கள் அடிக்கடி நிகழும் மின்வெட்டுக்களினாலும், மின்குறைப்புக் களினாலும் அடிக்கடி தடைப்படக்கூடும். இதேபோன்று இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதன் சொத்து அமைப்பினை முன்மதியுடனும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட முகாமைத்துவத்தின் மூலமும் வங்கித் தொழில் முறைக்கான அதன் மிக உயர்ந்த கடப்பாடுகளை குறைத்துக் கொள்ள வேண்டும். நலவுரித்துகொண்ட அனைத்து தரப்பினரும் மீளமைத்தல் செயற்பாடுகளுக்கான தேவையினை உணர்ந்து கொள்ள வேண்டியதுடன் பிரச்சனைகளை மிகுந்த யதார்த்தத்துடன் அணுகுதலும் வேண்டும்.

- **சுனாமி பேரழிவு புதிய அறைகூவல்களை தோற்றுவித்துள்ள வேளையில் மீளக்கட்டுமான நடவடிக்கைகள் புதிய வாய்ப்புக்களை வழங்கு கின்றன.** எனினும் நிவாரணம் புத்தாக்கம் மற்றும் மீள்கட்டுமான நடவடிக்கைகள் தேசிய வரவு செலவுத் திட்டத்தின் படுகடன் நிதியிடலைக் குறைப்பதனை நோக்கிய தற்போதைய இறை சீர்திருத்தங்களை பாதிக்கக் கூடிய விதத்தில் ஒரு இறைச்சுமையாக மாறாதிருப்பதாக உறுதிப்படுத்திக் கொள்வது மிக முக்கிய மானதாகும். இதேபோன்று, மேலதிக நடைமுறைச் செலவினம், மிகத் தேவையான முதலீட்டுச் செலவினத்தினைக் குறைப்பதற்கு வழிவகுக்கக்கூடாது. பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டிற்கும் நாட்டின் ஏனைய பகுதிகளில் இடம்பெற்று வருகின்ற அபிவிருத்தி முன்னேற்றங்களுக்கும் குந்தகம் ஏற்படுத்தாத விதத்தில் மீள்கட்டுமானம் மற்றும் புத்தாக்கத் திற்கான வெளிநாட்டு உதவிகளை பயனுறு முறையில் பயன்படுத்துவதற்கு ஈர்த்துக் கொள்ளும் இயலளவில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் தேவைப்படுகிறது. வெளிநாட்டு உதவிகளின் பாரிய உட்பாய்ச்சல்களின் விளைவாக தோன்றுகின்ற உள்நாட்டு பொருளாதாரத் தளம்பல்களை பொருத்தமான விதத்தில் கட்டுப்படுத்துவதனை உறுதிப்படுத்துவதும் அதேவேளையில் வெளிநாட்டு உதவியின் பயன்பாட்டு வீதத்தினை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுப்பதும் மிக முக்கியமான தாகும்.

- **இறுதியாக, இதன் சாதனைகளை மேலும் திரட்சிப் படுத்தவும், பொருளாதாரத்தினை உயர்ந்த வளர்ச்சிப் பாதையில் பயணிக்கச் செய்யவும் அர சாங்கம் மிகுந்த வினைத்திறனும் சமத்துவமும் மிக்க முறையில் பொது வசதிகள் மற்றும் பணிகளின் வழங்கலை அதிகரிக்கச் செய்கின்ற அதேவேளையில் தனியார் துறைக்கு அதன் உற்பத்தியாக்க சக்தியை வெளிப்படுத்தத்தக்க வசதியை ஏற்படுத்தி தூண்டுதலளிக்கக் கூடிய சூழலை வழங்குதல் வேண்டும்.** இச் செயல்முறைகள் ஏற்கனவே தொடங்கியிருப்பதன் காரணமாக, தனியார் துறை யானது அதிகரித்த உற்பத்தியாக்கம், ஆராய்ச்சி களிலும் அபிவிருத்தியிலும் தொடர்ச்சியாக ஈடுபடுதல், உலகளாவிய அறைகூவல்களுக்கு முகம் கொடுத்தல் என்பனவற்றினூடாக உற்பத்தியாக்க துறையினை விரிவடையச் செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் தனியார் துறையானது வளர்ச்சி செயலாக்கத்திற்கு ஆதர வளிக்கும் விதத்தில் அது சுயமான முயற்சிகளை மேற்கொள்வது அவசியமாகவுள்ள வேளையில் இவற்றிலிருந்து நன்மைகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும். இத்தகைய இயக்கவாற்றல் மிக்க தனியார் துறையானது பொருளாதாரத்தினை முன்னோக்கிச் செலுத்துகின்ற அதேவேளையில் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி, வறுமையைக் குறைத்து அனைத்து இலங்கையர்களுக்கும் வாய்ப்புக்களை வழங்குகின்றது.

**சிறப்புக் குறிப்பு - 5**

## முக்கிய பொருளாதார கொள்கை மாற்றங்களும் வழிமுறைகளும் 2004–2005[அ]

### உண்மைத்துறை

| | | |
|---|---|---|
| 01 மார். 2004 | - | கொழும்பிற்கும் புறநகர் பகுதிகளுக்கும் பொருந்தத்தக்க புகைவண்டிக் கட்டணம் 50 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் நீண்டதூரக் கட்டணங்கள் 40 சதவீதத்தினால் அதிகரித்தது. |
| மே. 2004 | - | வேளாண்மை உற்பத்திகளைக் கொள்வனவு செய்வதற்கு வாங்குனர்களைத் தூண்டும் விதத்தில் முன்நோக்கிய விற்பனை உடன்படிக்கையின் கீழான கடன் எல்லை ரூ.5 மில்லியனிலிருந்து ரூ.25 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | வரட்சியினால் பாதிக்கப்பட்ட வேளாண்மையாளர்களுக்கு மத்திய வங்கி நிவாரணப் பொறியொன்றினை அறிமுகப்படுத்தியது. |
| | - | சிறிய நடுத்தர தொழில்முயற்சிகள் துறைக்குப் பொதுவாகவும், நடுத்தர நெல் குற்றும் ஆலையாளர்களுக்கு குறிப்பாகவும் உதவுவதற்காக அரசாங்கம் நிவாரணப் பொதியொன்றினை அறிவித்தது. |
| 16 யூன் 2004 | - | நிருவாக சீர்திருத்தக் குழு நிறுவப்பட்டது. |
| யூன் 2004 | - | இலங்கையில் 12 உபாய தொழில்முயற்சிகளின் மிகத் திறன்மிக்க முகாமைத்துவத்திற்கு வசதியளிக்கவும் அதனை உறுதிப்படுத்துவதற்குமாக உபாய தொழில்முயற்சிகள் முகாமைத்துவ முகவராண்மையொன்று ஏற்படுத்தப்பட்டது. |
| | - | அரசாங்கத்தின் கொள்கைகளையும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களையும் பயனுறுமுறையில் நடைமுறைக்கிடுவதில் அரசாங்கத்திற்கு வசதிகளையும் உதவிகளையும் வழங்குவதற்காக பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய சபையொன்று ஏற்படுத்தப்பட்டது. |
| 01 யூலை 2004 | - | இலங்கை அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைக் கட்டமைப்பு வெளியிடப்பட்டது. |
| 24 யூலை 2004 | - | பெற்றோலின் சில்லறை விலை இலீற்றர்களுக்கு ரூ.8.00 இனால் ரூ.65.00 இற்கு உயர்த்தப்பட்டது. |
| 29 யூலை 2004 | - | பட்டதாரிகள் தொழில்வாய்ப்பு நிகழ்ச்சித் திடடத்தின் கீழ், 17,019 பட்டதாரிகளைக் கொண்ட முதலாவது தொகுதியினருக்காக அரசாங்கம் சிறப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றினை மேற்கொண்டது. |
| 04 ஓக. 2004 | - | நிருவாகத்திற்கான தேசிய சபை நிறுவப்பட்டது |
| 13 ஓக. 2004 | - | தன்னியக்க டீசலினதும் பெற்றோலினதும் சில்லறை விலைகள் லீற்றர் ஒன்றிற்கு ரூ.4.00, ரூ.3.00 இனால் முறையே லீற்றர் ஒன்றிற்கு ரூ.36.00 இற்கும், ரூ.68.00 இற்கும் அதிகரித்தல். |
| 19 ஓக. 2004 | - | 1000 சிறு நீர்ப்பாசனக் குளங்களை புத்தாக்கம் செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டம் தொடங்கப்பட்டது. |
| 01 செத். 2004 | - | பேருந்துக்கட்டணங்கள் சராசரி வீதமான 9 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டன. |
| | - | பட்டதாரிகள் தொழில்வாய்ப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட 24,601 பட்டதாரிகளுக்காக அரசாங்கம் சிறப்பு தொழில்வாய்ப்பு நிகழ்ச்சித் திட்டத்தினை மேற்கொண்டது. |
| 24 செத். 2004 | - | தன்னியக்க டீசலின் கொழும்பு உடன் விற்கும் விலைகள் ரூ.6.00 இனால் இலீற்றர் ஒன்று ரூ.42.00 இற்கு உயர்த்தப்பட்டது. கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் உள்ள சில்லறை நிலையங்களில் விற்கப்படும் பெற்றோல் மற்றும் டீசலின் விலைகளின்மீது இலீற்றருக்கு ரூ. 2 கொண்ட கட்டணமொன்று விதிக்கப்பட்டது. இக் கட்டணத்துடன் கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் உள்ள பெற்றோல் மற்றும் டீசலின் விலைகள் இலீற்றருக்கு ரூ.70.00 இற்கும் ரூ.44.00 இற்கும் அதிகரித்தது. |
| 01 ஒத்.2004 | - | தொழிற்பாட்டுச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பினை ஈடுசெய்யும் விதத்தில் பயணிகள் பேருந்துக் கட்டணங்கள் 6 சதவீதத்தினால் மேலும் அதிகரிக்கப்பட்டது. |
| 22 ஒத். 2004 | - | அஞ்சல் கட்டணங்கள் 12 சதவீதம் கொண்ட சராசரி வீதத்தினால் அதிகரிக்கப்பட்டன. |
| 13 திசெ. 2004 | - | 968 பட்டதாரிகள், பட்டதாரிகள் தொழில் வாய்ப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்குள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். |
| 03 சன. 2005 | - | சிறப்பு அடிப்படை நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்ற 40,194 பட்டதாரிகளுக்கு பயிற்சியாளர்களாக நியமனம் வழங்கப்பட்டது. (முறைசார் பயிற்சி) |
| 04 சன. 2005 | - | இலங்கை புகைவண்டி திணைக்களத்தினை மீள நிறுவுவதற்காக இலங்கை புகைவண்டி அதிகாரசபை (தள்ளுபடி) மசோதாவிற்கு நாடாளுமன்றம் ஒப்புதலளித்தது. |
| 15 மார். 2005 | - | வேலையாட்களின் தொழிலினை முடிவுறுத்துகின்ற (சிறப்பு ஏற்பாடுகள்) திருத்தச் சட்டத்தின் கீழ் தொழில் ஆணையாளரினால் புதிய இழப்பீட்டுச் சூத்திரமொன்று அரச வர்த்தமானியில் 2005 மார்ச்சில் பிரசுரிக்கப்பட்டது. |

அ. 2004 ஆம் ஆண்டிலும் 2005 இன் முதல் நான்கு மாத காலப்பகுதியிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய பொருளாதார கொள்கை மாற்றங்களையும் வழிமுறைகளையும் உள்ளடக்குகிறது. அறிவிக்கப்பட்டு 2005 இல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள கொள்கை மாற்றங்களும் வழிமுறைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**சிறப்புக்குறிப்பு 5 (தொடர்ச்சி)**

30 மார்.2005 - சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளுக்காக அரசாங்கத்தினால் புதிய வங்கியொன்று நிறுவப்பட்டது.

01 ஏப். 2005 - அரச ஊழியர்களுக்கு அரசாங்கம் வீடமைப்புக் கடன் திட்டமொன்றினைத் தொடங்கியது.

## வெளிநாட்டுத்துறை

**வர்த்தகம் மற்றும் தீர்வை**

01 சன.2004 - தீர்வைப்பிரிவுகள் முறையே 2.5 சதவீதம் 3 சதவீதமாகவும், 5 சதவீதம் 6 சதவீதமாகவும், 10 சதவீதம் 12 சதவீதமாகவும், 15 சதவீதம் 16 சதவீதமாகவும், மற்றும் 25 சதவீதம் 27.5 சதவீதமாகவும் மாற்றப் பட்ட வேளையில் 20 சதவீதத் தீர்வைப்பிரிவு மாற்றமின்றியிருந்தது.

இறக்குமதித் தீர்வைகள் மீதான 20 சதவீத மேலதிகக் கட்டணம் 10 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.

- பின்வரும் தீர்வைத் திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

| விடயம் | திருத்தத்திற்குமுன் | திருத்தத்திற்குபின் |
|---|---|---|
| கோதுமைத் தானியம் | 0% | 3% |
| தேர்தெடுக்கப்பட்ட மின்பொருட்கள் | 5%, 10%, 20% மற்றும் 25% | 3% |
| புகைப்படக்கருவிகள்/ மணிக்கூடுகள் | 10% | 3% |
| ஆபரணங்கள் | 25% | 3% |
| பொறிகள் பொறித்தொகுதிகள் | 5% | 3% |
| பருப்பு | 5% | 3% |
| கருவாடு | 10% | 6% |
| சமையல் எண்ணெய் | 15% | 20% |
| தேர்ந்தெடுக்கப்பட்ட மின்பொருட்கள் | 20% மற்றும் 25% | 16% |
| இணைந்த அறுவடைப் பொறிகள் | 10% | 3% |
| சரக்கு வண்டிகள், பார வண்டிகள் | 2.5% | 6% |
| சீனி | ரூ.3.75 கி/கி | ரூ.4.50 கி/கி |

- மசகெண்ணெய், அச்சிடப்பட்ட நூல்கள், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள், இரத்தினக்கல், புடவை, நெல், காய்கறி விதை மற்றும் மருந்தாக்கல் என்பன மீது சுங்கத் தீர்வை விலக்கல்கள் வழங்கப்பட்டன.
- கோதுமைத் தானியத்தின்மீது 3 சதவீதங் கொண்ட முழுத் தீர்வைத் தளர்த்தல் வழங்கப்பட்டது.

01 பெப்.2004 - வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்காக பின்வரும் விடயங்களுக்குத் தீர்வைத் தளர்த்தல்கள் வழங்கப்பட்டன.

| விடயங்கள் | பொதுவான தீர்வை | தளர்த்தப்பட்ட தீர்வை |
|---|---|---|
| மைசூர்பருப்பு | 3 % | 3% (முழுமையாக) |
| உடைத்த மஞ்சள் பருப்பு | 3 % | 3% (முழுமையாக) |
| உருளைக்கிழங்கு | ரூ.20 கி/கி | ரூ.1.50 கி/கி |
| பெரிய வெங்காயம் | ரூ.8 கி/கி | ரூ.5 கி/கி |
| மிளகாய் | ரூ.30 கி/கி | ரூ.10 கி/கி |
| பால்மா | 12% | 6% |

19 மார்.2004 - சீனி மீது கி.கி ரூ. 4.50 கொண்ட முழுமையான தீர்வைத் தளர்த்தல் வழங்கப்பட்டது.

16 செத்.2004 - பெரிய வெங்காயத்தின் மீது கி.கிராமொன்றிற்கான ரூ.8 கொண்ட சிறப்புத்தீர்வை மீண்டும் கொண்டு வரப்பட்டது.

20 செத்.2004 - ஈதல் மதுசாரத்தின் இறக்குமதிக்கு பிரயோகிக்கத்தக்க இறக்குமதித் தீர்வை இலீற்றர் ஒன்றிற்கு ரூ.60 இலிருந்து ரூ.100இற்கு அதிகரிக்கப்பட்டது.

- பெரிய வெங்காயம் மீதான இறக்குமதித் தீர்வை கி.கிராமிற்கு ரூ.8 இலிருந்து கி.கி மிற்கு ரூ.10 இற்கு அதிகரிக்கப்பட்டது.

01 ஒத்.2004 - மண்ணிற சீனியின் இறக்குமதி மீது கி.கி. ஒன்றிற்கு ரூ.4.50 தீர்வை விதிக்கப்பட்டவேளையில் வெள்ளைச்சீனி தொடர்ந்தும் மறுஅறிவித்தல்வரை தீர்வையின்றி இருந்தது.

05 ஒத். 2004 - அனைத்து இறக்குமதியாளர்களுக்கும் அரிசி இறக்குமதி மீதான கி.கி. ஒன்றிற்கு ரூ.9.00 கொண்ட சிறப்புத் தீர்வை 2004 திசெம்பர் 31 வரை நீக்கப்பட்டது.

29 ஒத்.2004 - இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளின் இறக்குமதி மீது கொ.கா.க. பெறுமதி மீது 5 சதவீத தீர்வை விதிக்கப்பட்டது.

- மூலப்பொருள் இறப்பரின் ஏற்றுமதிகள் மீது கி.கிறாமொன்றிற்கு ரூ.4 கொண்ட தீர்வை விதிக்கப்பட்டது.

04 நவெ.2004 - 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் பதனிடப்பட்ட உணவு உடன் மற்றும் உலர்த்தப்பட்ட பழ வகை, பழக்கழி மற்றும் அழகுசாதன தயாரிப்புக்கள் போன்ற தெரிந்தெடுக்கப்பட்ட இறக்குமதி விடயங்களின் மீது தீர்வையொன்று விதிக்கப்பட்டது.

**சிறப்புக்குறிப்பு 5 (தொடர்ச்சி)**

19 நவெ.2004 - தீர்வைப் பிரிவுகள் பின்வருமாறு திருத்தப்பட்டன.

| 2005 வரவுசெலவுத் திட்டத்திற்கு முன் தீர்வை பிரிவுகள் | 2005 வரவுசெலவுத்திட்டத்திற்கு பின் தீர்வைப் பிரிவுகள் |
|---|---|
| 3 சதவீதம் | 2.5 சதவீதம் |
| 6 சதவீதம் | 6 சதவீதம் |
| 12 சதவீதம் மற்றும் 16 சதவீதம் | 15 சதவீதம் |
| 20 சதவீதம் மற்றும் 27.5 சதவீதம் | 28 சதவீதம் |

01 சன.2005 - தெரிந்தெடுக்கப்பட்ட விடயங்கள் நீங்கலாக அனைத்து இறக்குமதிப் பொருட்கள் மீதான சுங்கத்தீர்வை மீதான 10 சதவீத மேலதிகக் கட்டணம் 2005 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டது.

03 சன.2005 - 2004 திசெம்பர் 31 ஆம் நாள் வரை அரிசி இறக்குமதி மீது விதிக்கப்பட்ட கி.கிறாம் ஒன்றிற்கான ரூ.9 கொண்ட தீர்வைத் தளர்த்தல்கள் 2005 சனவரி 15 ஆம் நாள் வரை மேலும் நீடிக்கப்பட்டது.

01 மார்.2005 - 2004 நவெம்பர் 4 ஆம் நாள் விதிக்கப்பட்ட தீர்வைக்குப் புறம்பாக, 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதிகள் அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் சோளம் மற்றும் பழங்கள் போன்ற தெரிந்தெடுக்கப்பட்ட இறக்குமதி விடயங்களின் மீது தீர்வையொன்று விதிக்கப்பட்டது.

**செலாவணி முகாமைத்துவம்**

06 சன.2004 - மடகாஸ்கரிலிருந்து பட்டை தீட்டப்படாத இரத்தினக்கற்களை கொள்வனவு செய்வதற்கும் இறக்குமதி செய்வதற்குமாக இரத்தினக்கல் வர்த்தகர்களுக்கு ஐ.அ.டொலர் 15,000 கொண்ட வெளிநாட்டுச் செலாவணியை (இதில் ஐ.அ.டொலர் 5,000 இனை நாணயமாக வழங்க முடியும்) வழங்குவதற்கு வர்த்தக வங்கிகள் அனுமதிக்கப்பட்டமை 2004 ஓகத்து 24 ஆம் நாளன்று இவ்வசதி மியன்மாரிலிருந்து வெளிநாட்டுக் கற்களை கொள்வனவு செய்வதற்கும் இறக்குமதி செய்வதற்கும் விரிவாக்கப்பட்டது.

யூலை 2004 - பிரமிட் திட்டங்கள் மற்றும் ஏனைய அங்கீகாரமளிக்கப்படாத நோக்கங்களுக்கான கொடுகடன் அட்டையின் மீதான வெளிநாட்டு நாணய கொடுப்பனவுகள் தடைசெய்யப்பட்டன.

03 நவெ.2004 - தேசிய சேமிப்பு வங்கிக்கு அதன் வாடிக்கையாளரின் நன்மை கருதி வதியாதோர் வெளிநாட்டு நாணய மற்றும் வதியும் வெளிநாட்டு நாணயக் கணக்குகளையும் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

## இறைத்துறை

**அரச அரசிறை**

01 சன.2004 - பெறுமதி கூட்டப்பட்ட வரியானது 10 சதவீதத்திலிருந்தும், 20 சதவீதத்திலிருந்தும் 15 சதவீதமாக ஒருமுகப்படுத்தப்பட்டது.

- பெறுமதி சேர் வரியின் காலாண்டுக் கொடுப்பனவிற்கான ரூ.500,000 கொண்ட மொத்தப் புரள்வு அடி மட்டம் காலாண்டிற்கு ரூ.750,000இற்கும் ஆண்டிற்கான அடிமட்ட தொகை ரூ. 1.8 மில்லியனிலிருந்து ரூ.3 மில்லியனிற்கும் உயர்த்தப்பட்டது. (எனினும் இது 2004 சனவரி 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் 2004 யூலை 1ஆம் நாளிலிருந்து ஆரம்ப நிலைக்கு பின்நோக்கி கொண்டு செல்லப்பட்டது.)
- நீள அடிப்படையில் சிகரெட்டுக்கள் மீதான கலால்வரி உயர்த்தப்பட்டது.
- சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர்மீதான கலால் வரிகள் ஒரு லீற்றருக்கு ரூ. 5.50ஆல் அதிகரிக்கப்பட்டது.
- பெற்றோல் மற்றும் டீசல் மீதான கலால் வரிகள் முறையே ஒரு லீற்றருக்கு ரூ.20 ஆகவும் மற்றும் ரூ.2.50 ஆகவும் குறைக்கப்பட்டன.
- கித்துள் மரத்தில் கள்ளு இறக்குவதற்கான அனுமதிப் பத்திரக் கட்டணம் மரம் ஒன்றிற்கு ரூ.50 இற்குக் குறைக்கப்பட்டது.
- 5 சதவீதத்திற்கும் குறைவான முழுச்செறிவைக் கொண்ட மோல்ட் குடிவகை மீதும் 5 சதவீதத்திற்கும் கூடுதலான முழுச் செறிவைக் கொண்டதுமான மோல்ட் குடிவகை மீதுமான கலால்தீர்வை லீற்றருக்கு ரூ.22.50 இற்கும் ரூ.38.50 இற்கும் உயர்த்தப்பட்டது.
- தேறல், பனை, தென்னை, பதனிடப்பட்ட சாராயம் மீதான கலால்வரி ஒரு புறூவ் லீற்றருக்கு ரூ.351 ஆக அதிகரிக்கப்பட்டது. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுசாரம் மீதான கலால்வரி ஒரு புறூவ் லீற்றருக்கு ரூ.470 ஆக அதிகரிக்கப்பட்டது.
- செல்லிடத் தொலைபேசிப் பாவனையாளர்களினால் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய சகல கட்டணங்கள் தொடர்பாகவும் 2.5 சதவீதவரி விதிக்கப்பட்டுள்ளது.

**சிறப்புக்குறிப்பு 5 (தொடர்ச்சி)**

- எந்தவொரு தனிப்பட்ட வங்கியில் அல்லது நிதி நிறுவனத்தில் உள்ள வைப்புக்கள் யாவற்றிலிருந்தும் கிடைக்கும் மொத்தவட்டி வருமானத்திற்கும் மாதமொன்றுக்கு ரூ.9000 மும் வருடமொன்றுக்கு ரூ.108,000 உம் எனவுள்ள பிடித்துவைத்தல் வரி விலக்கெல்லை ஏற்புடையதாகும்.
- வட்டி வருமானம் மட்டும் தனியான அல்லது முக்கிய வருமான வழியாக கொண்டுள்ளவர்களுக்கான பிடித்து வைத்தல் வரி விலக்களிப்பு எல்லை மாதத்துக்கு ரூ.25,000 அல்லது ஆண்டிற்கு ரூ.300,000 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

01 ஏப்.2004 - ரூ.20 மில்லியனுக்கு மேலதிகமான மொத்த இலாபத்தைக் கொண்ட அல்லது ரூ.10 மில்லியனுக்கு மேற்பட்ட பெறுமதியான சொத்துக்களைக் கொண்ட வர்த்தகத்தை, வியாபாரத்தை, தொழில் அல்லது தொழிற் பயிற்சியை நடாத்தும் நிறுவனங்கள் மீது மொத்த இலாபத்தில் அல்லது மொத்தச் சொத்துப் பெறுமதியில் 1 சதவீதம் பொருளாதார பணிக்கட்டணமாக விதிக்கப்பட்டது. (அதன் பின்னர் பொருளாதாரப் பணிக் கட்டணவீதம் 0.25 சதவீதத்திற்கும் 0.50 சதவீதத்திற்கும் 1 சதவீதத்திற்கும் மாற்றப்பட்டதுடன் அடிமட்ட மொத்தப் புரழ்வு ரூ.50 மில்லியனுக்கும் அதிகரிக்கப்பட்டது). (சொத்து வரையறை அகற்றப்பட்டது) நடைமுறைக்கு வரும்நாள் 2004 ஏப்பிறல் 01ஆக மாற்றமின்றியிருந்தது.)

- தனியாள் வருமானவரி வீதங்கள் கீழ்க்காணும் வகையில் மீளமைக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| (1) | முதல் ரூ.300,000 | ஒன்றுமில்லை |
| (2) | அடுத்த ரூ.240,000 | 10% |
| (3) | அடுத்த ரூ.240,000 | 20% |
| (4) | மீதி | 30% |

- தொழில் முடிவுறுத்தல் கால நன்மைகள் கீழ்க் காணும் வகையில் மீளமைக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| (1) | முதல் ரூ. 3.5 மில்லியன் | ஒன்றுமில்லை |
| (2) | அடுத்த ரூ. 500,000 | 5% |
| (3) | அடுத்த ரூ. 500,000 | 10% |
| (4) | மீதி | 15% |

- அனைத்துப் பங்காண்மையினதும் பகிரப்படக்கூடிய இலாபம் மற்றும் ஏனைய வருமானங்கள் மீது 10 சதவீத முன்விதிப்பனவு வரி விதிக்கப்பட்டது.
- எந்த ஒரு ஆளுக்கும் அல்லது நிறுவனத்திற்கும் ஆண்டுத் தொகையாக அல்லது வேத்துரிமையாக எந்தவொரு மாதத்திலும் ரூ.50,000 இற்கு மிகையாக அல்லது எந்தவொருஆண்டிலும் ரூ.500,000 மிகையாகச் செலுத்தப்படுமிடத்து 10 சதவீதபிடித்து வைத்தல் வரியும் எந்தவொரு முகாமைக் கட்டணம் அல்லது அதையொத்த கொடுப்பனவுகளின்மீது 5 சதவீத பிடித்து வைத்தல் வரியும் விதிக்கப்படும்.
- முன்னர் விலக்களிக்கப்பட்டிருக்கும் இலங்கையில் தொழிற்படும் ஏதேனும் வங்கியினது வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளின் கடல்கடந்த கொடுக்கல் வாங்கல்கள் 20 சதவீத வரி விதிப்புக்கு உட்படுத்தப்படும்.
- ஏதேனும் கம்பனியால் வழங்கப்பட்ட பங்குகளின் விற்பனையிலிருந்து (முதலீட்டுச் சபையின் பங்கு உரிமைகள், இலாபப்பங்குகள் மற்றும் கட்டுறுத்துக்கள் மற்றும் பங்குகள் உட்பட) உழைக்கப்பெற்ற இலாபங்கள் 15 சதவீத வரி விதிப்பிற்குட்பட்டன.
- பன்னாட்டு மற்றும் பல்புடை தாபனங்கள் தவிர்ந்தஉள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 8 (அ) பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் ஏனைய வருமானம் (நன்கொடைகள்/ உதவி நிதிகள் தவிர்ந்த) ரூ.200 மில்லியனை விஞ்சுமிடத்து 10 சதவீதவரி விதிப்புக்கு உட்படுத்தப்படும்.

மே 2004 - உள்நாட்டரசிறைத் திணைக்களத்தினை மீளமைக்கின்ற நிகழ்ச்சித்திட்டம் தொடங்கப்பட்டது.

01 யூலை 2004 - வளமாக்கி மற்றும் வேளாண்மைப் பொறிகளின் வழங்கலும் இறக்குமதியும் பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்குப் பெற்றன.

- அலுவலர்களுக்கான சம்பளங்கள் மற்றும் முன்னாள் அலுவலர்களுக்கான ஓய்வூதியம் போன்றவற்றின் வடிவில் அரசினால் நிதியிடப்படும் பள்ளிக்கூடங்கள் பெறுமதிசேர் வரியிலிருந்தும் விலக்களிக்கப்பட்டன.

யூலை 2004 - பொதுத்திறைசேரி செயலாளர் மற்றும் உள்நாட்டரசிறை, சுங்கம் மற்றும் கலால் ஆகிய திணைக்களங்களின் தலைவர்களை உள்ளடக்கிய அரசிறைச் சபையொன்று அரசினால் நியமிக்கப்பட்டது.

07 செத்.2004 - வரிகள் மற்றும் கட்டணங்கள் தொடர்பாக 2004 வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட வழிமுறைகளுக்கு சட்ட அதிகாரம் வழங்குவதற்காக நாடாளுமன்றத்தினால் நிதி மசோதாவொன்றிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

**சிறப்புக்குறிப்பு 5 (தொடர்ச்சி)**

08 செத்.2004 - பின்வரும் மசோதாக்கள் நாடாளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டன.
- பெறுமதி கூட்டப்பட்ட வரி (திருத்த) மசோதா
- உள்நாட்டரசிறை (திருத்த) மசோதா
- புகையிலைவரி (திருத்த) மசோதா

22 செத்.2004 - 2002 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க உள்நாட்டரசிறை (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தினையும் 2003ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தினை நீக்குவதற்காக உள்நாட்டரசிறை (மன்னிப்பு ஒழுங்குகள்) மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

01 ஒத்.2004 - சீனி மற்றும் பருப்பு வகை மீதான பெறுமதிசேர் வரிகளின் சேகரிப்பு இடைநிறுத்தப்பட்டது.

05 ஒத்.2004 - இலங்கையரல்லாத அனைவரும் கொள்வனவு செய்கின்ற சொத்துக்கள் மாற்றல் செய்யப்படுகையில் அவை வரி விதிப்புக்கு உட்பட்டவையாகும். அத்தகைய தொகை சொத்துக் கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதிக்குச் சமமானவையாகும்.

15 ஒத்.2004 - சிகரட்டுக்களின் நீளத்தின் அடிப்படையில் சிகரெட்டுக்களின் மீதான உற்பத்தி வரி உயர்த்தப்பட்டது.
- மண்ணெண்ணெய் மீதான தீர்வை லீற்றர் ஒன்றிற்கு ரூ.1.50 இலிருந்து ரூ.1.25 இற்கு குறைக்கப்பட்டது மூன்றாண்டுகளை பிந்தாத பழைய டீசல் எந்திரங்களுக்கான தீர்வை 48 சதவீதத்திலிருந்து 98 சதவீதத்திற்கு அரிகரிக்கப்பட்டது.
- தெரிந்தெடுக்கப்பட்ட ஊர்திகள் மீதான தீர்வை ஊர்திகளின் எரிபொருள் வகை மற்றும் எஞ்சின் இயலளவு என்பனவற்றின் அடிப்படையில் உயர்த்தப்பட்டது.

19 நவெ.2004 - குடிவகை மீதான கலால் தீர்வை மேல்நோக்கி திருத்தப்பட்டது
- சீனி சேர்க்கப்பட்ட அல்லது இனிப்புப் பொருட்கள் சேர்க்கப்பட்ட அல்லது சுவையூட்டப்பட்டவற்றைக் கொண்ட கனிமநீர் மற்றும் காற்றூட்டப்பட்டவை உள்ளிட்ட தண்ணீர் மற்றும் மதுசாரமற்ற குடிபானங்கள் மீதான தீர்வை லீற்றருக்கு ரூ.5.50 இலிருந்து லீற்றருக்கு ரூ.600 இற்கு உயர்த்தப்பட்டது.
- சீனி, பருப்பு, உருளைக்கிழங்கு, வெங்காயம், கருவாடு, பால்மா மற்றும் மிளகாய் போன்ற தெரிந்தெடுக்கப்பட்ட பண்டங்களின் மீது 5 சதவீதம் கொண்ட புதிய பெறுமதிசேர் வரி விதிக்கப்பட்டது.
- இறக்குமதிகள் மீது பெறுமதிசேர் வரியின் விதிப்பிற்காக க.ஏ. பெறுமதியின் 5 சதவீதம் கொண்ட தொகை அதனுடன் கூட்டப்பட்டது.

22 நவெ.2004 - துறைமுகம் மற்றும் வானூர்தி நிலைய அபிவிருத்தி தீர்வை 1 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

நவெ.2004 - பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய சபையின் கீழ் வரிவிதிப்பின் மீது கொத்தணி ஒன்று நிறுவப்பட்டது.

திசெ.2004 - உள்நாட்டரசிறை திணைக்கள ஊழியர்களிடையே ஒழுக்ககோவை ஒன்று சுற்றோட்டத்திற்கு விடப்பட்டது.

28 திசெ.2004 - சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவதற்காக இறக்குமதித் தீர்வை, பெறுமதிசேர் வரி, துறைமுக, வானூர்திகள் தீர்வை எதுவுமில்லாமல் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துப் பொருட்கள் மற்றும்
- தெரிந்தெடுக்கப்பட்ட பொருட்கள் என்பனவற்றை விடுவிப்பதற்கு அரசாங்கம் அனுமதித்தது.

01 சன.2005 - தெரிந்தெடுக்கப்பட்ட விடயங்களின் மீது 18 சதவீதம் கொண்ட புதிய பெறுமதிசேர் வரி விதிக்கப்பட்டது.
- வேளாண்மை விதைகள் மற்றும் மரக்கன்றுகள் முச்சில்லு வண்டிகளுக்கான குத்தகையிடல், பங்குச்சந்தைக் கொடுக்கல் வாங்கல்களுக்கான நிதியியல் பணிகள், விலைக்குறைவு, கிராமப் புறங்களுக்கான மின்னூட்டல் என்பன பெறுமதிசேர் வரியிலிருந்தும் விலக்குப்பெற்றன.
- இரத்தினக்கற்கள் மற்றும் தங்கம் என்பன 15 சதவீதமான பெறுமதிசேர் வரிக்கு உட்படுத்தப்பட்டன.
- இரத்தினக்கல், தங்கம் மற்றும் ஆபரணங்களின் விற்பனையிலிருந்து உழைக்கப்பட்ட வருமானத்தின் மீதான வரி விலக்கல்கள் நீக்கப்பட்டன. எனினும் தங்கம், இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஏற்றுமதிகளிலிருந்து உழைக்கப்பட்ட வருமானம் வருமான வரியிலிருந்து விலக்குப்பெற்றது.
- உள்நாட்டு அல்லது இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் எதனையும் விற்பனை செய்யும் மொத்த விற்பனை அல்லது சில்லறை வர்த்தகங்களுக்கு பொருளாதார பணிக்கட்டணம் 0.5 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது.
- எந்த ஒரு பயிர் வகையினையும் பயிரிடும் நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானம் அல்லது இலாபமும் பதனிடப்படாத உற்பத்திகள் போன்றவற்றின் விற்பனையும் வருமானங்களிலிருந்தும் விலக்கப்பட்டன.
- பதனிடப்பட்டு ஏற்றுமதி செய்வதற்காக இறக்குமதி செய்யப்படுவனவற்றின் மீதான துறைமுக வானூர்தி நிலையத் தீர்வை 0.5 சதவீதத்திலிருந்து 0.25 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டன.
- குதிரைப் பந்தய சூதாட்ட தீர்வை அதிகரிக்கப்பட்டது.

**சிறப்புக்குறிப்பு 5 (தொடர்ச்சி)**

- *1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க கலால் தீர்வை (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம், கலால் கட்டளைச் (அத்தியாயம் 52) சட்டம், சுங்கக் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 235) மற்றம் 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டம் (பிடித்துவைத்தல் வரி மற்றும் பங்கிலாப வரி நீங்கலாக என்பனவற்றின் கீழ் சேகரிக்கப்படத்தக்க வரிகள் மற்றம் தீர்வைகள் மீது 0.25 சதவீதம் கொண்ட சமூக பொறுப்பாண்மை தீர்வையொன்று விதிக்கப்பட்டது.*

08 பெப்.2005 - பின்வரும் மசோதாக்கள் நடாளுமன்றித்தினால் ஒப்புதலளிக்கப்பட்டன.
- நிதி மசோதா (2005 வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட வழிமுறைகளுக்கு சட்ட அந்தஸ்து அளிப்பதற்காக)
- குற்றப்பணத்தினை அதிகரிக்கும் மசோதா (நாட்டில் மிகப் பயனுள்ள முறையில் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக அரசின் கடப்பாட்டினைப் பெறும் விதத்தில்)
- பெறுமதிசேர் வரி (திருத்த) சட்டம் (2005 வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட வழிமுறைகளுக்கு சட்ட அந்தஸ்து வழங்குவதற்காக)

பெப்.2005 - வரி மீளளிப்பையும் மற்றும் இணங்கியொழுகல் வழக்குகள் உட்பட வரி நிவாரணத்துடன் தொடர்பான வழக்குகளை விரைவுபடுத்தும் நோக்கத்திற்காக கம்பளை, கண்டி, காலி மற்றும் அநுராதபுரம் ஆகிய இடங்களில் நான்கு பிரத்தியேக வரி நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.
- வரி மதிப்பீட்டாளர்களினால் அனுப்பப்பட்ட மதிப்பீடுகளுக்கு எதிராக வரி செலுத்துவோரால் செய்யப்பட்ட மனுக்களுக்கு தீர்வு காணும் பொருட்டு மேன்முறையீட்டு பிரிவு ஒன்று உள்நாட்டரசிறைத் திணைக்களத்தில் ஏற்படுத்தப்பட்டது.
- வரி ஏய்ப்போரின் தகவல்களைத் திரட்டி பகுப்பாய்வு செய்வதற்காக உள்நாட்டரசிறைத் திணைக்களத்தில் தகவல் நிலையமொன்று தொழிற்படத் தொடங்கியது. இதன் மூலம் கண்காணிப்பு பொறிமுறை வலுவடைந்தது.

01 ஏப்.2005 - தனியாள் வருமான வரி வீதம் பின்வருமாறு திருத்தப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (1) முதல் ரூ.300,000 | இல்லை | (2) அடுத்த ரூ.200,000 - | 5% |
| (3) அடுத்த 200,000 | 10% | (4) அடுத்த ரூ.200,000 - | 15% |
| (5) அடுத்த ரூ.200,000 - | 20% | (6) அடுத்த ரூ.200,000 - | 25% |
| (7) மீதி - | 30% | | |

- தொழில் முடிவுறுத்தலின் என்பதின்போது கிடைக்கும் நன்மைகள் மீதான வரி பின்வருமாறு திருத்தப்படுகிறது.
  - ஊழியர் சேம நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்ற தொழில் முடிவுறுத்தலின் போது கிடைக்கும் நன்மைகளுக்கு ஏற்புடைத்தான தற்போதைய ரூ.2 மில்லியன் விதிவிலக்கு 20 ஆண்டுகளுக்கு கூடுதலான காலப்பகுதிக்கான உதவு தொகைகளைக் கொண்டிருக்குமிடத்து மட்டுமே கிடைக்கத்தக்கதாக இருக்கும்.
  - உதவு தொகைக் காலம் 20 ஆண்டுகளுக்கு குறைவாக இருக்குமிடத்து ஏற்புடைத்தான விலக்கு ரூ.1 மில்லியனுக்கு மட்டுப்படுத்தப்படும்.
  - எஞ்சியை பின்வரும் சலுகை வீதங்களில் வரி விதிக்கப்படும்.

    (1) முதல் ரூ.500,000 = 5% (2) அடுத்த ரூ.500,000 = 10%
    (3) மீதி = 15%
- அனைத்து பங்குடமைகளினதும் பிரிக்கத்தக்க இலாபம் மற்றும் ஏனைய வருமானங்கள் மீது முன்கூட்டியே பெற்றுக்கொள்ளும் 10% வரி விதிக்கப்பட்டது.
- கம்பனி மற்றும் கம்பனி அல்லா துறைகளுக்கு ஏற்புடைத்தான பல்வேறு கழிவுகளின் மீதும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

**இனிவருவது** - சுதந்திரமான வரி ஆலாட்சி அதிகாரியின் நியமனம்

## அரச செலவினம்

01 சன.2004 - அரசாங்க ஊழியர்களுக்கு தற்போதைய சம்பளத்தில் 10 சதவீத அல்லது ரூ.1,250 இதில் எது கூடுதலோ அத்தொகையைக் கொண்ட மாதாந்த சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டது.

சன.2004 - ஓய்வூதியக் கொடுப்பனவுகள் 10 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டன.
வரட்சியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள குடியிருப்பாளர்களுக்கு நிவாரணத் தொகுதியொன்றிற்கு அரசாங்கம் ஒப்புதலளித்தது.

**சிறப்புக்குறிப்பு 5 (தொடர்ச்சி)**

| | | |
|---|---|---|
| பெப்.2004 | - | சுகாதாரத்துறையில் காணப்பட்ட சம்பள முரண்பாடுகளை அரசாங்கம் சரிசெய்தது. |
| 01 மே.2004 | - | அரசாங்கம் வளமாக்கி உதவுதொகையை மெற்றிக் தொன்னொன்றுக்கு ரூ.9000 இலிருந்து ரூ.15000 இற்கு அதிகரித்தது. |
| யூலை 2004 | - | தேசிய கொள்வனவு முகவராண்மை நிறுவப்பட்டது. |
| 02 ஒத்.2004 | - | அரசாங்கம் வளமாக்கி உதவுதொகையை மெற்றிக் தொன்னொன்றுக்கு ரூ.15,000 இலிருந்து ரூ.23, 000 இற்கு 02 ஒத்தோபர் 2004 இலிருந்து 31 திசெம்பர் 2004 வரைக்குமாக அதிகரித்தது. |
| திசெ.2004 | - | ஆகக் குறைந்தது மாதமொன்றிற்கு ரூ.3,250 மற்றும் ஆகக் கூடியது மாதமொன்றிற்கு ரூ.9,000 என்ற நிபந்தனைக்குட்பட்டு தற்போதைய அடிப்படை சம்பளத்தில் 40 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பு நடைமுறைப்படுத்தல் இரண்டு கட்டங்களில் இடம்பெறும். |
| | - | ஆகக் குறைந்தது மாதமொன்றிற்கு ரூ.750 மற்றும் ஆகக் கூடியது ரூ.1,500 என்ற நிபந்தனைக்குட்டு ஓய்வூதியம் பெறுவோருக்கு 15 சதவீத அதிகரிப்பொன்று வழங்கப்பட்டது. |
| 05 சன.2005 | - | பாதிக்கப்பட்ட மக்களின் வருமான எல்லைகளைக் கவனத்திற் கொள்ளாது சுனாமி அனர்த்தத்தின் காரணமாக இறந்த ஒவ்வொருவருக்கும் ரூ.15,000 இனை வழங்க அரசாங்கம் தீர்மானித்தது. |
| 11 சன.2005 | - | சுனாமி அனர்த்தத்தின் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பத்திலுள்ள ஒவ்வொரு ஆட்களுக்கும் வார மொன்றிற்கு ரூ.375 பெறுமதியான கூப்பனை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. |
| | - | சமயலறைப் பொருட்களை வாங்குவதற்காக சுனாமியினால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத் திற்கும் ரூ.2,500 இனை அரசாங்கம் வழங்கத் தொடங்கியது. |
| 17 சன.2005 | - | சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடக்கப்படியாக மக்கள் வங்கியினூடாக குடும்ப மொன்றிற்கு ரூ.5,000/- இனை அரசாங்கம் (ஒரு ஆளைக் கொண்ட குடும்பத்திற்கு ரூ.2,500) வழங்கத் தொடங்கியது. |
| ஏப்.2005 | - | சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் முழுமையாக சேதமடைந்த வீடுகளுக்கு ரூ.250,000 இனையும், ஓரளவிற்கு சேதமடைந்த வீடுகளுக்கு ரூ.100,000 இனையும் அரச வங்கிகளுக்கு ஊடாக வழங்குவ தற்கான அரசாங்கத்தின் நிகழ்ச்சித்திட்டம் தொடங்கப்பட்டது. |

## பொதுப்படுகடன்

| | | |
|---|---|---|
| 06 சன.2004 | - | பத்திரங்களற்ற பிணையங்களை வழங்குவதற்கும் வர்த்தகம் செய்வதற்கும் தற்போதுள்ள பத்திரங் களிலான பிணையங்களை இல்லாமல் செய்வதனையும் இயலச் செய்யும் விதத்தில் தற்போதைய சட்டவாக்கங்கள் திருத்தப்பட்டன. |
| | - | முதனிலை வணிகர்களினால் செய்யப்பட்ட பிணையங்களின் தம்வசம் இல்லாத பிணையங்களை விற்பனை செய்தல் (அவர்களின் சொத்துப்பட்டியலில் உண்மையில் வைத்திருக்காமல் பிணையங்களை விற்றல்) தடை செய்யப்பட்டுள்ளது. |
| 21 சன.2004 | - | கொழும்புப் பங்குச் சந்தையினால் படுகடன் பிணையங்கள் வர்த்தக முறைத் தொழிற்பாடுகள் தொடங்கப்பட்டன. |
| 30 சன.2004 | - | வெளிநின்ற பத்திரங்களிலான பிணையங்களை பத்திரங்களற்ற பிணையங்களாக மாற்றுவது தொடங்கப்பட்டது. |
| 03 பெப்.2004 | - | பத்திரங்களற்ற பிணையங்களின் தீர்ப்பனவு முறைத் தொழிற்பாடுகளும் அரச பிணையங்களுக்கான மத்திய வைப்பக முறையும் தொடங்கப்பட்டன. |
| 07 யூன் 2004 | - | கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்காக இல்லாத விலைகளைப் பயன்படுத்திக் கொள்வதனை (இல்லாத விலை என்பது கொடுக்கல் வாங்கல் நேரத்தில் சந்தையில் நிலவாத விலை) நிறுத்திக் |
| | - | கொள்ளுமாறு முதனிலை வணிகர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது. |
| 28 யூன் 2004 | | ஐ.அ.டொலர் 144.75 மில்லியன் தொகைகொண்ட இலங்கை அபிவிருத்தி முறிகள் வழங்கப்பட்டன. |
| 01 யூலை 2004 | - | முதனிலை வணிகர்கள், அவர்களது வரிக்குப் பிந்திய அவர்களது வருடாந்த இலாபத்தில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தினை (மூலதன அடிப்படையினைப் பொறுத்து 25 சதவீதம் மற்றும் 50 சதவீதம்) சிறப்பு இடர்நேர்வு ஒதுக்கிற்கு மாற்றல் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். |
| 15 யூலை 2004 | - | வெ.நா.வ தொழில் பிரிவிலிருந்து அரசாங்கம் கடன்பட்ட ஐ.அ.டொலர் 100 மில்லியன் மீண்டும் பயன்படுத்தப்பட்டது. |
| 12 ஓக.2004 | - | ஐ.அ.டொலர் 50 மில்லியன் கொண்ட இலங்கை அபிவிருத்தி முறிகள் வழங்கப்பட்டன. |
| 20 செத்.2004 | - | ஐ.அ.டொலர் 55.25 மில்லியன் கொண்ட இலங்கை அபிவிருத்தி முறிகள் வழங்கப்பட்டன. |
| 10 திசெ.2004 | - | திறைசேரி உண்டியலுக்கான பிரயோகிக்கத்தக்க நியதி சட்ட ரீதியான எல்லையை ரூ.50 பில்லியனால் ரூ.300 பில்லியனுக்கு அதிகரிக்க நாடாளுமன்றம் ஒப்புதலளித்தது. |

*சிறப்புக்குறிப்பு 5 (தொடர்ச்சி)*

*29 திசெ.2004* - பதிவு செய்யப்பட்ட பங்குகள் பிணையங்கள் கட்டளைச்சட்டம் மற்றும் உள்ளூர் திறைசேரி உண்டியல் கட்டளைச்சட்டம் என்பன திருத்தப்பட்டு புதிய வகைக் கணக்கொன்று அதாவது நம்பிக்கைக் கணக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

*மார்.2005* - ஐ.அ.டொலர் 135 மில்லியன் அரசினால் வெ.நா.வ.தொ.பிரிவுகளிலிருந்து கடனாகப் பெறப்பட்டது.

**இனிவருபவை**

- முதனிலை வணிகர்களுக்கான ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாட்டினை ரூ.200 மில்லியனிலிருந்து 350 மில்லியனுக்கு உயர்த்துதல்.
- மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களுக்காக பன்னாட்டு பிணையங்கள் சந்தை அமைப்பு மற்றும் பன்னாட்டு பரிமாற்ற மற்றும் பெறுமதிகள் அமைப்பு என்பனவற்றின் முதன்மை உடன்படிக்கையினைப் பின்பற்றுதல்.
- இடர்நேர்வு கண்காணிப்பினை வலுப்படுத்துவதற்காக முதனிலை வணிகக் கம்பனிகளில் கணக்காய்வுக் குழுக்களை நியமித்தல்
- வெளிநாட்டுப் படுகடனைப் பதிவு செய்வதற்காக பொதுநலவாய செயலக புதிய விளக்கம்- படுகடன் பதிவிடல் மற்றும் முகாமைத்துவ முறையினைப் (பொ.செ-ப.மு.2000+) பின்பற்றுதல்
- பொ.செ-ப.ப.மு.மு-2000+ இல் உள்ள உள்நாட்டுப் படுகடன் மீதான தரவுத் தளத்தினை உள்ளடக்குதல்

## நிதியியல் துறை

*01 சன.2004* - தனியொரு கடன்பாட்டாளருக்கான வரையறை கரைகடந்த வங்கித் தொழிலுக்கும் பிரயோகிக்கச் செய்யப்பட்டது.

- வங்கி மட்டும் என்பதன் அடிப்படையிலும் ஒன்று திரட்டியவை என்பதன் அடிப்படையிலும் (உதாரணம் வங்கி மற்றும் அனைத்துத் துணை நிறுவனங்களும் உள்பட) 5 சதவீதத்திற்கும் குறையாத அளவிலான மைய மூலதனத்துடன் கூடிய இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக, ஆகக் குறைந்த 10 சதவீதமான மூலதனப் போதுமை விசிதத்தினைப் பேண வேண்டுமென்ற தேவைப்பாடு அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மீதும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மீதும் விதிக்கப்பட்டது.

*06 சன.2004* - தனியொரு கடன்படுநர் மீதான வரையறை மற்றும் பங்குகளில் முதலீடு என்பனவற்றைக் கணிப்ப தற்கான அடிப்படை தொடர்பாக வங்கித் தொழிற்சட்டம் மற்றும் பணிப்புரைகளின் நோக்கங்களுக்காக மீட்கத்தக்க ஒன்று சேர்ந்த முன்னுரிமைப் பங்குகளின் பெறுகைகள் மூலதன நிதியத்தின் ஒரு பகுதியாக உள்ளடக்கப்படும் என்பது பற்றி அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கும் அறிவிக்கப்பட்டன.

*19 சன.2004* - மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க சுதந்திரமான கொடுகடன் தரமிடல் முகவராண்மையிடமிருந்து கொடுகடன் தரமிடலை 30 யூன் 2004 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும், 2004 யூலை தொடக்கம் வைப்புக்கள் மற்றும் ஏனைய படுகடன் பத்திரங்களைத் திரட்டுகின்ற அனைத்து விளம்பரங்களிலும் தரமிடலை வெளிப்படுத்த வேண்டுமெனவும் அனைத்து வர்த்தக வங்கிகளும் சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் கேட்டுக்கொள்ளப்பட்டன. வெளிநாட்டு வங்கிகளின் உள்நாட்டுக் கிளைகள் தமது தலைமை வங்கிகள் தரமிடல் பற்றி வெளியிட வேண்டும். தரமிடலைப் பெற்றுக் கொள்ளாத வங்கிகள் தாம் அத்தகைய தகவல்களைப் பெற்றுக் கொள்ளவில்லை என்பதை வெளிப்படுத்தல் வேண்டும்.

*27 ஏப்.2004* - கணக்காய்வு நிறுவனமொன்றின் பங்காளர் ஒருவர் பணிப்பாளராக அல்லது குறிப்பிடத்தக்க பங்குடைமைக் கொண்டுள்ள வங்கியின் அல்லது தொழில் முயற்சியுடனான வெளிக் கணக்காய்வுகளில் ஒப்புதல் பெற்ற வெளிக் கணக்காய்வாளர்கள் எந்தவொரு ஆலோசனையினையும் வழங்கவோ அல்லது மற்றைய கணக்காய்வு அல்லாத பணிகளை வழங்கவோ கூடாது எனக் கேட்டுக் கொள்ளப்பட்டனர். நிதியியல் ஆண்டு முடிவடைந்த ஐந்து மாதங்களுக்கிடையில் பிரசுரிக்கப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளுடன் சேர்த்து முகாமைத்துவ கடிதமொன்றையும் வங்கிக்குச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

*20 மே.2004* - 2004 மே தொடக்கம் ஒவ்வொரு மாதத்திற்கும் அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் மத்திய வங்கி மற்றும் பங்குடமையாளர்களுக்கான பொறுப்புக்கள் நீங்கலான மொத்தப் பொறுப்புக்களில் 20 சதவீதத்திற்குக் குறையாத தொகையொன்றினை நிதியத் திரவத் சொத்தாக அது உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவினைப் பொறுத்தவரை அது ரூபாவிலும் வெளிநாட்டு வங்கித் தொழில் பிரிவினைப் பொறுத்தவரை ஐக்கிய அமெரிக்க டொலரிலும் நியதி திரவச் சொத்துக்களாகப் பேணுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

*சிறப்புக்குறிப்பு 5 (தொடர்ச்சி)*

*13 யூலை 2004* – அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் மூலதனப் போதுமை விகிதத்தினைக் கணிப்பதற்காக முற்பணங்கள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகள் என்பனவற்றையும் நிலையான சொத்துக்களின் மீள மதிப்பீட்டையும் வெளிநின்ற சுதந்திரமான மதிப்பீட்டாளர்களிடமிருந்து தொழில்சார் மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டன. உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளைப் பொறுத்தமட்டில் ரூ.250,000 உம் அதற்குக் குறைவானதுமான கடன்களும் முற்பணங்களும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளைப் பொறுத்தமட்டில் ரூ.1 மில்லியன் அல்லது அதற்குக் குறைவானவை இத் தேவைப்பாட்டிலிருந்து விலக்கப்பட்டன. இரண்டு ஆண்டுகளுக்கும் மேற்படாத பழைய மதிப்பீடு என்று வரைவிலக்கணப்படுத்தப்படும் தற்போதைய உள்ளக மதிப்பீடுகள் வங்கியின் கொடுகடனுக்குப் பொறுப்பாக இருக்கும் உதவிப் பொது முகாமையாளரினால் அல்லது அத்தகைய மூத்த அலுவலரினால் கையாளப்பட்டிருக்க வேண்டும்.

*16 யூலை 2004* – இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அவற்றின் தனியொரு கடன்பாட்டாளர் வரையறையைக் கணிப்பதற்கான அடிப்படையாக முற்பணங்களைக் கருதும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவுகளையும், வெளிநாட்டு வங்கித் தொழில் பிரிவுகளையும் வெவ்வேறாகக் கருதும்படியும் இப்பிரிவுகளின் தனியொரு கடன்பாட்டாளரின் வரை யறையை தொடர்பான பிரிவுகளது கடன் வழங்கலில் 15 சதவீதத்தில் மட்டுப்படுத்தும்படியும் கேட்டுக் கொள்ளப்பட்டன.

– வெளிநாட்டு வங்கித் தொழில் பிரிவின் கடன் வழங்கலில் 15 சதவீதத்திற்கு மேற்பட்ட எந்தவொரு மிகையும் தலைமை அலுவலகத்தின் உத்தரவாதத்தின் மூலம் உத்தரவாதப்படுத்தப்பட்ட அல்லது பொறுப்பேற்கப்பட்டிருக்குமிடத்து ஐ.அ.டொ. நியதிகளில் உள்நாட்டு வங்கித் தொழில் அல்லது வெளிநாட்டு வங்கித் தொழில் பிரிவுகளின் ஒன்று திரட்டப்பட்ட கடன் வழங்கலில் 15 சதவீதங் கொண்ட தனியொரு கடன்பாட்டாளர் வரையறையொன்றை பிரயோகிக்கலாம்.

– ஒரே வங்கியின் உள்நாட்டு வங்கித் தொழில்பிரிவு மற்றும் வெளிநாட்டு வங்கித் தொழில்பிரிவு ஆகிய இரண்டிலுமிருந்து வாடிக்கையாளர் ஒருவர் வசதிகளைப் பயன்படுத்துமிடத்து, அத்தகைய வாடிக்கையாளர்களுக்கான இணைந்த வெளிப்படுத்துகை ஒன்றில் உள்நாட்டு வங்கித் தொழில்பிரிவின் அல்லது வெளிநாட்டு வங்கித் தொழில் பிரிவுகளின் மொத்தக் கடன் வழங்கலில் 15 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

– முற்பணங்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் தனிக் கடன்பாட்டாளர் வரையறையை தீர்மானிக்க விரும்பும் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் தனிக் கடன்பாட்டாளர் வரையறையை கணிப்பிடுவதற்கான அடிப்படையாக 2005 இலிருந்து வெளிக் கணக்காய்வு நிறுவனமொன்றினால் உறுதிப்படுத்தப்பட்டவாறு, முன்னைய ஆண்டின் மொத்தக் கடன்பாட்டின் மாதாந்தச் சராசரி இருக்கும்.

*11 ஒத்.2004* – ஐ.அ.டொலர்/இலங்கை ரூபாவில் வெளிநாட்டுச் செலாவணி பரிமாற்றம் பற்றி உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு மத்திய வங்கியால் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.

*22 ஒத்.2004* – இறக்குமதி அளவில் ஏற்படும் அதிகரிப்பினைக் கட்டுப்படுத்தும் தற்காலிக வழிமுறையொன்றாக முக்கியமாக தனிப்பட்ட பயன்பாட்டிற்கான உந்து ஊர்திகளின் இறக்குமதியின் பொருட்டு வர்த்தக வங்கிகளில் திறக்கப்படும் நாணயக் கடிதங்களுக்கெதிராக 100 சதவீத காசு வைப்பு தேவைப்பாட்டினை மத்திய வங்கி விதித்தது.

*11 நவெ.2004* – மத்திய வங்கியின் கொள்கை வீதங்கள் அதாவது மீள்கொள்வனவு வீதமும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதமும் 50 அடிப்படைப் புள்ளிகளினால் ஆண்டிற்கு முறையே 7.50 சதவீதத்திற்கும் 9.00 சதவீதத் திற்கும் அதிகரிக்கப்பட்டன.

*31 திசெ.2004* – குறிப்பிட்ட மாதமொன்றில் நான்கு (4) தடவைக்கு மேல் ஒரு கணக்கிலிருந்து எடுப்பனவு செய்யப்பட்டிருக்குமிடத்து குறிப்பிட்ட மாதத்திற்கு வட்டிக் கொடுப்பனவு செய்வதில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடு அகற்றப்பட்டது.

– மூலதனப்போதுமை விகிதம் மற்றும் தனியார் ஒருவருக்கான கடன்பாட்டு எல்லை என்பனவற்றைக் கணிப்பதில், ஏட்டுப்பெறுமதிக்குப் பதிலாக கப்பற்படுத்தல் உத்தரவாதங்கள் தொடர்பாக பொருள் பெறுகையின் கீழான பொருட்களின் பொருட்பட்டியல் பெறுமதியினையும் உள்ளடக்குவதற்கு அனுமதிக்கப்பட்டது.

– பிணைகளை விற்றுக் காசாக்கும்/ படுகடனின் பகுதித் தீர்ப்பனவு என்பனவற்றின் மூலம் கையேற்கப் பட்ட சொத்துக்கள் தொடர்பாக பின்வரும் கணக்கீட்டு நடைமுறைகளைப் பின்பற்றுமாறு வங்கிகள் அறிவுறுத்தப்பட்டன.

**சிறப்புக்குறிப்பு 5 (தொடர்ச்சி)**

(i) பிணையங்களை விற்றுக் காசாக்குதல்/ படுகடன்களின் பகுப்பாய்வுக்கான தீர்த்தல் என்பனவற்றின் மூலம் கையேற்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீடு முதலீட்டுச் சொத்துக்களாகவோ அல்லது வங்கியினது சொத்தின் ஒரு பகுதியாகவோ கணக்கிடப்படக் கூடாது என்பதுடன் அவை விளக்கக் குறிப்பு அடிப்படையில் பதிவு செய்யப்படுதலும் வேண்டும்.

(ii) அத்தகைய சொத்துக்கள் விற்று வங்கி அதற்கான பணத்தினை பெற்றுக்கொள்ளும் வரை தொடர்பான வசதிகள் வங்கியின் ஏடுகளில் பகுப்பாய்வு செய்யப்பட்டு வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

சன.2005 - சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு உதவியளிப்பதற்காக மத்திய வங்கி 'சுசகன' கடன்திட்டத்தினை தொடக்கியது.

01 பெப்.2005 - பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் சேமிப்பு வைப்புக்களை ஏற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டன.

- நிதிக் கம்பனிகளின் சேமிப்பு வைப்புக்களுக்கான வட்டி வீதங்களுக்கு உச்ச எல்லையொன்று விதிக்கப்பட்டது.
- பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் சேமிப்பு வைப்புக்களின் வெளிநின்ற பெறுமதியில் 20 சதவீதத்திற்கும் குறையாத தொகையினை திரவச் சொத்தாகப் பேணவேண்டுமென பணிக்கப்பட்டன.
- பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் திறைசேரி உண்டியல்களையும் மற்றைய பிணையங்களையும் ஒன்றில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமோ அல்லது முதனிலை வணிகர்களிடமோ கையளிக்கலாம். முன்னர் அவர்கள் அத்தகைய பிணையங்களை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடம் மட்டுமே கையளிக்க முடிந்தது.
- பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் விடுமுறை நாளாக பிரகடனப்படுத்தப்படாத திங்கள் முதல் வெள்ளி வரையான வாரத்தின் எந்த ஒரு நாளிலும் வியாபாரத்திற்கான அவர்களது அலுவலகங்களை மூடவேண்டுமாயின் அவை வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரின் ஒப்புதல் பெற்றுக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றன. இதற்குமுன் அவை இலங்கை மத்திய வங்கி ஆளுநரின் ஒப்புதல் பெற வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தன.

10 பெப்.2005 - 2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வங்கித் தொழில் (திருத்தம்) சட்டத்தின் நியதிகளில் பின்வரும் கொள்கை மாற்றங்களை அறிமுகப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

- இஸ்லாமிய வங்கித்தொழிலில் ஈடுபடுவதற்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளையும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் அனுமதித்தல்.
- மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்பட்டவாறு பணிப்பாளர்கள், முதன்மை நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் தொழிற்பாடுகளை மேற்கொள்கின்ற மற்றைய அலுவலர்களுக்கும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் என்பனவற்றின் முக்கிய பங்குடமையாளர்களுக்கும் தகுதி மற்றும் பொருத்தம் பற்றிய பிரமாணங்கள் பிரயோகிக்கப்படும்.
- மீட்கப்படாத படுகடன் கருவிகளின் உடமையாளர்களுக்கான பொறுப்புக்கள் இலங்கை அரசினால் வழங்கப்பட்ட அல்லது உத்தரவாதமளிக்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் அல்லது பிணையங்களுடன் தொடர்பான மீள்கொள்வனவு மீதான பொறுப்புக்கள் அல்லது நாணயச்சபையினால் நிர்ணயிக்கப்பட்டவாறான நியதி திரவச்சொத்து விகிதத்தின் பேணலுக்கான பொறுப்புத் தளத்திலிருந்தான அத்தகைய மற்றைய சொத்துக்களைக் கழிப்பதற்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு அனுமதியளித்தல்.

11 பெப்.2005 - பணிப்பாளர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய உறவினர்களுக்கான கடன்வழங்கலுக்கு ஏற்புடைத்தான வரையறை கொடுகடன் அட்டை மற்றும் ஏனைய கடன்களைப் பொறுத்தவரை ரூ.500,000 ஆக நிர்ணயிக்கப்பட்டது. (காசுக்கெதிராக கடன் வழங்கல்-வைப்பின் 90 சதவீதம்)

பெப்.2005 - முன்னோக்கிய விற்பனை உடன்படிக்கையின் கீழான நெல் மற்றும் ஏனைய பயிர்களின் கொள்வனவிற்கான கடன் எல்லை 25 மில்லியனிலிருந்து ரூ.50 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது.

07 மார்.2005 - வெளிநாட்டு வங்கிகளின் தனியொரு கடன்பாட்டாளர் வரையறையினைக் கணிப்பதற்கான அடிப்படை தற்போதைய அடிப்படையான கடன்வழங்கலின் 15 சதவீத அடிப்படையிலிருந்து மூலதன நிதியத்தின் 30 சதவீதத்திற்கு (எதிர்பாராப் பொறுப்புக்கள் உள்ளிட்ட மொத்த முற்பணங்கள்) உள்நாட்டில் கூட்டிணைக்கப்பட்ட வங்கிகளின் தனியொரு கடன்பாட்டாளருக்கான அதே அடிப்படைக்கு திருத்தப்படவுள்ளது. வெளிநாட்டு வங்கிகள் அவற்றின் தற்போதைய தனியொரு கடன்பாட்டாளர் வரையறையை பூர்த்தி செய்யப் போதுமான மூலதனத்தினைக் கொண்டிருக்காதவிடத்து மூலதனத்தில் காணப்படும் வீழ்ச்சியில் குறைந்தது 50 சதத்தினை 30.6.2005 அளவில் பூர்த்தி செய்யத்தக்கதாக இருக்குமிடத்து, அவர்களது மூலதனத்தினை அதிகரிப்பதற்கு 31.12.2005 வரை கால அவகாசம் வழங்கப்படும்.